பொ. வெங்கடசுப்பு -
P. Vencatasoobboo Moodelly

# அமரிக்காக்கண்டத்தைக்
கண்டுபிடித்ததைக்குறித்த

# சரித்திரம்.

---

இஃது,

பம்மல்

## விஜயரங்கமுதலியாரால்

இங்கிலீசிலிருந்துதமிழிற்செய்யப்பட்டு,

## தி. விசாகப்பெருமாளையரால்

பரிசோதிக்கப்பட்டது.

---


இதனை,

சென்னைநகர்

உபயுக்தகிரந்தகரணசபையார்

ஹிந்துஅச்சுக்கூடத்தில்

பதிப்பித்தனர்.

---

இரண்டாம்பதிப்பு

---

சென்னபட்டணம்

கலியுகாதி௵ - ௪௯௫௩ - ல் நிகழாநின்ற

பரீதாபி௵ 1852

---

விலை - அணா - ௧௦.

சென்னை நகர்

# உபயுக்தகிரந்தகரணசபை

---

அக்கிராசனாதிபதி

வன்பாக்கம் - சடகோபாசாரியார்.

உ - ம் - அக்கிராசனாதிபதி

பெத்தாம் - தீனதயாளுநாயகர்.

அததியக்ஷர்.

திருமங்கலம் - வேங்கடாசாரியார்,

பருத்திப்பட்டு - திருவேங்கடராமானுஜ நாயகர்,

லால்பேட்டை - வேங்கடேச நாயகர்,

நடுகுப்பம் - பார்த்தசாரதி நாயகர்,

எத்துல - அழகியசிங்கநாயகர்,

வன்பாக்கம் - ராஜகோபாலாசாரியார்,

குமளி - புருஷோத்தம முதலியார்,

பாலவாய் - ரங்கையநாயகர்,

பாக்கம் - ரங்கநாதமுதலியார்,

மஞ்சாகுப்பம் - சிவகுருபிள்ளை,

வேங்கவாசி - சேஷாசல நாயகர், (பொக்கசதாரர்)

பம்மல் - விஜயரங்கமுதலியார் (காரியதரிசி)

# முகவுரை.

இந்நூல் ராபர்ட்சன் என்பவரால் இங்கிலீசில் எழுதப்பட்ட அமரிக்காக்கண்டத்தின் சரித்திரத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டது. இஃது, சென்னபட்டணம் யூநிவர்சிட்டி என்னுஞ் சாஸ்திரக்கல்விச்சாலையில் இங்கிலீசு முதலியபாஷைகளைக் கற்குமாணாக்கரில், இங்கிலீசுபாஷையிலிருந்து யாதோருபயோகமான நூலைத் தமிழ்முதலிய பாஷைகளில் நன்றாக எழுதுவோர்க்கு அளிக்கப்படும்படி-கா, பச்சையப்பமுதலியாரவர்கள் தருமத்தை விசாரணைசெய்யுஞ் சபையாரால் ஷை சாஸ்திரக்கல்விச்சாலை அக்கிராசனாதிபதி அத்தியக்ஷர்களிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்தொகையின் விலைபெற்றபுஸ்தகங்களைப்பெறும்படி, இந்தவருஷாரம்பத்தில் என்னால் எழுதப்பட்டது. இதுவும், இக்காரணம்பற்றியே மற்றொருவரால் எழுதப்பட்டதும், பரீக்ஷகர்களால் அங்கிகரிக்கப்பட்டமையால், அவ்வருஷத்தில் அளிக்கப்படும் பொருள்தொகையின் விலைபெற்ற புஸ்தகங்களையும், போனவருஷத்தில் யாதொருவரும் பெறாமலிருந்தமையால் அவ்வருஷத்தில் அளிக்கப்படும் பொருள்தொகையின் விலைபெற்றபுஸ்தகங்களையும், யாங்களிருவரும் அச்சாலையின் அக்கிராசனாதிபதிஅத்தியக்ஷர்களால் அளிக்கப் பெற்றுக்கொண்டோம். இந்நூலை, என்னுடைய சனனதேசத்தாராகிய இத்தேசத்தார்கள்படிப்பதினால் அவர்களுக்கு அநேகநன்மைகளு

ண்டாகுமென்று கருதி, என்னுடைய இயற்றமிழ் ஆசிரியரும், ஷை சாஸ்திரக்கல்விச்சாலையின் தமிழ்த்தலைமைப்புலவருமாகிய திருத்தணிகை விசாகப்பெருமாளையரவர்களைக்கொண்டு, கடினசந்திகளின்றித் தமிழ்நடை அழகுபெறத்திருத்துதல் செய்வித்து அச்சிற்பதிப்பித்தேனேயல்லாமல, சிறிதும் பொருட்பயனை கருதிப் பதிப்பித்தேனல்லேன் இதனால்வருஞ் சிறிது ஊதியத்தையுஞ் சென்னபட்டணத்திலே தேசாபிவிருத்தியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கும் உபயுக்தகிரந்தகரணசபைக்கு அளித்துவிட்டனன்.

இந்நூற் பிரதிகளை வாங்கும்படி கையொப்பஞ்செய்த-ஸி-டாட்- ஆனரேபில்-தி-கவர்னர் அவர்களுக்கும், ஆனரேபில் எலலியட்டு துரையவர்களுக்கும், அன்றியும் யூரோப்பியர்களும் இந்துக்களுமாகிய அனேகபிரபுக்களுக்கும், சிலகல்விச்சபையார்களுக்கும், அனேக வந்தனங்களைச் செலுத்துகின்றேன் மேற்கூறியபடி என்னுடன் பாகமதிபெற்ற-ம-சிவகுருபிள்ளையவர்கள் யான் செய்தநூலை அச்சிற்பதிப்பிக்கும்படி செய்து தான் செய்தநூலை அச்சிற்பதிப்பியாமலிருந்ததற்காகயான் அனேகவந்தனங்களை அவருக்குச்செலுத்துகின்றேன்.

இந்நூலைப் பரிசோதிப்பதில்உண்டாயிருக்கும்வருத்தத்திற்கு உடன்பட்ட திருத்தணிகை விசாகப்பெருமாளையரவர்களையான் மனப்பூர்வமாகச்செய்கின்ற வந்தனங்களை அங்கீகரிக்கும்படிக்கேட்டுக்கொள்வது எனதுகடமையாகஇருக்கின்றது.

சென்னபட்டணம்<br>௧௮௫௨ ௵ டிசம்பர் ௴ } ப.விஜயரங்கமுதலி.

கடவுள் துணை.

# அமரிக்காக்கண்டத்தைக்கண்டுபிடித்

ததைக்குறித்த

# சரித்திரம்

ஜினோவா (Genoa) தேசத்தானாகிய கிருஷ்டபர்கொலம்பசு (Christopher Columbus) என்பவன், தௌர்ப்பாக்கியத்தால் தாரித்திரியதசையை யடைந்த வோருயர்ந்த வமிசத்திற் பிறந்தவனாக விருந்தானென்று தெரியவருகிறதேயன்றி, அவன்பிறந்தகாலமும் இடமும் சரியாகத்தெரியவில்லை. அவன்முன்னோர்கள், கப்பல்களின்மீதுபிறதேசங்களுக்குப் போய் வர்த்தகஞ் செய்வதினாற் சீவித்துக்கொண்டுவந்தார்கள். கொலம்பசுவின் தாய்தந்தையர்கள், அவனிடத்திற் சிறுவயதிலேதானே அத்தொழிலுக்குரியசெய்கைக ளிருக்கக்கண்டு, அத்தொழிலுக்கு வேண்டிய கல்வியை அவனுக்குக்கற்பிக்கத்தொடங்கி, அக்காலத்தில்சமஸ்தசாஸ்திரங்களுஞ் செய்யப்பெற்றிருந்த லாடடின் (Latin) பாஷையைக் கற்பித்து, பின்னர் அப்பாஷையி லுள்ள கணித பூகோள ககோள சாஸ்திரங்களைப் படிப்பித்து, படமெழுதும் வித்தையையும் வருவித்தார்கள். அந்நூல்களெல்லாம் மாலுமிசாஸ்திரத்தைத் தெரிந்துகொள்வதற்குக்கருவி நூல்களாயிருக்கின்றமையால், கொலம்பசு அந்நூல்களைச்சீக்கிரத்தில் அறிந்துகொண்டு, பதினான்காம் வயதிற்று

னே கப்பல் யாத்திரைசெய்யுந் தொழிலிற் பிரவேசித்து (கசசுக-ஆ) தன்தேசத்தார்கள் வர்த்தகநிமித்தம் போய்க் கொண்டிருந்த மெடிட்டரேனியன் (Mediterranean) சமுத்திரக்கரையிலுள்ள சிலபட்டணங்களுக்கு முதலிற்போனான். இவ்வளவிலே திர்ப்தியடையாமல், (கசஎஎ-ஆ) வடசமுத்திரமார்க்கமாக, இங்கிலாண்டுமுதலான தேசத்தார்கள் மச்சங்கள் பிடிப்பதற்காகப்போய்க்கொண்டிருந்த ஐசிலாண்டு (Iceland) என்னுந்தீவைச்சேர்ந்த சமுத்திரக்கரைகளிற்போய், அங்கிருந்து அதற்கப்புறஞ் சிலதூரம்வரையுஞ் சென்றான். இந்தயாத்திரையினால் அவனுக்கு அதிக திரவியலாபங் கிடையாமற் போனபோதிலும் மாலுமிசாஸ்திரத்தில் மிகுதியாகத்தேர்ந்தவனானான். இவ்வளவிலே திர்ப்தியைப்பொருந்தினவனாய், பின்பு, தனது சுற்றத்தானுந் தனபெயரைக்கொண்டிருப்பவனு மாகிய ஒரு கப்பற்காரனிடத்தில் உத்தியோகத்தில் அமர்ந்தான். அக்கப்பலதிகாரி, தன்சொந்தச்சிலகப்பல்களோடு புறப்பட்டுப்போய், தன்தேசத்தாரோடு வர்த்தகத்தைப்பற்றிப் பகைஞராயிருந்த துருக்கருடையகப்பல்களோடும்வெனிசு (Venice)தேசத்தாருடைய கப்பல்களோடும்போர்செய்து,அவைகளை அநேகவிசைகொள்ளைகொண்டதனால் அதிகதிரவியத்தையும் புகழையுமடைந்தான். கொலம்பசு அவனிடத்தில் அனேகவருஷஞ்சேவித்துக்கொண்டிருந்தான். அப்படி யிருக்கையி லொருநாள், லோகண்ட்ரீசு (Low Countries) என்னுந் தேசங்களிலிருந்து விலையுயர்ந்த சரக்குகளைக்கொண்டுபோகும் வெனிசு தேசத்தார் கப்பல்களோடு போர்ட்சுகல் (Portugal) தேசத்திற்கெதிரில் போர்செய்யும்போது, தானிருந்தகப்பலும் பகைவருடைய கப்பல்களி லொன்றும் பற்றிக் கொண்டன. அப்பொழுது, கிஞ்சித்தாயினும் அதைரியப்படாமல் சமுத்திரத்திற் குதித்து, அங்குமிதந்துகொண்டிருந்த படகுதள்ளுங் கோலொன்றைப்பற்றிக்கொண்டு, அதனுதவி

யினாலும் நீந்துவதிலே தனக்கிருந்த வல்லமையினாலும், அவ்விடத்திலிருந்து ஆறுமயிலுக்கதிக தூரத்திலிருந்த கரையிற்போய்ச்சேர்ந்தான்.

அங்கே சிறிது பொழுது இளைப்பாறி, பின்பு, தன் தேசத்தார்களில் அநேகர்போய்த்தங்கியிருந்த லிஸ்பன் (Lisbon) பட்டணத்திற்போய்ச்சேர்ந்தான். அவ்விடத்திலிருந்த அவன்தேசத்தார்கள், அவனுடையவல்லமையையும் புத்திகூர்மையையுங்கண்டு, அவன்அவ்விடத்திலிருப்பானேயானால் அதிககீர்த்திபிரதாபத்தைப் பெறத்தக்கவனாவானென்றெண்ணி, அவனையவ்விடத்திலேதானே யிருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அக்காலத்திலே போர்ட்சுகல் தேசத்தார்கள், நூதனமாகத் தீவுகள்முதலானவைகளைக் கண்டுபிடிப்பதில் அதிகப்புகழ்பெற்றவர்களா யிருந்தபடியால், கொலம்பசு, தான் அவ்விடத்திலிருந்தால் அந்தவிஷயத்தில் கீர்த்தி பிரதாபம் அடையலாமென்னு மெண்ணத்தாலும், நூதனமான தேசங்களைப்பார்க்க முயற்சிசெய்யலாமென்னும் விருப்பத்தாலும் தன் சிநேகர்கள்சொற்படி அத்தேசத்திலேதானேஇருக்க நிச்சயித்துக் கொண்டு, பர்த்தாலோமியு பிரேஸ்ட்ரெல்லோ (Bartholomew Perestrello) என்பவனுடைய குமாரத்தியை விவாகஞ்செய்துகொண்டான். பர்த்தாலோமியு பிரேஸ்ட்ரெல்லோ என்பவன், என்றி (Henry) யென்னு மிராஜகுமாரனிடத்திற்கப்பலதிகாரியாக விருந்து, போர்ட்டோஸான்ட்டோ, மெடீரா, (PortoSanto, Madeira) என்னு மிரண்டுதீவுகளையுங் கண்டுபிடித்து, அவைகளிற் குடியேற்றுதல்முதலியவைகளைச்செய்து, அந்த யாத்திரையைக்குறித்துச்சரித்திரபுஸ்தகமுமெழுதினான். அவனாலெழுதப்பட்ட அச்சரித்திர புஸ்தகத்தையும், சமுத்திரக்கரையோரங்களைக் குறித்தெழுதப்பட்டிருந்தபடங்களையும், கொலம்பசு தன்மனைவியின்மூலமாக அடைந்து, அவைகளைப்பார்த்துப்போர்ட்சு

கல் தேசத்தார்கள் நூதனமாகத்தீவுகள்முதலானவைகளைக்கண்டுபிடித்த முறைமைகளையும் ஏதுக்களையுந்தெரிந்துகொண்டான். தன்மாமனால் நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்டதேசங்களின் படங்களையும் அவைகளைக்குறித்து அவனெழுதப்பட்டிருப்பவைகளையும்பார்த்தபின்பு, கொலம்பசுவுக்கு அத்தேசங்களைப்பார்க்கவேண்டுமென்னுங் கருத்துண்டாயிற்று. உடனேகப்பலேறி, மெடீரா, கானெரீசு, (Canaries) அசோர்சு (Azores) என்னுந் தீவுகளுக்கும், ஆபிரிக்கா (Africa) கண்டத்தில் போர்ட்சுகல்தேசத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட கினீ (Guinea) முதலான தேசங்களுக்கும்போய், அவ்விடங்களிலுள்ளவர்களோடு அநேகவருஷம் வர்த்தகஞ்செய்துகொண்டு வந்தான்.

அக்காலத்திற் கப்பல்வழியாகப் போய்வந்துகொண்டிருந்த ஏறக்குறைய எல்லாத்தேசங்களுக்குங் கொலம்பசு போயினமையால், கப்பல்யாத்திரையில் மிகவல்லவனென்னும் பெயர்பெற்றான். கொலம்பசு இம்மட்டில் நில்லாமல், போர்ட்சுகல் தேசத்தாரால், முன்கண்டுபிடிக்கப்பட்டவையன்றி, மேலும் நூதனமான வழிகள் முதலானவைகளைக்கண்டு பிடிப்பதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகளில், முடிவுபெறுமற்போயினவைகளை முடிவுபெறச்செய்யவேண்டுமென்று விருப்பங்கொண்டான்.

ஈஷ்டிந்தீசு (East Indies) என்னும் தேசங்கள், செழிப்புள்ளவைகளென்றும், வாசனைத்திரவியங்கள்முதலான விலையுயர்ந்தஅநேகவஸ்துக்களுண்டாகுமிடமாயிருக்கின்றவையென்றும், நெடுநாளாக யூரோப்பு (Europe) கண்டத்தார் யாவரும் அறிந்திருந்தார்கள். இதுவுமன்றி, வெனிசு தேசத்தார்கள் அத்தேசத்தாரோடு வர்த்தகஞ்செய்ததனால் மிகுந்த ஐசுவரியமுள்ளவர்களானார்கள். ஆதலால், ஈஷ்டிந்தீசு தேசங்களுக்குச் சமுத்திரத்தின்மீது போவதற்கு ஒ

ரு வழியைக்கண்டுபிடிக்கவேண்டுமென்று யூரோப்புக் கண்டத்திலுள்ள எல்லாத்தேசத்தார்களும் விருப்பங்கொண்டிருந்தார்கள். போர்ட்சுகல்தேசத்தார்கள், வெர்ட்டு (Verde) என்னும் முனையைக்கடந்த நாள்முதல் அவ்வழியைக்கண்டுபிடிக்க வேண்டுமென்றே முக்கியக்கருத்துள்ளவர்களாய், நேராகத்தெற்குத்திசையைநோக்கிப்போய்ஆபிரிக்காக்கண்டத்தின் தென்முனையைக்கடந்துகிழக்குமுகமாகத்திரும்பிப்போனால், ஈஷ்டிந்தீசு என்னுந் தேசங்களைக் காணலாமென்று நினைத்து, அப்படிப்போவதற்குப்பற்பலமுயற்சிகளைச் செய்துகொண்டுவந்தார்கள். ஆயினும், அதுவரையில் ஒருவனும்அவ்வழியைக்கண்டுபிடித்ததில்லை. அவர்கள், தாங்கள் நினைத்தபடிவழியைக்கண்டுபிடிப்பார்களானால்,ஒருவனும் அவ்வழியாக அத்தேசங்களுக்குப்போகத்துணியமாட்டான். எதனாலென்றால்; அக்காலத்தில்ஆபிரிக்காக்கண்டத்தைச்சேர்ந்தநாந் (Non) என்னுமுனையிலிருந்து சமவரைமட்டும்போனவர்களுக்கு ஐம்பதுவருஷங்களுக் கதிகமாகவேகாலம்சென்றது; அவ்விடத்திலிருந்துஇந்தியா(India) தேசத்திற்குப்போக இன்னும் அதிக காலஞ்செல்லுமென்பதற்குச் சந்தேகமில்லை; ஆகையால் அவ்வழியாகப்போனால்இந்தியா தேசத்தைக்காணலாமென்பது நிச்சயமில்லாததாகவிருந்தது; அன்றி, அதுஅநேகஅபாயங்களுக்கிடமாகவுமிருந்தபடியால்யாவர்க்கும் அவ்வழியாகப்போவதுஅசாத்தியமாகவேயிருக்கும்;அதனால்ஒருவனும்அவ்வழியாகப்போகத்துணியமாட்டான். இவைகளைக்குறித்துக்கொலம்பசு ஆலோசனைசெய்து, ஈஷ்டிந்தீசுஎன்னுந் தேசங்களுக்குச் சுலபமாகவும் நேராகவும் போகுமார்க்கமொன்றிருக்கவேண்டுமென்று நினைத்து, பூமி சாஸ்திரத்திலே தனக்குண்டாயிருந்தஞானத்தைக்கொண்டும், கிரந்தகர்த்தர்களில் அநேகர் சொல்லியிருக்கிற முறைமைகளைக்கொண்டும், அட்லாண்டிக்கு (Atlantic) மகாசமுத்திரத்தில் நேராகமேற்குத்திசையா

கச்சென்றால் இந்தியா வென்னும் பெரிய கண்டத்தை நிச்சயமாகக் காணலாமென்று தீர்மானித்தான்.

இப்படி அவன் தீர்மானஞ்செய்ததற்கு அநேக ஏதுக்களுண்டு. அவை: அக்காலத்திலுள்ளவர்கள் பூமியானது கோளவடிவமாக விருக்கிறதென்றும் இவ்வளவு பரிமாணமுள்ளதென்றும் அறிந்திருந்தமையால், தங்களுக்குத்தெரிந்திருந்தயூரோப்பு, ஏஷியா, (Asia,) ஆபிரிக்காக்கண்டங்கள் பூமியில் மிகவுஞ் சிறிய பங்காக விருக்கின்றனவென்று நினைத்திருந்ததும்; மட்டில்லாத ஞானமுள்ள சிரிஷ்டிகர்த்தாவானவர் அத்தனைப்பெரிய மற்றப்பாக முழுமையுஞ் சலமாகவே சிருஷ்டித்திராராதலால், அப்பாகத்தில் மனிதர்வாசஞ்செய்யத்தக்க பூமிகளிருக்க வேண்டுமென்று நினைத்திருந்ததுமாம். அவ்வேதுக்களால் கொலம்பசு மற்றொருபக்கத்திலும் பூமிகளிருக்கவேண்டுமென்றுஎண்ணினான். இவ்வெண்ணத்தை உறுதிசெய்யத்தக்க சில ஏதுக்களுமுண்டாயிருந்தன. அவ்வேதுக்க ளென்னவென்றால்: அக்காலத்திற்கப்பல்யாத்திரைசெய்தவர்கள் போனதூரத்திலும் அதிகதூரம் மேற்குத்திசையிற்போன போர்டுகல்தேசத்தானாகிய மாலுமியொருவன், மனிதனால்வேலைசெய்யப்பட்டிருந்த மரத்துண்டொன்றைக் கண்டெடுத்து, இதுமேல் காற்றினாலேதள்ளப்பட்டுவந்தமையால் மேற்கிலுள்ளதேசங்களிலிருந்து வந்ததென்று நிச்சயித்தானென்பதும்; கொலம்பசுவின் மைத்துனன், மெடீரா தீவுகளுக்கு மேற்கிலுள்ள கடலில் அப்படிப்பட்ட ஒருமரத்துண்டைக் கண்டெடுத்ததுமன்றி, டாலெமி (Ptolemy) என்பவன் ஈஷ்டிந்தீசு தேசங்களில்மாத்திரமுண்டாகத்தக்கவையென்று தெரிவித்திருக்கும் பெரிய மூங்கில்களிற் சில அக்கடலில்மிதந்து கொண்டிருக்கும் போது பார்த்தானென்பதும்; இடைவிடாமல் மேல்காற்றடித்துக் கொண்டிருந்த சிலநாட்

களுக்குப்பின்பு அசோர்சு என்னுந்தீவுகளின் கடற்கரை யோரங்களிலே அடித்துக் கொண்டு வந்த வேரோடுகூடிய சிலமரங்களை அவ்விடங்களி லுள்ளசிலர் கண்டார்களென் பதுமாம்.

கொலம்பசு இவ்வேதுக்களால் மேற்கு மகாசமுத்திரத்திற் புதிய தேசங்களைக் கண்டுபிடிக்கலாமென்று எண்ணினதுமன்றி, வேறுசில ஏதுக்களால் அத்தேசங்கள் இந்தியாகண்டத்தைச்சேர்ந்திருக்கவேண்டுமென்று நிச்சயித்தான். முற்காலத்தில் யூரோப்புக்கண்டத்தார்களி லொருவனும் கங்காநதியைக்கடந்து அப்புறம்போகாமலிருந்தும், கிரீசு (Greece) தேசதுக்கிரந்தகர்த்தர்களிற் சிலர் கங்காநதிக்கப்புறம் மிகவும் விரிவானதேசங்க ளிருக்கின்றனவென்றெழுதியிருந்ததையும், டிசியசு (Ctesias) என்பவன் இந்தியா தேசமானது ஏஷியாகண்டத்தில் ஏறக்குறையப்பாதிப்பங்காக விருக்கின்றதென்று சொல்லியிருந்ததையும், நியார்க்கசு (Nearchus) என்பவன் இந்தியா தேசத்து ஓர் முனையிலிருந்து மற்றொரு முனைக்கு நேராகப் போவதற்கு மூன்றுமாதங்கள்செல்லுமென்று சொல்லியிருந்ததையும், யூரோப்புக்கண்டத்தார்களுள் கிழக்குத்திசையில் அதிகதூரஞ்சென்றவனாகியமார்கோபோலோ (Marco Polo)என்பவனெழுதியபுத்தகத்தில், காத்தே (Cathay) சைபாங்கோ (Cipango) என்னுந்தேசங்களையும் யூரோப்புக்கண்டத்தார்கள்எப்பொழுதுங்கேட்டறியாதவேறநேகதேசங்களையுங்குறித்தெழுதியிருந்ததையும், கொலம்பசுநன்றாய் ஆராய்ச்சிசெய்து, இந்தியாதேசமானது வெகுவிரிவானதென்று நிச்சயித்தான். மேலும்கொலம்பசு, பூமிஉருட்சியாகவிருப்பதினாலும்இந்தியா தேசம்விஸ்தாரமானதாகவிருப்பதினாலும்அதுஆபிரிக்காக்கண்டத்திற்குமேற்கேபுதிதாகக்கண்டுபிடிக்கப்பட்ட தீவுகளுக்கு மிகுஞ்சமீபத்திலிருக்கவேண்

னுமென்றும், மேற்குத் திசையில் நேராகப் போனால் இந்தியாதேசத்திற்கு அதிசீக்கிரத்தில் போகலாமென்றும், எண்ணினான். தானெண்ணிச்சொல்லியவை சரியென்றுசனங்கள்நம்பும்படி பூர்வகிரந்தகர்த்தர்களிற் சிலருடைய அபிப்பிராயங்களையுங் காண்பித்தான். எவைகளைக் காண்பித்தானென்றால்: அரிஸ்டாட்டில் (Aristotle) என்பவன், இந்தியாதேசமானது ஜிப்ரால்ட்டர் (Gibraltar) என்னும்ஜலசந்திக்குச்சமீபத்திலிருக்கலாமென்றும், அச்சலசந்தியிலிருந்துஇந்தியாவுக்குக் கப்பலின்மீதுபோவதற்குவழியொன்றிருக்கலாமென்றுஞ் சொல்லியிருந்ததையும்; செனிக்கா(Seneca) என்பவன், காற்றினுதவியிருக்குமாயின்மிகவுஞ்சிலநாளில் இஸ்பெயின் (Spain)தேசத்திலிருந்துகப்பல் மார்க்கமாகஇந்தியாதேசத்திற்குப் போகலாமென்றுசொல்லியிருந்ததையும்;பிளேட்டோ(Plato) என்பவன், அட்லாண்டிக்குமகாசமுத்திரத்தில் ஒருதீவுஇருக்கிறதென்றுசொல்லிஅதைக்குறித்து வெகுவாயுரைத்திருந்ததையும்; வேறுசிலர், அத்தீவானது மிகப்பெரியதாகவிருக்குமெனறும், அதற்கப்புறம் ஒருபெரியகண்டமிருக்குமென்றுங்கூறியிருந்ததையும்; எடுத்துக்காண்பித்தான். அவனும்அவைகளைக் குறித்துமிகுதியாகச்சிந்தித்து, தான் நிச்சயித்ததுசரியென்றுபூகோளமுதலிய சாஸ்திரங்களில் வல்லவர்களாக விருந்தவர்களைக்கொண்டு அறிந்துகொண்டான். பிளாரென்சு (Florence) என்னும் பட்டணத்தில் வாசஞ்செய்கின்றவனும், பூகோளசாஸ்திரத்தில் தேர்ந்தவனென்று பெயர்பெற்றவனுமிருந்த பால் (Paul) என்னும் வைத்தியனுக்குத்தன்னபிப்பிராயத்தைத் தெரிவித்தபோது (௧௪௭௪), அவன் சிலவேதுக்களையெடுத்துக்காட்டி, இவனபிப்பிராயஞ் சரியானதுதானென்று ஒத்துக்கொண்டதுமன்றி, நீஇவ்விஷயத்தில் உறுதியோடுமுயற்சிசெய்வையானால் அது உன் தேசத்திற்குப் புகழையுண்டாக்குகிறதுமன்றி, யூரோப்புக் கண்டத்தார்யா

வருக்கும் மிகுந்த நன்மையையும் பயனையுந் தருவதாகவிருக்குமென்று சொன்னான்.

இவ்விஷயத்தில் கொலம்பசு அறிந்திருக்கிறதுபோல் அறிந்திலாதவர்களிடத்தில் இதைக்குறித்துப்பேசினால், அவர்கள், இதுவீணானகாரியமென்றும்கேட்டவர்கள் நகைக்கத்தக்கவிஷயமென்றும் நினைப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இவன் அப்படி நினையாமல், அதையுடனேசெய்யத் தொடங்கவேண்டுமென்று விருப்பங்கொண்டான். அக்காரியத்தில் முயற்சி செய்வதற்குயூரோப்புக்கண்டத்திலுள்ள பெரியதேசங்களை ஆள்பவர்களுடைய உதவி வேண்டியிருந்தமையால், தன்சென்னதேசமாகிய ஜினோவாதேசத்தைவிட்டு நெடுநாளாக நீங்கியிருப்பினும்சுதேசாபிமானத்தை விட்டுநீங்கியிராமையால், தன்முயற்சியாலுண்டாகுங் கீர்த்தியையும் நன்மையையுந் தன்தேசத்தாரே யடையவேண்டுமென்றெண்ணி, தன் தேசத்திலுள்ள ஸினேட்டு (Senate) என்னும் அதிகாரிகளுக்குத் தன் கருத்தையும்அதுமுடிவு பெறத்தக்க ஏதுக்களையுந் தெரிவித்து, இக்காரியத்தைக்குறித்துவேண்டியவுதவிகளை நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். இவன்தன்தேசத்தைவிட்டுநெடுநாளாகநீங்கியிருந்தமையால், அத்தேசத்தார்கள் இவனுடையவல்லமையையுந் திறமையையும் அறியாதவர்களாய், இவனுடையஎண்ணம் வீணெண்ணமென்றுநினைத்து, இவன்சொல்பவைகளை ஒத்துக்கொள்ளாமல், இவனாலுண்டாகப்போகும் புகழையும் நலத்தையுமிழந்தனர்.

இவன்இதனாற் சற்றேனும் அதைரியப்படாமல், தனதுதேசத்திற்குச்செய்யவேண்டிய கடமையைச்செய்து விட்டேனென்று திர்ப்தியடைந்தவனாய், தான்நெடுநாளாகப்போர்ட்சுகல்தேசத்தில் வசித்திருந்ததைப்பற்றி அத்தேசத்து அரசனாகிய இரண்டாம்ஜான் (John II.) என்பவனு

க்குத்தன்கருத்தைத் தெரிவித்தான். அவ்வரசன்மாலுமிசாஸ்திரத்தில் மிகவல்லவனுகவும் புதியதேசங்களைக்கண்டு பிடிப்பவர்களுக்கு உதவிசெய்பவனுகவும்இருப்பதினுலும், அத்தேசத்தார் யூரோப்புக்கண்டத்திலுள்ள யாவரிலும்மாலுமிசாஸ்திரத்தில் மிகவல்லவரென்று பெயர்பெற்றவர்களாயும் நூதனமாயதொரு காரியத்தைச் செய்வதற்குத் தைரியமுள்ளவர்களாயும் - தன்வல்லமையும் யோக்கியதையும்நன்ருய்த் தெரிந்தவர்களாயு மிருப்பதினுலும், அவ்வரசனும் அவர்களுந்தனக்கு உதவிசெய்வார்களென் றெண்ணினுன். அவ்வரசன், இவன் சொன்னவைகளையெல்லாம் மிகுந்தசந்தோஷத்தோடு கேட்டு,உடனே பூகோளசாஸ்திரத்தில்வல்லவர்களான சியூட்டா(Ceuta)என்னும்பட்டணத்து (Bishop) பிஷப்பாகிய டீகோஆர்ட்டிசு (Diego Ortız)என்பவனுக்கும் இரண்டு (Jews) யூதர்களான வைத்தியர்களுக்கும்,இவ்விஷயத்தைக்குறித்து ஆலோசித்துத்தங்கள்கருத்தை அறிவிக்கும்படித்தெரிவித்தான். அவர்கள்,அவ்விஷயத்தைக்குறித்துக் கொலம்பசுவைப் பலகேள்விகள்கேட்டு அவன்சொல்லியவைகள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டு, போர்ட்சுகல்தேசத்தார்களிலே அக்காலத்திற்கப்பல்யாத்திரைசெய்பவர்களெல்லாரும் விசேஷமாகத்தங்களுடைய ஆலோசனையின்படியே செய்துகொண்டுவருகின்றதைப் பற்றியும், இந்தியாவுக்குப்போவதற்கு ஒருவழியைக்கண்டு பிடிப்பதைக்குறித்துக் கொலம்பசு சொன்னதற்கு விரோதமாகத்தாங்கள் முன்னர்சொல்லியிருந்ததைப்பற்றியும்,அவன் சொன்னமார்க்கத்தை ஒத்துக்கொண்டால் தாங்கள் சொல்லியிருந்தது வழுவாய் இவ்விஷயத்தில் தாங்களடைந்திருந்தகீர்த்திக்குக்குறைவு உண்டாகுமென்பதைப்பற்றியும், அதைக்குறித்து அவனுக்கு முடிவான தீர்ப்பொன்றுஞ்சொல்லாமல், இக்காரியத்திலே கொலம்பசுவுக்கு உண்டாகப்போகும் புகழையும் நன்மையையுந்தாங்களேயடை -

யவேண்டுமென்று எண்ணங்கொண்டு, அவனிடத்திற் கேட்டறிந்ததாக வெளிப்படுத்தாமல், அவன்சொன்னமார்க்கமாக ஓர் கப்பலை இரகசியமாக அனுப்பும்படி அரசனுக்குச் சொன்னார்கள். அவ்வரசனும், அவர்களுடைய துராலோசனைக்குச் செவிகொடுத்து அவர்கள் சொன்னபடியே ஒரு கப்பலையனுப்பினான் அக்கப்பல்மாலுமி, தைரியமற்றவனாகவும் புத்திகூர்மையில்லாதவனாகவும் இருந்தபடியால், எதிர்காற்றில் அகப்பட்டுச் சிலநாள்வரையுங் கரையைக்காணாமல்வருந்தி, இந்தப்பிரயத்தனம் வீணானதென்றும் அபாயத்திற்கிடமானதென்று மெண்ணிக்கொண்டு லிஸ்பன் பட்டணத்திற்கு மறுபடியும்வந்துவிட்டான்.

இந்தத்துரோகச்செய்கையைக் கொலம்பஸ் தெரிந்துகொண்டு மிகவு மனவருத்தமுற்றவனாய், அந்தக்கணமே போர்ச்சுகல் தேசத்தைவிட்டுக் கப்பலேறி, (௧௪௮௪)ம்-வருஷத்தின்முடிவில் இஸ்பெயின்தேசத்திற்போய்ச் சேர்ந்தான். அங்குச்சேர்ந்தபின்பு, காஷ்டீல் (Castile) ஆரகான் (Aragon) என்னும் இரண்டுதேசங்களை ஆண்டுகொண்டிருந்த பெர்டினாண்டு (Ferdinand) இசெபெல்லாள் (Isabella) என்பவர்களிடத்தில்தான் நேராகப் போய்,இந்தவிஷயத்தைக்குறித்துத்தனக்குதவிசெய்யும்படி கேட்டுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான். பின்பு, தன் சகோதரனாகிய பாத்தாலோமியு என்பவனுக்குத் தன்கருத்துமுழுவதையுந் தெரிவித்து, அந்நாளில் மிகுந்த புத்திமானாயும் அதிகதிரவியமுள்ளவனாயுமிருந்த இங்கிலாண்டு (England) தேசத்தரசனாகிய ஏழாம் என்றி என்பவனிடத்திற்போய், இந்தக்காரியத்தைக் குறித்து உதவிசெய்யும்படிகேட்க அத்தேசத்திற்குஅவனை அனுப்பினான்.

இஸ்பெயின் தேசத்திலேதானே தன்னெண்ணத்தை

நிறைவேற்றிக்கொள்ளலாமென்கிற நிச்சயம் அவனுக்கில்லாமல் இங்கிலாண்டுதேசத்திற்குத் தன்சகோதரனை யனுப்பினதற்குக் காரணமென்னெனின்: அக்காலத்திலே இஸ்பெயின் தேசத்தரசன், மூர்சு (Moors) என்னுஞ்சாதியாரைத்தன் தேசத்தினின்றுந் துரத்திவிடும்பொருட்டு அவர்களோடு பெரும்போர்செய்து கொண்டிருந்ததைப் பற்றியும்; அவ்வரசன், யுத்தத்திற் பிரவேசிப்பதிலே விருப்பமுடையவனாகவும், நூதனமான யாதொரு பெருங்காரியத்தைச் செய்வதில் விருப்ப மில்லாதவனாகவு மிருந்ததைப்பற்றியும்: தன் புருஷனிலும் அதிக உதாரத்துவத்தையுந் தைரியத்தையுமுடையவளாக விருந்த இசெபெல்லாளென்னும் ராணியும், எக்காரியத்தையுந் தன்புருஷனுத்தரவின்றிச் செய்யத்தொடங்காதவளாயிருந்ததைப் பற்றியும்; அத்தேசத்தார்கள், கப்பல்யாத்திரைசெய்வதினால் விருத்தியைப்பொருந்துவதற்கேற்ற முயற்சிசெய்வதிற்கிஞ்சித்தேனுங் கருத்தில்லாதவர்களாயும், தங்கள் தேசத்திற்கடுத்த தேசமாகிய போர்ட்சுகல் தேசத்தார்கள், நூதனமானதேசங்கள் முதலானவைகளைக் கண்டுபிடிப்பதைக் குறித்துச் செய்துவருகின்ற முயற்சியாற் பேரும்பெருமையும் அடைவதை அறிந்திருந்தும், அந்தவிஷயத்திலே கருத்தில்லாதவர்களாயு மிருப்பது மன்றி, அவர்கள் அப்பொழுது மூர்சுசாதியாருடன் செய்துகொண்டிருந்த யுத்தத்தினாலுண்டாகுங் கீர்த்தியே தங்களுக்குப்பெரிதானதென்கிறநோக்கத்தைக் கொண்டிருந்ததைப்பற்றியும்; தான் அவர்களால் உதவியையடைவது மிகவும் அருமையென்றெண்ணினதே அதற்குக் காரணமாம். ஆயினும், கொலம்பசு நற்குண நற்செய்கையுந்தெய்வபத்தியுமுடையவனாதலால், சீக்கிரத்தில் அவ்விடத்திலுள்ள அனேகரைச் சினேகராக்கிக்கொண்டு, அவர்கள்யாவரும் இவன்வஞ்சகனல்லனென்றும் உண்மையானகருத்துள்ளவனென்றும் நினைக்கும்படி நடந்துகொண்டுவந்தான்.

அக்காலத்திலே பெர்ட்டினண்டென்னும் அரசனும்இ செபெல்லாளென்னும் அரசியும் மூர்சுசாதியாருடன்போர்செய்வதிற் பிரவேசித்திருக்கினும் கொலம்பசு சொன்னவைகளுக்குச் செவிகொடுத்து, இராணியினுடைய குருவாகிய பெர்ட்டினண்டு - டி - டலாவிரா (Ferdinand de Talavera) என்பவனை அவன்சொல்லியவைகளைக்குறித்து நன்றாய் ஆராய்ச்சி செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். அக்குருவானவன், அவ்விஷயங்களில் மிகவல்லவர்களென்று பெயர்பெற்றிருந்த அனேகரைக் கூட்டிக்கொண்டு ஆராய்ச்சிசெய்யப் புகுந்தவிடத்து, அக்காலத்தில் இஸ்பெயின் தேசத்தார்சாஸ்திரவிஷயங்களில்தேறினவர்க ளல்லாதவர்களாயிருந்தமையால், அந்தக் கூட்டத்தார்கள் கொலம்பசு சொன்னவைகளைத்தெரிந்து கொள்ளுவதற்கே சக்தியில்லாதவர்களாக இருந்தார்கள். அவர்களிற்சிலா, பூகோளத்தின் பரிமாணத்தைச் சரியாக அறியாதவாகளா யிருந்தமையால், இந்தியாவுக்குக் கொலம்பசு சொல்லுமார்க்கமாகச்சென்றால் மூன்றுவருஷகாலம் செல்லுமெனறு சொன்னார்கள். வேறுசிலர் கொலம்பசு சொல்லு மார்க்கத்திலே சமுத்திரமானது அளவிறந்த விரிவானதாக இருக்குமென்றும், பூமிவட்டவடிவா யிருப்பதால் கொலம்பசு மேற்கு முகமாகச் சிலதூரத்திற் கப்புறம் போவானானால் திரும்பிவரக் கூடாமல் அவ்விடத்திலேதானே இறந்துவிடுவானென்றும், கடவுளாலே சம்மந்தமில்லாமல் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டிருக்கும் பூகோளத்தி னிரண்டுபாகங்களுக்குஞ் சம்பந்தத்தை யுண்டாக்க ஓர்மார்க்கத்தைத் தேடுவது வீணான பிரயத்தனமென்றுஞ் சொன்னார்கள். வேறுசிலர், எல்லாரிலும் மிகுந்த அறிவுள்ளவனென்று கொலம்பசுவை எண்ணுவது தப்பென்றும், அவன்சொல்லிய பிரகாரம் அச்சமுத்திரத்தில் தேசங்களிருக்குமாயின் அவைகள் இதுவரையிலும் ஒருவர் கண்களுக்கும் அகப்ப

டாமலிருக்குமாவென்றும், அதிக புத்தி மான்களாகியநம்முடைய முன்னோர்களாலே கண்டுபிடிக்கப்படாமலிருக்குந் தேசங்களை ஜினோவாதேசத்துமானுமியாகிய இவரு கண்டுபிடித்துப் புகழ்ச்சி அடையப்போகிறுனென்றுஞ் சொன்னார்கள். இப்படிப்பட்ட தப்பான அபிப்பிராயங்களை யுடையவர்களும், தங்கள் அபிப்பிராயங்கள் தப்பென்று ஒருவர் காண்பித்தால் அதை ஒத்துக்கொள்ள இஷ்டமில்லாதவர்களுமாகிய இவர்களுக்கு, தன்னுடைய கருத்தையும் எண்ணத்தையும் விளங்கும்படித் தெரிவிக்கவேண்டுமென்று, கொலம்பசு மிகவும் பொறுமையோடு ஐந்துவருஷ காலவரையிலும் பிரயத்தனஞ் செய்தும் முடிவு பெறாமற் போயின. முடிவில் டலாவிரா என்னுங் குருவானவன், கொலம்பசு சொன்னவைகள் முடிவுபெறத் தக்கவையல்லவென்று பெர்ட்டினண்டோடும் இசெபெல்லாளோடுஞ் சொல்லினன். பின்பு அவ்வரசனும் அரசியும், மூர்சுசாதியாருடன் செய்யும் யுத்தமானது முடிவுபெறாமல் யாதொருபெரியகாரியத்திலுமுயற்சி செய்யமாட்டோமென்று கொலம்பசுவுக்குச் சொல்லிவிட்டார்கள்.

**மி**குந்த வருத்தத்தோடு தான் செய்த பிரயத்தனங்களெல்லாம் முடிவுபெறாமல் வீணாயினவென்று மனதில் துயரமுண்டா யிருந்தபோதிலும் கொலம்பசு கிஞ்சித்தாவது அதைரியப்படாமல், இப்படித்தன்னை அலட்சியஞ் செய்தவர்களுக்கு முன்பாக எவ்விதத்திலாயினுந் தன்னெண்ணத்தை முடிவுபெறச் செய்யவேண்டுமென்னுங் கருத்தோடு, அத்தேசத்துக்குடிகளாயும் அதிகதிரவியமுள்ளவர்களாயு மிருந்த டியூக்-டீ- மெடீனா-சிடோனியா (Duke de Medina Sidonia) என்னும் பிரபுவினிடத்தும், டியூக்-டீ-மெடீனா சீலி (Duke de Medina Celi) என்னும்பிரபுவினிடத்தும்,தனித்தனிபோய் இதைக்கு

றித்துத்தனக்கு உதவிசெய்யும்படிகேட்டான். அவர்கள் இவன்சொன்ன விஷயத்தையுணர்ந்துகொள்வதற்குச் சக்தியில்லாதவர்களாயிருப்பதினாலோ, இவனுக்குதவிசெய்தால் அரசன்தங்கள்மீது கோபங் கொள்ளுவானென்பதினாலோ, இந்தவிஷயத்தில் தாங்கள் யாதோருதவியுஞ் செய்யமாட்டோமென்றார்கள்.

தான்பிரயத்தனஞ்செய்த விடங்களிலெல்லாந்தானெடுத்தகாரியத்திற்கு யாதோருதவியுங் கிடையாமற்போய்விட்டதினாலுண்டாகுந் துயரமொன்று இவனை வருத்திக்கொண்டிருந்ததுமன்றி, இங்கிலாண்டு தேசத்திற்குப்போனதன்சகோதரன் அதுவரையிலும் வராமலிருந்தது அதிகமாக வருத்திக்கொண்டிருந்தது இவனிங்கு இப்படியிருக்க, இவன் தம்பியாகியபார்த்தாலோமியு, இங்கிலாண்டு தேசத்திற்குப் போகும்போது வழியிற்கப்பற்றிருடர்களாலே பிடித்துக்கொள்ளப்பட்டு, தன்னிடத்திலுள்ளவைகள் அனைத்தும் பறித்துக்கொள்ளப்பட்டு, அனேகவருஷகாலம் வரையிலுங் காவலில் வைக்கப்பட்டிருந்தான். இப்படியிருக்கையில், அவர்களிடத்தினின்று தப்பி மிகுந்த தாரித்திரதசையொடு லண்டன் (London) பட்டணத்திற்போய்ச்சேர்ந்து, அவ்விடத்தில் அனேகநாள்வரையிலுந் தேசமுதலியவைகளைக்குறித்துப் படங்களெழுதிவிற்றுச் சீவனஞ்செய்து கொண்டிருந்ததுமன்றி இராஜசமுகத்திற்குப்போவதர்க்குத் தகுந்த ஆடைகளையுஞ் சம்பாதித்துக் கொண்டு, பின்னர் அரசனிடத்திற்போய்த் தான் வந்தகாரியத்தைககுறித்துப் பேசினான். அப்பொழுது அரசன் அதிககவலையுள்ளவனாயிருந்தாலும் கொலம்பசு விஷயத்தில் உதவிசெய்ய ஒத்துககொண்டான்.

இவனிங்கே இப்படியிருக்க, இஸ்பெயின் தேசத்திலிருக்குங் கொலம்பசு, தன் சகோதரனுடைய சமாசா

ரங்களொன்றுந் தெரியாமலிருப்பதால் தான் அவ்விடத்திற்குப்போனால் அதைத்தெரிந்து கொள்வதுமன்றி, அவ்வரசனிடத்தில் நேரிற்பேசினால் தனக்கு உதவிசெய்வானென்றும் எண்ணி, அவ்விடத்திற்குப்போக நிச்சயித்து, பிரயாணத்திற்கு வேண்டியவைகளையெல்லாஞ் சேர்த்து, தான் மறுபடி வருகிறவரையில் தன் பிள்ளைகளைப் பாதுகாக்கச் சிலரை ஏற்படுத்தினான். அப்படியிருக்கையில், பேலாசு (Palos) என்னும்பட்டணத்திற்கருகிலுள்ள தன்பிள்ளைகள் வாசித்துக்கொண்டிருந்த ரெபைடா (Rabida) என்னும்மடத்தின் அதிகாரியாகிய சுவான் பிரெசு (Juan Perez) என்பவன், கொலம்பசுவை நீர இன்னுஞ் சிலநாள்வரையும் இப்பிரயாணத்தை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். கற்றுணர்ந்தவனும்இசெபெல்லாளென்னும் அரசியின் சினேகனுமாகிய அந்தப்பிரெசு என்பவன், கொலம்பசுவின் வல்லமையையும் நற்குணநற்செய்கைகளையும் நன்றாய் அறிந்திருந்தமையால், அவன் சொல்பவைகளெல்லாவற்றையுந் தான் குடியிருக்குமிடத்திற்கு அருகிலிருந்த கணிதசாஸ்திரத்தில்வல்லவனாகிய ஒருவைத்தியனுடைய சகாயத்தினால்நன்றாய் ஆராய்ச்சிசெய்து, அவைகளெல்லாம் உண்மையானவைகளென்று அறிந்துகொண்டு, அவைகளினாலுண்டாகும் பிரயோசனத்தையுங் கீர்த்தியையுந் தன் தேசமே அடைய வேண்டுமென்கிற விருப்பமுடையவனாய், மறுபடியும் இவ்விஷயத்தைக்குறித்து ஆராய்ச்சிசெய்ய வேண்டுமென்று இசெபெல்லாளெனும் அரசிக்குக்கடிதமெழுதிக்கொண்டான்.

அப்பொழுது இசெபெல்லாளானவள், கிரானெடா (Granada) என்னும்பட்டணத்தைமுற்றுகைபோட்டிருந்ததைப்பற்றிச்சான்டா-பீ (Santa Fé) என்னுநகரத்திற்போயிருந்தமையால், அவ்விடத்திற்குப்பிரெசு என்பவ

ணைவரவழைத்துக் கொலம்பசு சொல்லும் விஷயத்தைக்குறித்துப்பேசினஉடனே, அவன்பிரயாணப்பட்டுப்போகும்படிச்சிறிதுபணமும்அவன்கையிற்கொடுத்ததுமன்றி அவனையுந் தன்னிடத்திற்கு அனுப்பச்சொன்னாள். இதனால்; கிரானெடாவென்னும் பட்டணத்தைப் பிடித்துக்கொண்டபின்னர் மூர்சு ஜாதியாருடன் செய்துகொண்டிருந்த போர்முடிவு பெறுமென்றும், அதுமுடிவு பெற்றவுடனே பெரிய காரியங்களைக்குறித்து முயற்சிசெய்ய யாதொரு தடையுமிராதென்றும், இராணியானவள் கொலம்பசுவின்விஷயத்தில் உதவிசெய்ய விருப்பங் கொண்டிருக்கிறாளென்றும் நினைத்து, அனேகர் அவனுக்கு உதவிசெய்யத் துணிந்தார்கள். அவர்களுள், காஷ்டீல் தேசத்துச்சமஸ்தானத்திற் பெரிய வுத்தியோகஸ்தனாயிருந்த அலான்சோ-டீ-குவிண்டானில்லா (Alonso de Quintanilla) என்பவனும், ஆரொகான் தேசத்தில் வைதிககாரியத்திலே பெரிய உத்தியோகஸ்தனாயிருந்த லூயி-டீ-சாண்டேஞ்சல் (Luis de Santangel) என்பவனுங்கொலம்பசுவின்மீது அன்புவைத்து, அவனை அனேகம்பிரபுக்களிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய தயையும் அவனுக்குக்கிடைக்கும்படி செய்வித்தார்கள்.

இராணியானவள் கொலம்பசு சொன்னவைகளையெல்லாம் அங்கீகாரஞ்செய்ய விருப்பமுள்ளவளாயிருக்கினும், பெர்ட்டினண்டென்னும் அரசன் அவையெல்லாம் வீணானவைகளென்றும் நகைப்புக்கிடமானவைகளென்றுமெண்ணி, பிறர் இவன்விஷயத்திற் செய்யும் பிரயத்தனங்களெல்லாம் அப்பிரயோசனமாய்ப்போகச்செய்யவேண்டுமென்றுகருத்துக்கொண்டு, அந்தவிஷயத்தைக் குறித்துமுன்னாராய்ச்சி செய்தவர்களிடத்தே மறுபடியும் அவனை அனுப்பினான். கொலம்பசு அவர்களிடத்திற்போய், அவர்கள்ஆச்சரியப்படத்தக்கதாக முன்சொன்னபடியே சொன்னான்.

எப்படியென்றால், புதிய தேசங்களைக் கண்டு பிடிப்பதற்குத்தன்னிஷ்டப்படி நடத்தச்சில கப்பல்களைத் தரவேண்டுமென்றும், தன்னால் புதிதாகக்கண்டு பிடிக்கப்படுஞ்சமுத்திரங்களிலுந் தேசங்களிலுஞ் செய்யப்படும் ஆளுகையுத்தியோகத்தைத் தனக்குந் தன்சந்ததியாருக்குமே அளிக்கவேண்டுமென்றும், அவைகளில் வருங் குடியிறைமுதலியவைகளில் பத்திலொருபங்கு பொருளைத் தனக்குந் தன் சந்ததியாருக்கும் எந்நாளுங் கொடுத்துக்கொண்டு வரவேண்டுமென்றும், அத்தேசங்களைப் பிடிக்கும்போதுகிடைக்கும்பயனில் எட்டிலொருபங்கு தனக்குக்கொடுக்க உடன்பட்டால் அதற்காகப்பிடிக்குஞ்செலவில் எட்டிலொருபங்கு பொருள்முன்னதாகத்தான் கொடுக்கிறேனென்றும், அவைகளைத் தான்கண்டுபிடியாமற்போனால் தான் கொடுத்தபணத்தை மறுபடியுந்தனக்குக்கொடுக்க வேண்டியதில்லையென்றுஞ் சொன்னான். கொலம்பசுவின்கருத்தெல்லாம், இவன்சொல்லிவந்த முறைமையால் உண்மையானவைகளென்று யாவரும் ஒத்துக்கொள்ளத்தக்கவையாயிருந்தும், அவர்கள் இவைகளை ஒத்துக்கொள்ளாமல், அரசனுடனே, இவன்சொல்லுகிறபிரகாரம் பணச்செலவுசெய்வது இஸ்பெயின்தேசமிப்போதிருக்கு நிலைமைக்குத்தக்கதன்றென்றும், இவன்சொன்னபடி செய்யுமுயற்சிகளெல்லாம் வீணாகப்போகுங்காலத்துக்கேட்பவர்கள் நம்மைநகைப்பார்களென்றுஞ்சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்னதை அரசன் ஒத்துக்கொண்டமையால், அரசியுங்கொலம்பசுவுக்கு உதவிசெய்யமாட்டேனென்றுசொல்லிவிட்டாள்.

பின்பு, அவ்வரசனும் அரசியும், தங்களால் முற்றுகை செய்யப்பட்டிருந்த கிரானெடா என்னும்பட்டணத்தை (கசகூஉ௵ ஜனவரி௴ உ௳) பிடித்துக்கொண்டு, மூர்சு ஜாதியாரைத்தங்கள் தேசத்தின் விசேஷித்த இடங்களினி

ன்றுந் துரத்திவிட்டு, பிரெனீசு (Pyrenees) என்னும் மலைகள் முதற்கொண்டு போர்ட்சுகல் தேசத்தெல்லைவரை யிலுமுள்ள நாடுகளைத்தங்கள் சுவாதீனமாக்கிக்கொண்டார் கள். இதுதான் நல்லசமயமென்று கொலம்பசுவுக்கு நட்பராயிருந்த குவிண்டானில்லா சாண்டேஞ்சல் என்ப வர்கள் எண்ணி, மிகவும் உதாரத்துவமுள்ள இசெபெல் லாளுக்கு, நீ கோலம்பசு விஷயத்தில் இதுவரையிலும் உதவிசெய்யாமலிருப்பது மிகவும் ஆச்சரியமானகாரியமா கத்தோன்றுகிறதென்றும், இவன் புத்திகூர்மையும் நன்ன டக்கையுமுள்ளவனுயிருப்பதுமன்றி மாலுமிசாஸ்திரத்தி லுங் கணிதசாஸ்திரத்திலும் வல்லவனாக இருப்பதினாலே பூ மியின்பாகங்களை நன்றாய் அறிந்துகொள்ளத்தக்கவனெ ன்றும், தன்பிராணனையுந்திரவியச்செலவையும் அலட்சிய மாக எண்ணி அப்படிப்பட்ட விஷயத்திற் பிறவேசிக்க இஷ்டங்கொண்டிருப்பதே இவன் அபிப்பிராயங்களெல் லாம் உண்மையாக இருக்குமென்பதற்கு அடையாளமாக இருக்கின்றனவென்றும், இவன் சொல்லுங் காரியத்திற்செ ல்லுஞ்செலவிலும் அதனாலுண்டாகும் பயன் அனேகம டங்கு அதிகமாக இருக்குமென்றும், அந்தக்காரியத்தில்தா ன்படும் வருத்தத்திற்காகத்தன்னால் இனிமேற் கண்டுபிடி க்கப்படுந்தேசமுதலியவைகளிலவரும் வரவில் சுவல்பபா கத்தைமாத்திரந்தனக்குக் கொடுக்கவேண்டுமென்று கே ட்கிறானென்றும், இவனால் நூதனமாகக்கண்டுபிடிக்கப்ப டுந்தேசங்கள் கிறீஸ்துமார்க்கத்தைப் பரவச்செய்வதற்கு இடங்களாயிருக்குமென்றும், இவனுக்கு உடனே உதவி செய்யாவிட்டால் இவனுடைய முயற்சியால் உண்டாகும் புகழும் நன்மையும் வேறுதேசத்து அரசனை அடையுமெ ன்றும், தெரிவித்தார்கள். இவைகளைக்கேட்டபின்னர், அர சியானவள் கொலம்பசு விஷயத்திலே தனக்குண்டாயிரு ந்தசந்தேகங்களினின்று நீங்கினவளாய், இங்கிலாண்டு தே

சத்திற்குப்போய்க்கொண்டிருந்த அவனைச் சீக்கிரத்தில் அழைத்துவரும்படி செய்கிறேனென்றும், அவன்வந்தபின்பு அவன் சொன்னவைகளெல்லாவற்றையும் அங்கீகரித்து அவைகளைக்குறித்துஅவனுக்கு வேண்டிய உதவிசெய்கிறேனென்றும், இப்பொழுது என்பொக்கஸத்திற் பணமில்லாமலிருப்பதினால் என்னுடைமைகளைஈடாகவைத்து வேண்டியபணத்தை வாங்கித்தருகிறேனென்றும், அவர்களுக்குச்சொன்னாள். இதைக்கேட்டவுடனே சாண்டேஞ்சல் என்பவன்மனமகிழ்ச்சியடைந்து, இராணியினுடைய கையைமுத்தமிட்டு, அவளைநோக்கி, நகைகளை ஈடுவைக்க வேண்டியதில்லை; நானே அந்தக்காரியத்திற்காக வேண்டியபணத்தை முன்னர்க்கொடுக்கிறேனென்று சொல்லினான்.

இங்கிலாண்டு தேசத்திற்குப் போய்க்கொண்டிருந்த கொலம்பசு, இசெபெல்லாளிடத்திலிருந்து தன்னைஅழைக்கவந்தமனிதனைக்கண்டவளவில் தன்மனதில் அதிக ஆனந்தமுண்டாயினும், அவள்அக்காரியத்தை நிறைவேற்றுவாளென்பதிற்பூரண நம்பிக்கைகொள்ளவில்லை. ஆயினுந்தன்பிரயாணத்தைநிறுத்திச் சாண்டா-பீ என்னுநகரத்திற்போய்இராணியைக்கண்டான். கண்டபின்பு, அவ்வரசியினிடத்திலேதான்பெற்றமரியாதையினாலும், தன்கருத்துச்சீக்கிரத்திலே நிறைவேறுமென்கிறநிச்சயத்தினாலும் ஏறக்குறைய எட்டுவருஷமாக அத்தேசத்திற்பட்ட வருத்தங்களையெல்லாம் மறந்துவிட்டான். பின்பு, கொலம்பசுவும் இசெபெல்லாளும் அவ்விஷயத்திலே தாங்கள்நடந்துகொள்ளவேண்டியவைகளைக்குறித்து உடன்படிக்கை எழுதிக்கொண்டு (கசசுஉ ஹ ஏப்பிரல்மீ-களஉ) கையொப்பஞ்செய்துகொண்டனர். அவ்வுடன்படிக்கையிற்கண்டிருக்கும்விசேஷித்த காரியங்களென்னவென்றால்: (க-து), சமுத்திரங்களையும் ஆள்பவர்களாகியபெர்ட்டினண்டு இசெபெல்லாளென்பவர்க

ளாலேகொலம்பசுவுக்கு அவனுடையமுயற்சியினாலேகண்டுபிடிக்கப்படும் புதியசமுத்திரங்கள் தீவுகள் கண்டங்கள் இவைகளனைத்திற்கும் ஐ-அட்மிரால்(High Admiral) என்னுஞ்சமுத்திரத்தின்மீது ஆளுகைசெய்யும்உத்தியோகங் கொடுக்கப்பட்டதென்பதும், காஷ்டீல்தேசத்துஐ- அட்மிராலுக்கு எப்படிப்பட்ட அதிகாரங்களுஞ் சுதந்தரங்களுமுண்டோ அப்படிப் பட்ட அதிகாரங் களையுஞ் சுதந்தரங்களையும் கொலம்பசுவும் அவன் சந்ததியாரும் எப்பொழுதும் அடையக் கடவர்களென்பதுமாம்; (௨-து), அவனாலே கண்டு பிடிக்கப் படுந் தீவு களிலுங் கண்டங்களிலும் அரசனுக்கும் அரசிக்கும் பதிலாக இருந்து செலுத்தப் படும் அதிகாரம் அவனுக்கும் அவன் சந்ததி யாருக்கும் அளிக்கப் பட்ட தென்பதும், அவனோடுகூடவேறொருஅதிகாரியை ஏற்படுத்தவேண்டியதுஅவசியமாயிருக்குமாயின் அவனாலே குறிக்கப்பட்ட மூவரில்ஒருவன் நியமிக்கப்பட வேண்டு மென்பதுமாம்; (௩-து), கொலம்பசுவுக்கும்அவனுக்குப்பிற்காலத்தில் அவன் சந்ததியாருக்கும் அவனாலே கண்டுபிடிக்கப்படுந்தேசங்களிலே குடியிறைகளில் வரும்பணத்திலுந் துரைத்தனத்தார்செய்யும் வர்த்தகத்தில்வரும் இலாபத்திலும் பத்திலொருபங்கு எப்போதுங் கொடுக்கப்பட்டு வரக்கடவதென்பதாம்; (௪-து), அவனாலே கண்டு பிடிக்கப்படுந் தேசங்களில்வர்த்தகத்தைக்குறித்து எப்படிப்பட்ட வழக்கு உண்டானபோதிலும், அவைகளெல்லாங் கொலம்பசுவினாலாவது, அவனாலே நியமிக்கப்பட்டநியாயாதிபதிகளாலாவது, தீர்ப்புச் செய்யப்பட வேண்டு மென்பதாம்; (௫-து), இந்தப் பிரயாணத்தைக்குறித்தும் புதிய தேசங்களைக்கண்டுபிடித்தவுடனே அவைகளிலேசெய்யப்படும் வர்த்தகத்தைக்குறித்தும் வேண்டிய பொருளில் எட்டிலொருபங்கு பொருள்கொலம்பசுவினால் முன்னதாகக்கொடுக்கப்படவேண்

டுமென்பதும், இவைகளாலுண்டாகும்பயனிலே கொலம்பசுஎட்டிலொருபங்கை அடையக்கடவனென்பதுமாம்; இவைகள்தாம் அந்த உடன்படிக்கையிலெழுதப்பட்டவிசேஷித்தகாரியங்கள்.

இவ்வுடன்படிக்கையில், பெர்ட்டினண்டென்னும் அரசன்பெயரும் இசெபெல்லாளென்னும் அரசியின்பெயரும் எழுதப்பட்டிருந்தாலும், அந்த அரசன் கொலம்பசுவினிடத்தில் நம்பிக்கை அற்றவனாயிருந்து தன் சொந்த தேசமாகிய ஆரொகான் தேசத்தின் அரசாட்சியைப்பற்றி இந்தவிஷயத்திலே சம்பந்தப்படமாட்டேனென்று சொல்லிவிட்டமையாலும், இப்பிரயாணச்செலவு முழுவதுங் காஸ்டீல் தேசத்து இராணியாகிய இசெபெல்லாளே கொடுத்தமையாலும், அந்தயாத்திரையினாலுண்டாகிய பயன் காஸ்டீல் தேசத்தையே சேரவேண்டியதாயிற்று.

மேற்சொன்னஉடன்படிக்கையிலே கையெழுத்தானபின்பு, இசெபெல்லாள் தான்செய்யவேண்டியவைகளெல்லாவற்றையும் (மேமீ௳உவ) க்குள்ளாகச்செய்துவிட்டாள். உடனே கொலம்பசு அரசனிடத்திலும்இராணியினிடத்திலுஞ் செலவுபெற்றுக்கொள்ளப்போனபொழுது, அவர்கள் அவனைநோக்கி, நீ செய்யும் யாத்திரையின் விஷயத்தில் யாவையும் உன் எதேச்சைப்படி நடத்தக்கடவாயென்றும், போர்ட்சுகல் தேசத்தரசனுடைய பகை நமக்கு உண்டாகாமலிருக்கும்நிமித்தம், கினி என்னுஞ் சமுத்திரக்கரையிலிருக்கும் அவன்தேசங்களுக்கு அருகிலும் அத்தேசத்தாராலே புதிதாகக்கண்டுபிடிக்கப்பட்ட இதரதேசங்களுக்கு அருகிலும் போகவேண்டாமென்றும், சொல்லினார்கள் பின்பு இசெபெல்லாள், இப்பிரயாணத்திற்குவேண்டியகப்பல்களை, அண்டெலூசியா (Andalusia) என்னும்பிரிவின் சமுத்திரக்கரையிலிராநின்ற பேலாசு (Palos) என்

றுப்பட்டணத்தருகிலே சித்தஞ்செய்துகொள்ளும்படி உத்தரவுசெய்தாள். கொலம்பசு, அப்பட்டணத்தின் அருகிலிருக்குந் தனக்கு மிகுந்த உபகாரியாகிய பிரோசு என்பவன் மூலமாகவும், தன்னை நன்றாக அறிந்திருந்த அப்பட்டணத்திலவாழும் அநேகர் மூலமாகவும், தான் முன்னதாகக்கொடுக்கும்படி அந்த உடன்படிக்கையிலெழுதப்பட்டிருக்கிற எட்டிலொருபங்கு பணத்தைச்சேர்த்துக்கொண்டதுமல்லாமல், தன்னுடன் வரும்படியாயச்சிலரைச் சித்தப்படுத்திக்கொண்டான். அவனுடன்வர ஒத்துக்கொண்டவர்களிலே மிகுந்த செல்வமும் கப்பல்யாத்திரைசெய்வதில் அதிக திறமும் உடையவர்களாயும், பின்சன் (Pinzon) என்னும் நாமமுடையவர்களாயும்,இருக்கின்ற சகோதரர்களாயுள்ள மூவர் விசேஷித்தவர்களாக இருந்தார்கள்.

இசெபெல்லாளுங் கொலம்பசுவுஞ் செய்த முயற்சியின் அளவிற்கும்,இஸ்பெயின் தேசத்தின் கனத்திற்கும், இந்தயாத்திரையின் அருமைக்கும் தகுந்தவைகளாகக்கப்பல்கள் சித்தப்படவில்லை. இந்த விசேஷித்த யாத்திரைக்காக மூன்று கப்பல்கள்மாத்திரஞ் சித்தப்பட்டன. அம்மூன்றிலே பெரிய கப்பலானது அதிகபாரத்தைத்தாங்கத்தக்கதுமன்று. கொலம்பசு, கிறீஸ்துவின் தாயாகிய மரியாளிடத்துப் பத்தியுள்ளவனாயிருந்தமையால், அக்கப்பலுக்கு சாண்டா மரியாள் (Santa Maria) என்றுபெயரிட்டு, அதற்குத்தானே அதிகாரியாயினான். மற்றைய இரண்டு கப்பல்களில் பிண்டா (Pinta) என்னும்பெயர்கொண்ட கப்பலுக்கு மார்ட்டின் பின்சன் (Martin Pinzon) என்பவனை அதிகாரியாகவும், பிரான்சிசு பின்சன் (Francis Pinzon) என்பவனை மாலுமியாகவும்ஏற்படுத்தினான். நிஞ்ஞா (Nigna) என்னும் பெயரையுடைய கப்பலுக்கு வின்செண்டு யானெசு பின்சன் (Vin-

**cent Yanez Pinzon** ) என்பவனை அதிகாரியாக நியமித்தான். இவ்விரண்டு கப்பல்களும், மிகவும் இலேசானவைகளாயும் பெரியபடகுகளை ஒத்தவைகளாயும் இருந்தன. இம்மூன்றுகப்பல்களிலும் ஏறுவோர்கள், கப்பல்வேலைக்காரர்களும், இந்தயாத்திரையின்பயனைத்தெரிந்துகொள்ளும்படி புறப்பட்டவர்களும், இசெபெல்லாளினால் அனுப்பப்பட்டவர்களும், ஆகத்தொண்ணூறு மனிதர்களாம். இவைகளிலேற்றப்படும் உணவு முதலியவற்றிற்குரியசாமான்கள் இவர்களுக்கு ஒருவருஷத்திற்குவேண்டியவைகளாம். அதிகச்செலவு செல்லுமென்று நெடுநாளாகத் தடைப்பட்டிருந்த இந்தயாத்திரைக்கு இப்போழுது சித்தஞ் செய்யப்பட்டவையெல்லாம் நாலாயிரம் ரூபாய்களுக்குட்பட்டவையாம். அக்காலத்திலே இருந்த கப்பல்கள், திறமாகச் செய்யப்பட்டவைகளல்லாதவைகளாயும் கரையோரங்களில் மாத்திரஞ் சஞ்சரிக்கத்தக்கவைகளாயும் இருந்தமையால், தூரப்பிரயாணங்களுக்கு உதவாதவைகளாக இருந்தன. அப்படிப்பட்ட கப்பல்களைக்கொண்டு, முன்னொருபோதும் போயிராமையால் நீரோற்றவற்றங்களும் நீரோட்டமும் அபாயமான இடங்களும் இங்கிங்கேயென்று தெரியப்பெறுமலிருக்கின்ற சமுத்திரங்களிலே போகத்துணிந்ததற்குக்காரணம், கொலம்பசுவினுடையதைரியமும்பராக்கிரமமுமேயாம். கொலம்பசு, தான் நெடுநாளாகக்கொண்டிருந்த கருத்தை நிறைவேற்றவேண்டுமென்கிற அவாவினால், இசெபெல்லாளினால் குறிக்கப்பட்ட மனிதர்களின்வழியாகப் பிரயாணத்திற்குவேண்டிய எல்லாவற்றையுஞ்சீக்கிரத்திலே சித்தஞ் செய்துகொண்டான். கொலம்பசு மிகுந்த தெய்வபத்தியுள்ளவனானமையால், தன்னுடன் வரப்போகிறவர்களெல்லாரையும் ரொபைடா என்னு மடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அவ்விடத்திலே தன் மதத்திற்குரிய

சில சடங்குகள் செய்து, தான் நெடுநாளாகக் கருதிக் கொண்டிருந்த இந்தயாத்திரை இப்பொழுது போகும்படி வாய்த்ததைக்குறித்தும், அந்தயாத்திரையின் சம்பந்தமான காரியங்களெல்லாம் நிறைவேறவேண்டுமென்பதைக்குறித்தும், பைரங்கமாகத் தேவனைப் பிரார்த்தித்தான்.

அதற்கு மறுநாளாகிய (௧௪௯௨ வரு ஆகஸ்டு மீ ௩உ) வெள்ளிக்கிழமையினன்று சூரியோதயத்திற்கு முன், அனேகர் இந்தயாத்திரை பயன்படவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கக் கப்பலேறிப் [illegible] ா கச்சென்று, கானெரித்தீவுகளுக்கு [illegible] ௯உ) போயினன். இந்தச்சிறிதுதூரம் [illegible] குள்ளே சில இடையூறுகள் நேரிட்டன. தான் புறப்பட்டமறுநாள், பிண்டாவென்னுங்கப்பலின் சுக்கான் ஒடிந்துவிட்டது. அப்பொழுது, கூடவந்தவர்களெல்லாருங் கொலம்பசுவின் நோக்கம் நிறைவேறாதென்பதற்கு இதுஒரசகுனமாயிருக்கிறதென்று நினைத்துப்பயந்தார்கள் இதுவுமன்றி அத்தீவுகளுக்குப்போகிறதற்குள்ளாக அக்கப்பல்களிலே பல இடங்களில் ஒட்டைகளுண்டாகும்படி தொடங்கினமையால் அவைகள் அதிகதூரம்போவதற்கு உதவாதவைகளாகத் தோன்றின. கொலம்பசு அவைகளைத் தன்னாற்கூடிய மட்டுஞ் செப்பஞ்செய்துகொண்டு, அந்தக்கானெரித்தீவுகளின்மேற்கிலுள்ள கொமீரா (Gomera) என்னுந்தீவிலே சிலநாள் தங்கியிருந்து (செப்டம்பர் மீ ௬உ) நேர்மேற்காகக்கப்பல்களை நடத்திக்கொண்டுபோயினன்.

அங்கிருந்து புறப்பட்டமுதனாள் காற்றில்லாமையால் அதிகதூரம்போகவில்லை. இரண்டாநாள் கானெரித்தீவுகள் கண்ணிற்குத்தோன்றாத தூரம் போயினன். அதனால், கப்பல்வேலைக்காரர்களில் அனேகர் இப்பிரயாணத்தை

க்குறித்து மிகப்பயந்து மார்பிலடித்துக்கொண்டு அழு
தார்கள். அப்பொழுது கொலம்பசு, தான் போகுங்கா
ரியம் நிச்சயமாக நிறைவேறத்தக்கதென்றும், அந்தப்பு
தியதேசங்களுக்குப்போனால் அதிகதிரவியங்கிடைக்குமெ
ன்றும், அவர்களுக்குச்சமாதானஞ்சொன்னான். இவ்வளவு
சீக்கிரத்திலேதானே தன்னுடன்வருகிறவர்கள் அதைரியப்
படுவதைக்கண்டு, இந்த யாத்திரையிலுண்டாகும் இடையூ
றுகளினின்று நீங்குமுபாயங்களைத் தேடுவதுமன்றி இவ
ர்களுடைய அறியாமையாலுண்டாகும் வருத்தங்களினி
ன [illegible] ங்களையுந் தேடவேண்டுமென்றும் எ
ண்ணு [illegible] பசுவினிடத்தில் மிகவுங் கூர்மையா
னபுத்தியுள [illegible] துமன்றி இப்படிப்பட்ட சமயங்
களில் எவரெவர்களுக்கு எவ்வெவ்விதமாக நடந்துகொள்
ளவேண்டுமோ அப்படியெல்லாம் நடந்துகொள்ளத்தக்
கவல்லமையும் உண்டாயிருக்குதல், இவனைஅனுப்பிய இ
ஸ்பெயின் தேசத்தாருக்கும் இன்னும் இதரதேசத்தாருக்
கும் மிகுந்த நன்மையைத்தருவதாய் இருந்தது. அவன்
இத்தன்மையான குணங்களையுடையவனாக இருந்ததுமன்
றி மாலுமிசாஸ்திரத்தில் மிகத்தேர்ந்தவனாக இருந்தமை
யால், இந்தயாத்திரையில் உண்டாகும் இடையூறுகளை
நீக்கிக்கொள்ளத்தக்கவனாக இருந்தான். இவன் முப்பது
வருஷகாலமாகக் கப்பல்யாத்திரை செய்வதிலே பயிற்சியு
ள்ளவனாகவும் அக்காலத்தில் மாலுமிசாஸ்திரத்தில் மிகத்
தேர்ந்தவர்களாயிருந்த போர்ட்சுகல் தேசத்தாருடன் மி
கவும் பழகினவனாகவும் இருந்தமையால், இந்தவிஷயத்தி
ல் இவனுக்குண்டாயிருந்த ஞானம், மெடிட்டரேனிய
ன்என்னுங் கடலின் கரையருகிலே கப்பல் யாத்திரை
செய்துகொண்டிருந்த இஸ்பெயின் தேசத்தார்களுக்கு
உண்டாயிருந்தஞானத்திலும் அனேகமடங்கு விசேஷித்
ததாக இருந்தது. இவன், தான் புறப்பட்ட நாள்முதற்

தொண்டு யாதொரு காரியத்தையுந் தன்னுடைய புத்தியுத்
திகளின்படி தன்கண்களுக்கு முன்பாகவே நடப்பித்துக்
கொண்டுவந்தான். தான்போகுமார்க்கம் முன் ஒருகாலத்
திலும்போயிராத மார்க்கமாதலால் நித்திரை செய்வதில்
சற்றுநேரத்தைமாத்திரம் போக்கி மற்றையநேரமெல்லா
ம் விழித்துக்கொண்டிருந்தான். தான் விழித்துக்கொண்
டிருக்குங்காலமெல்லாம், ஆழம் அறியுங்கயிறு முதலிய
கருவிகள் பலவற்றையுந் தன்னருகில்வைத்துக்கொண்டு
கப்பலின் மேல்தட்டிலே இருந்துகொண்டு, போர்ட்சு
கல் தேசத்துக் கப்பல்யாத்திரைக்காரர்களையும்
ண்டு வந்ததுபோல, நீரேற்றவற்ற
டங்களையும், பட்சிகளின்போக்கு
ளின் வேறு பாடுகளையும், சமுத்திர பூண்டுகளையும், இன்
னுஞ் சமுத்திரத்திற் காணப்பட்ட பலவற்றையும், பார்த்
துத்தக்கபடி கப்பலை நடத்திக்கொண்டும் இவைகளை எ
ல்லாம் புஸ்தகத்தில்எழுதிக்கொண்டும்வந்ததுமன்றி, அவ
னுடன் வந்தவர்கள் அதைரியப்படாதபடி தாங்கள் ஒவ்
வொருநாளும்போகும்வழி யளவிலே சிறிதுசிறிது குறை
த்துச்சொல்லிக் கொண்டும்வந்தான். கொமீரா என்னுந்
தீவிலிருந்து புறப்பட்டநாளுக்கு மறுநாள் (௩௪) மயில்
சென்றிருந்தும் அவர்களுக்கு (௪௫) மயில்சென்றோமெ
ன்று சொன்னான். கானெரித்தீவுகளிலிருந்து (செப்டம்
பர்மீ-௬உ) புறப்பட்டு (ஷைமீ-௧௪உ)வரையில் நேர்
மேற்கில் (௬௦௦) மயில்சென்றார்கள். அத்தேதியில்,
அங்கு மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாக அவர்களிடத்திலி
ருந்த கம்பாசு ( Compass ) என்னுந் திசையறியந்திரங்
களிலுள்ளகாந்தவூசிகளானவை துருவனுக்குநேராக நில்
லாமல், சற்றுச்சற்றுமேற்கு முகமாகத்திரும்ப ஆரம்பித்
தன. அவற்றைக்கண்டுஅவனுடன் வந்தவர்களெல்லாரும்
பயமுற்றபோது, அவைகள் திரும்புதற்குச்சரியானகார

ணந் தனக்குத்தெரியாதிருந்தாந் தன் யுத்தியினாலே வேறொருகாரணத்தைச்சொல்லி அவர்களுடைய பயத்தை நீக்கினான். இப்பொழுதும் அவ்விடத்தில் யாவர்போயினும் அவ்வூசிகள் அவ்வாறு திரும்புகின்றன அவைகள் அப்படித்திரும்புகிறதற்குக் காரணம் இன்னதென்று அறிவது யாவர்க்கும் அருமையாக இருக்கின்றது. பின்பு சற்றேறக்குறைய கானெரித்தீவுகளின் அக்ஷபாகத்திலேயே நேர்மேற்காகக் கப்பல்களை நடத்திக்கொண்டு போகையில், [illegible]னவனாகளுக்கிடையிலும் அவைகளுக்குச் சற்றுத்தி[illegible]களும் அடித்துக்கொண்டிருக்குங் கீ [illegible] கவிலையை [illegible] வர் [illegible]ந்து அக்காற்றின்வழியே அத்த [illegible] யில்தூரஞ் சென்றனர். அவ்விடத்திலே சமுத்திரம [illegible] பூண்டுகளால் நிறையப்பட்டு, சமமாகவும் விரிவ [illegible] யிருககின்ற பூமியை ஒத்ததோற்றமுள்ளதாக இருக்கக்கண்டான். இப்பூண்டுகள் மிகுதியாக அடர்ந்திருந்தமையால், அங்குச்சில இடங்களிலே கப்பல்களை விசையாகநடத்தக்கூடவில்லை. இதைக்கண்டு கப்பல்களில் இருந்தவர்கள் அப்பூண்டுகளுக்கு அடியிலே கற்பாறைகளும மேடுகளுமிருக்குமென்றும், இவ்வழியாகக்கப்பல்களை நடத்திகொண்டு போனால் அபாயத்திற்கு இடமாயிருக்குமென்றும், நினைத்து மிகப்பயந்தார்கள். அப்பயத்தை நீக்குதற்குக்கொலம்பசு, இங்கிருக்கும் இப்பூண்டுகள் நாம் தேடிக்கொண்டுபோகுந்தேசங்கள் சமீபத்திலிருகின்றன வென்பதற்கு அடையாளமே யன்றி, அவைகளினால் ஓரபாயமும் உண்டாகாதென்று அவர்களுக்குச்சொன்னான். அப்பொழுது பெருங்காற்றுண்டாயிற்று. அது அக்கப்பல்களை அப்பூண்டுகளிருக்குமிடத்திற்கு அப்புறங் கொண்டுபோய்விட்டது. அங்கு அனேகம்பட்சிகள் வந்து தங்கள் கப்பல்களைச் சிறிதுநேரஞ் சூழ்ந்துகொண்டிருந்து பின்பு மேற்குமுகமாகப்போவ

லதைக்கண்டு அக்கப்பல்களிலிருந்தவர்கள் கொஞ்சந்தைரியமடைந்தார்கள்.

(அக்டோபர் - ௴ கவ) வரையிலும் (உ௲கO) மயில் தூரஞ் சென்றனர். அவ்வளவு சென்றிருந்தும் கொலம்பசு, அக்கப்பல்களிலிருந்தவர்கள் அஞ்சாதிருக்க (௲எஉஉ) மயில்தூரஞ் சென்றோமென்று சொன்னான். இவனிருந்த கப்பலின் மாலுமியும் மற்ற இரண்டு கப்பல்களின் மாலுமிகளும் வல்லவர்களல்லாதவர்களாகையால், இவன் சொன்னதைமெய்யென்று ஒத்துக்கொண்டார்கள். கொலம்பசுவோடுகூட வந்தவர்கள் யாவரும் நாம்கானெரித் தீவுகளிலிருந்து புறப்பட்டு மூன்றுவாரங்களாய், இதுவரையிலும் ஒருவரும்போயிராததூரம் வரையில் பறவைகள்பறந்துசெல்லுதல் முதலான ஏதுக்களா சமீபத்திலிருக்கிறதென்று சென்றும் பூமியைக் யேயென்று அதைரியமடைந்தனர். பின்பு அவர்கள் இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்ததைவிட்டு நம்முடைய அரசன் யோசனையின்றி, வீணெண்ணங் கொண்ட ஒரு மனிதனுடைய மொழிகளுக்குச் செவிகொடுத்தானென்றும், நாம் இனி இவனுடையவார்த்தையைக் கேளாமல் நமதுதேசத்திற்குத்திரும்பிப்போய்விடுவோமானால் அரசன் கோபித்துக்கொள்ளமாட்டானென்றும், இப்பொழுது கப்பல்கள் சிறிதுசிறிது இடங்களில் ஓட்டையாக இருக்கின்றன; அவைகள் முழுதும் [illegible]வாமற் போவதற்கு முன்னமே நமது தேசத்திற்குப்போய்ச் சேரவேண்டுமென்றும், பைரங்கமாகப் பேசிக்கொள்ளத்தொடங்கினார்கள். அதற்குமேல், நாமிப்போது திரும்புவோமானால் எதிர்காற்றினால் மிகவருத்தப்பட வண்டுமென்று எண்ணினதுமன்றிக் கொலம்பசுவை எப்படியாயினுந்திரும்பிவிடச்செய்யவேண்டுமென்று யாவரும் நிச்சயித்துக்கொண்டார்கள். அவர்களிலே சில துன்மார்க்கர்கள், கொலம்ப

சுவைச் சமுத்திரத்திலே தள்ளிவிட்டால் யாதொருதடை யுமின்றிநாமெல்லாரும் நமது தேசத்திற்போய்ச்சேரலா மென்றும், இவன் வீணெண்ணத்தைக்கொண்டு நம்மை யெல்லாம்இட்டுக்கொண்டுவந்தவனாகையால் இவனைக்கொ ன்றுவிட்டால் இவனிறந்ததற்குக் காரணமின்னதென்று ஒருவரும் நம்மைக்கேளார்களென்றும், சொன்னார்கள்.

கொலம்பசு இவைகள்அனைத்தையும் அறிந்துகொ ண்டும், அறியாதவனைப்போலத் தனக்குள்ளுண்டாயிரு ந்த மனவிருத்தத்தை மறைத்து, அவர்களுடன் சிரித் துப்பேசிக்கொண்டும், தான் இதுவரையிற்செய்தயாத் திரையினால் மிகவுந் திர்ப்தியடைந்தவன்போலவும், இனி ச்சீக்கிரத்தில் தன் கருத்து நிறைவேறுமென்று மகிழ்ச்சி ய நுக்கிறவன் போலவும், நடித்துக் காட்டினான். அல்ல , அவன், அவர்களுக்குச் சிலசமயங்களிலே இன் சொற்களாலே சமாதானஞ் சொல்லிக்கொண்டும், சிலச மயங்களில் நாம் புதியதேசங்களைக் கண்டுபிடித்தோமா னால் நமக்குமிகுந்த புகழ்ச்சியுந் திரவியமுங் கிடைக்கு மென்று பயனக்குறித்துச் சொல்லிக்கொண்டும், வந்தா ன் மேலுஞ் சிலசமயங்களிலே, கடவுளுடையமகிமையை எங்கும் பரவச்செய்யத்தக்கதும் இஸ்பெயின் தேசத்துக் குக் கீர்த்தியுண்டாகச் செய்யத்தக்கதுமாகிய இந்தப்பெ ரிய பிரயத்தனத்துக்கு விக்கினஞ்செய்வீர்களானால், அர சனுடன்சொல்லி உங்களை நன்றாகத் தண்டிக்கச்செய்வே னென்று பயமுறுத்திக்கொண்டும்வந்தான். அவர்கள்இ வைகளைக்கேட்டுக் கொஞ்சம் அமைவடைந்து கொலம்ப சுவுடனே இன்னுஞ் சிறிது தூரம் போகத்துணிந்தார் கள்.

அவர்கள் அப்படியே அதற்கப்புறஞ் சிறிது தூரம் போகையில், அவ்விடத்திலே பட்சிகள் கூட்டங்கூட்ட

மாகத் தென்மேற்குத் திசையாகப்போகிறதைக் கண்டு சந்தோஷித்து, போர்ட்சுகல் தேசத்துக்கப்பல்யாத்திரைக்காரர்கள் செய்துகொண்டுவந்தமுறையாக, அப்பட்சிகள் போகுந்திசையின் வழியாகக்கப்பல்களை நடத்திக்கொண்டு சிலநாள்வரையுஞ் சென்றனர். பின்பு அக்கப்பல்களி லிருந்தயாவரும் நாம் இப்படி சென்றும் பூமியைக்காணவில்லையென்றும், முப்பதுநாள்வரையிலுஞ் சமுத்திரமும் ஆகாயமுந் தவிர வேறொன்றையுங் காணவில்லையென்றும், கலக்கமுற்றுத்தங்கள் தங்கள் கப்பல்களின் மேல்தட்டுகளிலே கூடிக்கொண்டு தங்கள் தேசத்திற்குத்திரும்பிவிடவேண்டுமென்றுபிடிவாதஞ்செய்தார்கள். அப்போது கொலம்பசு, இதுவரையிலே சொல்லிவந்த தந்திரங்கள் இனி உதவாவென்று எண்ணிக்கொண்டு, இன்னு மூன்று நாள்வரையும் என்சொற்படி கேட்டு என்னுடன் கூடவாருங்கள்; அதற்குள் நான் எண்ணிவந்த காரியம் நிறைவேறாவிட்டால் திரும்பி விடுகிறேன் என்று சத்தியஞ் செய்தான்.

அவன் அப்படிசத்தியஞ் செய்துசொன்னது அவர்களுக்கு நியாயமாகத்தோன்றினமையால், அவர்கள்யாவரும் அதற்கு ஒத்துக்கொண்டார்கள். அவன், தானெண்ணிவந்தபடி புதியதேசங்களைச் சீக்கிரத்திலே கண்டுபிடிக்கலாமென்பதற்கு ஏதுக்களாயுள்ள சிலவற்றைக்கண்டுதான் அவ்வளவு நிச்சயமாகச் சொன்னான். அவைகளாவன: அதற்குச்சிலநாட்களுக்கு முன்னே அவன் சமுத்திரம் அதிக ஆழமில்லாமலிருக்கக்கண்டதன்றி, அவ்விடத்திலே சமுத்திரத்திலிருக்கு மணல் கரைகளிலிருக்குமணலை ஒத்திருக்கவும், சமுத்திரப்பறவைகளே யன்றி நிலத்தில் வாசஞ்செய்யும் அனேகம் பறவைகள் பறந்து சென்று கொண்டிருக்கவுங் கண்டதும்; அஸ்தமயகாலத்திலே சூரியனைச் சூழ்ந்திருக்குமேகங்கள முன்னர்க்காண

ப்பட்டுக்கொண்டுவந்த நிறத்திற்கு வேற்றுமையான நிற த்தையடைந்திருக்கவும், காற்றானது அதிகவெப்பமாக இ ரவில் அடிக்கடி மாறி மாறி அடித்துக்கொண்டிருக்கவுங் கண்டதும்; பிண்டாவென்னுங்கப்பலிலிருந்தவர்கள் புதி தாகவெட்டப்பட்டதாயிருக்கின்ற ஒரு மூங்கிலும் மனி தனால் வேலைசெய்யப்பட்டிருந்த ஒருமரத்துண்டும் சமு த்திரத்தில் மிதந்துகொண்டிருக்கக்கண்டதும்; நிஞ்ஞா வென்னும் கப்பலிலிருந்தவர்கள் ரெட்பெர்ரீசு (Red Berries) என்னும் பழங்களோடுகூடிய ஓர்மரக்கிளை யைக்கண்டெடுத்ததுமாம் கொலம்பசு, இவைகளாலே பூமி சமீபத்திலிருக்கிறதென்று நிச்சயித்துக்கொண்டு, (அக்டோபர்மீ-௧௧௳) சாயங்காலம் அக்கப்பலிலுள்ள யாவரையுங் கூட்டிக்கொண்டு, கடவுளைநோக்கித் தான் கருதிவந்த காரியத்தை முடிவுபெறச் செய்ய வேண்டுமெ ன்று பிரார்த்தித்தான் பின்பு அவன், இரவில் கப்பல் கள் கரைதட்டிப்போகாதபடி பாய்களையெல்லாஞ் சுரு ட்டிவிட்டுக் கப்பல்களை நிறுத்த உத்தரவுசெய்தான். அ ன்று இராமுழுதுங் கப்பல்களிலுள்ள யாவரும் நித்திரை யின்றிக் கப்பல்களின்மேற்புறங்களிலே நின்றுகொண்டு நிலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கப்பலில் உயர்ந்தவிடத்திலிருந்து பார்த்துக்கொண் டிருந்த கொலம்பசு, அன்று இராத்திரி ஏறக்குறையப் பத்துமணிவேளையிலே சிலதூரத்தில் ஓர்விளக்குப்பிரகா சித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, அதை இசெபெல் லாள் தன்னுடன்கூட அனுப்பின பீட்ரோ கட்டிரெசு, (Pedro Guttierez)என்பவனுக்கு இரகசியமாகக் காண் பித்தான். அவன் அதைப்பார்த்து, அக்கப்பல்களுக்கெ ல்லாம் விசாரணைக்கர்த்தனாகிய சால்சீடோ (Salcedo) என்பவனை அழைத்துக்காட்டினான். பின்பு இம்மூவருக் கும் அவ்விளக்கு ஓரிடத்தினின்று மற்றோரிடத்திற்குக

கொண்டு போகப்படுவதாகக் காணப்பட்டது. இராத்திரிப்பன்னிரண்டுமணிக்குப் பின்னர் இக்கப்பல்களுள் முன்னதாக விருந்த பிண்டா வென்னும் கப்பலிலே பூமி! பூமி! என்கிற சந்தோஷ ஆரவார முண்டாயிற்று. அனேகமுறை பூமி பூமி யென்றெண்ணி வீணாய்ப்போனமையால், அதை நிச்சய மென் றெண்ணமற் பொழுது விடிகிற வரையிலும் பொறுத்திருந்தார்கள். அதற்கு மறுநாளாகிய (அக்டோபர் ௴ - ௰௨) வெள்ளிக்கிழமை அதிகாலையில் அம்மூன்றுகப்பல்களிலுமிருந்தயாவரும், தாங்களிருக்கும் இடத்திற்கு(௯)மயில் தூரத்தில்விருட்சங்களாலேசூழப்பட்டதாயும் சிலநதிகளோடு கூடியதாயும் இருந்த ஒருதீவைக்கண்டார்கள். கண்டபின்னர் இவர்கள் யாவரும் 'டேடியம் (Te Deum) என்னும் பாடலைப் பாடிக்கொண்டு ஆனந்தத்தினால் கண்களினீர்பெருகக் கடவுளைத் துதித்தார்கள். அதற்குப்பின் அவர்கள் யாவருங் கொலம்பசுவின் காலில்வீழ்ந்து, கொலம்பசுவைநோக்கி வழியிலே நாங்கள் உமக்கு மிகவுமனவருத்தமுண்டாகும்படிசெய்த குற்றங்களை நீர் பொறுத்துக்கொள்ளவேண்டுமென்று வேண்டிக்கொண்டதுமன்றி, தெய்வ சகாயத்தைப்பெற்றவனென்று அவனை மிகப்புகழ்ந்தார்கள்.

சூரியனுதித்த வுடனே யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதமுதலிய வைகளை எடுத்துக் கொண்டு படகுகளின் மீதேறிப்போர்க் குரியவாத்தியங்களை முழக்கிக் கொண்டுந் தங்கள் அரசுக்குரிய கொடிகளைப் பிடித்துக் கொண்டுங் கரையருகிலே போனார்கள் போனவுடனே விலையுயர்ந்த வஸ்திராபரணங் களைத் தரித்துக் கொண்டவனும், உருவின கத்தியைக் கையிலே தாங்கிக் கொண்டவனும், கொலம்பசு தன்னாலே கண்டுபிடிக்கப்பட்ட தீவிலே முன்னர் இறங்கினான். அவனுக்கு பின்னர் மற்றவர்கள் இறங்கினார்கள். இறங்கினவுடனே இவர்கள் யாவரும் முழங்கால்களினி

ன்று பூமியை முத்தமிட்டு, அவ்விடத்திலே ஒரு சிலுவையை நாட்டி அதற்கு நமஸ்காரஞ் செய்து, தங்கள் கருத்தை முடிவுபெறச்செய்த கடவுளைத் தொழுதார்கள். பின்பு, போர்ட்சுகல் தேசத்தார் புதிதாய்த் தேசங்களைக் *கண்டு பிடித்தபோது எவ்விதமான சடங்குகளைச்செய்து வந்தார்களோ அவ்விதமான சடங்குகளைச் செய்து, காஷ்டீல் லியான் என்னுந்தேசங்களின் அரசியாகிய இசெபெல்லாளின் பெயரால் அத்தீவைஸ்தாபித்தார்கள்.

அத்தீவில் வாழ்வோர்களிலே பலர் கூட்டங்கூட்டமாகக்கூடிக்கொண்டு, இவர்களுடைய கப்பல்கள் அத்தீவைச் சேர்ந்தது தொடங்கி, இவர்கள் கப்பலைவிட்டுப் படகுகளிலேறிக்கொண்டுவந்து கரையில் இறங்கி அங்கே அச்சடங்குகளைச் செய்தவளவிலே, ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டு இருந்தார்களே அல்லாமல், இவர்கள் அங்குச் செய்தவைகள் இன்னவையென்று உணர்ந்துகொள்ளாதவர்களாயிருந்தார்கள். இஸ்பெயின் தேசத்தாருடைய ஆடைகளும், வெண்மையான உடலும், தாடியும், ஆயுதங்களும், அதுவளவிலும் அவர்களாலே காணப்பட்டிராதவைகளாக இருந்தமையால், அவைகள் அத்தீவார்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை யுண்டாக்கின. அவர்கள் இவர்கள் கப்பல்களையும், அவைகளிலே பீரங்கிகள் சுடப்படும்போது உண்டாகும் மின்னலையொத்த வெளிச்சத்தையும், இடியையொத்த சத்தத்தையும், அவைகளிலிருந்து எழுகின்றபுகையையுங் கண்டு மிகப்பயந்து, இவர்கள் பூமியைப்பார்க்க இறங்கின சூரியபுத்திரர்களென்று நினைத்து, இவர்களுக்கு அதிகமரியாதைசெய்தார்கள்.

அத்தீவிலிருந்த பூண்டுகள் மரங்கள் முதலியவைகளில் யாதொன்றாவது யூரோப்புகண்டத்தில் இருக்கிறதற்கு ஒத்ததாக இருக்கவில்லை. அந்தப்பூமியானது மிகச்

செழிப்புள்ளதாக இருக்கினும் மிகுதியாக உழுதுபயிர்
செய்யப்பெற்றதாகக் காணப்படவில்லை. அவ்விடத்துக்
காற்றானது அதிக உஷ்ணமுள்ளதாக இருந்தது. அம்
மனிதர்கள் யாவரும் முழுதும் நிர்வாணிகளாக இருந்த
துமன்றி, அவர்களிலே சிலர் கறுத்து நீண்டிருக்குந் தலை
மயிர்களை விரித்துவிட்டுக் கொண்டிருக்கிறவர்களாகவுஞ்
சிலர் அம்மயிர்களைப் பின்னித்தலையிலே சுற்றிக்கொண்
டிருக்கிறவர்களாகவும் இருந்தார்கள். மேலும் அவர்கள்,
தாடிகளும் உடலிலே மிகுந்த மயிரும் இல்லாதவர்களாக
வும், செம்புநிறத்தைபொத்த நிறமுள்ளவையாயும் மனி
தருடைய சாதாரணமுகங்களுக்கு வேறுபட்டவையாயும்
இருக்கும்முகங்களுள்ளவர்களாகவும், தக்க அளவான உய
ரமும் அவயவங்களும் உள்ளவர்களாகவும், தீவிரமுள்ள
வர்களாகவும், முகங்களிலும் வேறுசில அவயவங்களிலுஞ்
சித்திரமெழுதிக்கொண்டிருக்கின்றவர்களாகவும், இருந்த
னர். அவர்கள்முதலில் அருகில் வரப்பயமுற்றவர்களாயி
ருந்துவரவரப்பயந்தெளிந்து இஸ்பெயின் தேசத்தார்க
ளிடத்திலவந்து அன்னியொன்னியமாகக்கலந்துகொண்டு,
தங்களிடத்திலுள்ள தின்பண்டங்களையும் தங்களிடத்திலு
ள்ள எல்லாவற்றிலும் உயர்ந்தவைகளாயிருக்கின்ற நூற்
சுருள்களையுங்கொடுத்து, அவர்களிடத்திலிருந்து சதங்கை
படிகமணி முதலியவைகளை வாங்கிக்கொண்டார்கள். அ
ன்றுசாயங்காலவேளையிலே கொலம்பசுதன்கப்பலிற்குப்
போயினான். அவனுடனேகூட அத்தீவார்களில் அனே
கா அவர்கள் பாஷையில் கெனோக்கள் (Canoes) என்று
சொல்லப்பட்ட படகுகளிலேறிக்கொண்டு போயினார்
கள். அப்படகுகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொருமரத்
துண்டுகளாற் செய்யப்பட்டவையாயிருந்தன. அவர்கள்
அவைகளை அதிகவிசையோடு நடத்திக்கொண்டுபோவார்
கள். இஸ்பெயின்தேசத்தார்கள் அங்கே அதிக திரவியத்

தை அடையலாமென்று பேராசைகொண்டிருந்தார்கள். அத்தீவில் வாழ்வோர்கள் தங்களுக்கு இனி இவர்களா லுண்டாகப்போகும் இடையூறுகளைக் குறித்தொன்றும் உணராதவர்களாக இருந்தனர்.

கொலம்பசு அவ்வுடன்படிக்கையிலே கண்டிருக்கிறபிரகாரம் அதிகாரத்தை வகித்துக்கொண்டு அத்தீவிற்கு சான்சால்வேடர் (San Salvador) என்றுபெயரிட்டான். அத்தீவார் அதற்கு கியூவானகேனி (Guarahani) என்றுபெயர்சொல்லுகிறார்கள். அத்தீவானது கொமீரா என்னுந்தீவிற்கு மேற்கில் (௫000) மயில்தூரத்திலிருக்கின்றது. அதை, லியூகேயா (Lucaya) அல்லது பெகாமா (Bahama) என்னுந்தீவுகளில் ஒன்றென்று இப்பொழுது வழங்கிவருகிறார்கள்.

மறுநாள் கொலம்பசு கரையோரங்களில் அத்தீவார் வாசஞ்செய்யும் இடங்களிலெல்லாம் போய்ப்பார்த்தவிடத்து அவர்கள் அதிகதரித்திரர்களாயிருக்கக்கண்டு, இதுதான் நினைத்துவந்ததேசம் அன்றென்று நிச்சயித்துக்கொண்டதுமன்றி, இது இந்துதேசத்தி லோரபகாமாக இருக்கலாமென்று நினைத்தான். அவ்விடத்துமனிதர்களில் அனேகர் மூக்கிற்பொன்னுலேசெய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்துக்கொண்டிருக்கிறதைக்கண்டு, இந்தப்பொன் எவ்விடத்திலுண்டாகிறதென்றுஅவர்களைக்கேட்டான். அவர்கள் தெற்குத்திசையைக்காட்டி அத்திசையிலிருக்குந்தேசங்களிலுண்டாகிறதென்று சமிக்கையால் அறிவித்தார்கள். உடனே கொலம்பசு அத்தீவுகளுக்குப் போகவேண்டுமென்று விருப்பங்கொண்டு, இஸ்பானீசு (Spanish) பாஷையைக்கற்பித்துத் தனக்கு உதவிசெய்யும்படி வைத்துக்கொள்ள அத்தீவுமனிதரில் எழுவரை அழைத்துக்கொண்டு தெற்குத்திசையைநோக்கிச்சென்றனன். செல்

லுகையில் அநேகந்தீவுகளைக்கண்டு அவைகளில் மிகப் பெரியவைகளாயுள்ள மூன்றுதீவுகளில் இறங்கி, அம்மூன் றுதீவுகளில் ஒன்றிற்கு செண்டுமேரி - ஆப்தி - கன்செப்ஷ ன் (St. Mary of the Conception) என்றும், மற்றொ ன்றிற்கு பெர்னண்டினு (Fernandina) என்றும், வேறொ ன்றிற்கு இசெபெல்லாஎன்றும், நாமமிட்டுச் சிலநாள் அங்குத்தங்கியிருந்து, அவைகளிலுள்ள அனைத்தும் சா ன்சால்வேடர் என்னுந்தீவிலுள்ளவைகளை ஒத்தவையாயி ருந்தமையாலும், அத்தீவுகளில் இருப்பவர்களும் பொ ன் உண்டாகுமிடந் தெற்குத்தேசமென்று காண்பித்தமை யாலும், இவ்விடத்தில் இருப்பதினாலே பெரும்பயனில்லை யென்றுகருதி அவைகளைவிட்டுப் பின்னுந்தெற்கிற்சென் றனன். சென்றவிடத்துஇதுவரையினுங்கண்ட தீவுகளெ ல்லாவற்றினும் விசேஷித்ததாயுங் குன்றுகள் மேடுகள் ந திகள் காடுகள் முதலானவைகளையுடையதாயுமிருந்த ஒரு பெரியதீவைக்கண்டு, இதின் பெயரென்னவென்று தன் னுடன்கூடவந்த சான்சால்வேடர்என்னுந்தீவின் மனிதர் களைக்கேட்க, அவர்கள் அதின்பெயர்கியூபா (Cuba) எ ன்றுசொல்லினார்கள். தான் அதற்கு சுவானு (Juana) என்றுபெயரிட்டனன். அதற்குமேல் அவ்விடத்திலுள்ள ஒருநதியின் வழியாகத் தன்கப்பல்களெல்லாவற்றையும் நடத்திக்கொண்டு அத்தீவின்அருகிலே போயினான். அ வனுடையகப்பல்கள் கரையருகில் வருதலை அவ்விடத்தில் வாசஞ்செய்கின்ற மனிதர்கள் கண்டு பயந்தோடிப்போ ய் மலைச்சந்துகளிலே ஒளித்துக்கொண்டார்கள். கொலம் பசு அவ்விடத்திலே தன்கப்பல்களைச்செப்பஞ் செய்து கொள்ளவேண்டுமென்று நிச்சயஞ் செய்துகொண்டு, இ ஸ்பெயின்தேசத்தார்களிலே சிலரையும், சான்சால்வேட ரென்னுந்தீவிலிருந்து அழைத்துக்கொண்டு வந்தவர்களி ல் ஒருவனையும், அத்தீவின்வளத்தைப்பார்த்துவரும்படி

அனுப்பினான். அவர்கள் (௩௦) மயில் தூரம்வரையும்போ
ய்ப்பார்த்துத்திரும்பிவந்து, நாம்இதுவரையிலும்பார்த்
துவந்ததீவுகளெல்லாவற்றிலும்இது அதிக செழிப்புள்ள
தாகஇருக்கிறதென்றும், அங்கங்கே அனேககுடிலசகள்
இருக்குதலுமன்றி ஆயிரம்பேர்க்கு அதிகமாகவே சனங்
கள் குடியிருக்குங்கிராமம் ஒன்றிருக்கிறதென்றும், அச்
சனங்கள் நிருவாணிகளாகஇருந்தாலும் சான்சால்வேட
ரென்னுந்தீவிலிருக்கும் மனிதர்களிலும் அதிகபுத்தியுள்ள
வர்களாக இருக்கிறார்களென்றும், அவர்கள் எங்களைத்தே
வர்களென்றெண்ணிக்கால்களைமுத்தமிடுதல் முதலானமி
குந்தவணக்கமான மரியாதைகள் செய்தார்களென்றும்,
அதிருசியான ஓர்வகைக்கிழங்கும் பலவகைத்தானியங்க
ளும் அவ்விடத்திலுண்டாயிருக்கின்றனவென்றும், நாயு
ம் முசலுந்தவிர அவ்விடத்தில் வேறுமிருகங்கள் காணப்
படவில்லையென்றும், பொன்னாலடைகளை அச்சனங்கள்
மிகுதியாகஅணிந்துகொண்டிருக்கிறார்களென்றும், சொ
ன்னார்கள்.

கொலம்பசு அத்தேசத்துமனிதர்களைப் பொன்னிரு
க்கும் இடமெங்கேயென்றுகேட்க, அவர்கள்தங்கள் பா
ஷையில் கியூபாவின் மத்தியமென்கிற அர்த்தத்தைத்தரு
மொழியாகிய கியூபனேகான் (Cubanacan) என்றுசொ
ல்ல, இவனுக்குஅப்பாஷைதெரியாமையினாலே அவர்க
ள்பெரியகான் (Great Khan) என்பவனைக்குறித்துச்
சொல்லுகிறார்களென்று எண்ணி, அதனாலே மார்க்கொ
போலோ என்பவன் சொல்லியிருந்த கானென்கிறபட்
டப்பெயர்பெற்ற தார்த்தாரி (Tartary) தேசத்துஅரசர்
களிலே ஒருவனாலே செயிக்கப்பெற்ற காத்தே என்னுந்
தேசஞ் சமீபத்திலிருக்க வேண்டுமென்று நினைத்தான்.
காத்தேயென்பது இக்காலத்திலே சீனம் (China) என்று
பெயர்வழங்குகிற தேசமாம். பின்பு அவன் சிலநாள்வ

மையிலும் அங்கேயிருந்து அந்தத்தீவைச் சுற்றிப்பார்த்தவிடத்தில், அது மிகச்செழிப்புள்ளதாயிருக்கினுந் தன்னுடன்வந்தவர்களையுந் தன்னை அனுப்பின இராணியையுந்திர்ப்திசெய்வதற்குப் போதுமானபொன் அவ்விடத்தில் இல்லையென்று கண்டதுமன்றி, அத்தேசத்தார்கள் இத்தேசத்தைவிடக் கிழக்கிலிருக்கின்ற ஏட்டி (Hayti) என்னுந் தீவிலே பொன் அதிகமாயிருக்கிறதென்றுசொன்னமையாலும், அவ்விடத்தினின்று தன்கப்பல்களை நடத்திக்கொண்டு அத்தீவை நோக்கிப்போயினன். போகையில் மார்ட்டின் அலான்சோபின்சன் என்பவன், தான் அத்தீவிற்கு முன்னதாகப்போனல் அங்கிருக்கும்பொன் முதலானவைகளைத் தானே வாரிக்கொள்ளலாமென்றுகருதி, கொலம்பசுவுடனேசொல்லாமல் தன்கப்பலைநடத்திக்கொண்டு முன்னதாகப்போய்விட்டான்.

கொலம்பசு (டிசம்பர்மீ௬உ) ஏட்டி என்னுந் தீவைச்சேர்ந்து ஓரிடத்திலேதங்கி அத்தீவிற்கு இஸ்பாஞோலா (Espagnola) என்றும், தான் தங்கின இடத்திற்குச்செண்டுநிகலசு (St Nicholas) என்றும், பெயரிட்டனன் பின்புத்தன்னைவிட்டுப்போன அலான்சோபின்சன் என்பவனுடைய கப்பலை அவ்விடத்திலேகாணமையினலும், அங்கிருந்தமனிதர்கள் தங்களைக்கண்டவுடனே மிகப்பயந்து காடுகளிலேபோய் ஒளித்துக்கொண்டமையாலும், அவ்விடத்தைவிட்டு அத்தீவின் வேறொருபாகமான இடத்திற்போய் அங்குத்தங்கி, அதற்குக் கன்செப்ஷன் என்றுபெயர்கொடுத்தனன். அவ்விடத்திலுள்ள சனங்களுந்தங்களைக்கண்டு ஓடத்தலைப்பட, அவர்களில் ஒருஸ்திரீயைப்பிடித்து அவளுக்கு இன்சொற்கள் சொல்லிச் சிலவஸ்துகள் கொடுத்து விட்டுவிட்டார்கள். அவள்போய்த் தன் இனத்தார்க்கு அவர்கள்கொடுத்தவைகளைக் காண்பித்து அப்புதியமனிதர்கள்மிகவும் நல்லவர்களென்றுசொல்ல, அதை

கேட்டு அவர்கள்பயந்தெளிந்து கொலம்பசு முதலாயி னோரிடத்தில்வந்து, அவர்களாலே பரிசாகக்கொடுக்கப்ப ட்ட அல்பவஸ்துகளை வாங்கிக்கொண்டு அதிகசந்தோஷத் தோடு போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் கியூவா னகேனி கியூபா என்னுந்தீவுகளிலுள்ளவர்களைப் போல வேநிர்வாணிகளாகவும் விவேகமில்லாதவர்களாகவு மிரு ந்தது மன்றி, இஸ்பெயின் தேசத்தாரை வானத்திலி ருந்து இறங்கினவர்களென்று எண்ணினார்கள். அவ்வி டத்திலே பொன் அதிகமாகவே இருக்கின்றது. அங்கி ருக்குஞ்சனங்கள் மிகவுஞ் சுவல்பவஸ்துகளாகிய படிகம ணி குண்டூசிமுதலானவைகளை இவர்களிடத்தில் வாங்கிக் கொண்டு, அவைகளுக்குப்பதிலாகப் பொன்னைக்கொடு த்தார்கள். அத்தேசத்து அரசன் அனேகருடைசூழ்ந் துவர ஒருதண்டிகையிலே ஏறிகொண்டுவந்து கொலம் பசுவைக்கண்டு, பருமரியாகப் பொன்தகடுகளையும்வே லைத் திறமாகச் செய்யப்பட்டிருந்த அரைப்பட்டிகை யொன்றையுங்கொடுத்து, அதற்குப் பதிலாக அவனாலே கொடுக்கப்பட்ட சுவல்ப வஸ்துகளை வாங்கிக்கொண்டுமிகுந் தசந்தோஷத்தோடு போயினான்.

பின்பு கொலம்பசு பொன்னிருக்குமிடத்தைக் கண்டு பிடிக்கவேண்டுமென்பதிலே தீவிரமுள்ளவனாய், அத்தே சத்தார்களை இத்தீவிலே பொன்னிருக்கும் இடம் எங்கே யென்றுகேட்க, அவர்கள் இத்தீவிலேதானேகிழக்கிலேசில தூரத்திலேசைபேயோ (Cibao) என்கிற ஒருதேசமிருக் கிறது; அதுதான் பொன்மிகுதியாக இருக்கிற இடமென் றார்கள். இதைக்கேட்டபோது மார்க்கோபோலோமுத லாயினோராலே சொல்லப்பட்ட சைபாங்கோவென்னும் சபான் (Japan) தீவைத்தான் இவர்கள் பொன்னிருக்கு மிடமென்று சொல்லுகிறார்களென் றெண்ணிக்கொண்டு, ஏஷியாகண்டத்திற்கு மிகச்சமீபத்தில்வந்துவிட்டோமெ

ண்கிற சந்தோஷத்தோடு கிழக்குமுகமாகக் கப்பல்களை நடத்திக்கொண்டுபோய், அத்தீவைச்சேர்ந்த வேறொருபக்கிலேஇறங்கி, அதற்கு செண்டு தாமஸ் (St Thomas) என்றுபெயரளித்து அங்குத்தங்கியிருந்தனன். அங்கேயிருக்கையில், அந்தத்தீவின் ஐந்துபிரிவுகளிலொன்றாகிய அப்பிரிவிற்கு அரசனாகிய காகானகேரி (Guacanahari)என்பவன், இவர்கள் அங்குவந்திறங்கின செய்தியைக்கேட்டுக் கொலம்பசுவினிடத்திற்குப்போய் அவனைக்கண்டு தான் அளித்த பகுமதிகளைக்கொடுத்து, அவனைத்தானிருக்குமிடத்திற்கு வரும்படியாகக்கேட்டுக்கொள்ளச்சிலரை அனுப்பினான். அவர்கள்போய் அவனைக்கண்டு அந்தப்பகுமதிகளைக்கொடுத்துத்தங்கள் அரசனிடத்திற்கு வரும்படி கேட்டுக்கொண்டார்கள். கொலம்பசு அவனைக்கண்டுவரும்படித் தன்னிடத்திலிருப்பவர்களிலே சிலரை அனுப்பினான். அவர்கள்போய் அவ்வரசனைக்கண்டுவந்தனர். பின்புதானேநேராக அவ்வரசனிடத்திற்குப் போகவேண்டுமென்று கருதிக் கப்பலேறிப்போய்க்கொண்டிருக்கையில், அதற்குமுன் இரண்டுநாளாக நித்திரைஇல்லாமலிருந்ததைப்பற்றி (டிசம்பர்மீ-உச௳) நடுராத்திரியில் மாலுமியொருவனை இடைவிடாமற் சுக்கானைப்பிடித்துக் கொண்டிருக்கச்சொல்லிவிட்டுத் தான் நித்திரைசெய்தான். அம்மாலுமிஒன்றுந்தெரியாத ஒருவனைஅதைப்பிடித்திருக்கச்சொல்லித் தான் பராமுகனாக இருந்துவிட்டான். அதனால்அக்கப்பல் நீரோட்டத்தில் அகப்பட்டு ஒரு கற்பாறையிலேதாக்கி உல்லோல கல்லோலப்பட்டது. அப்போது நித்திரைசெய்துகொண்டிருந்த கொலம்பசுவிழித்துக்கொண்டு விரைவிலே கப்பலின் மேற்றட்டிற்போய்நின்று பார்த்து, ஒருநங்கூரத்தைக் கொண்டுபோய்க் கப்பலின் பின்புறத்தில்போடுங்களென்று சிலருக்கு உத்தரவுசெய்தான். அவர்கள் அவன் சொன்னபடிசெய்யா

மற்படகிலேறிக் கொண்டு ஏறக்குறைய ஒன்றரைமயிலது¡ ரத்திலிருந்த நிஞ்ஞாவென்னுங் கப்பலினிடத்துப்போ ய்விட்டார்கள். பின்புகொலம்பசு பாய்மரங்களைவெட்டி விடுதல்முதலிய அனேகஉபாயங்களைச்செய்தான். அப்ப டிச்செய்துங் கப்பல் முழுகிப்போவதாயிருந்தது. அப் பொழுது கடலில்அலைகள் அமர்ந்திருந்தமையாலும், நி ஞ்ஞாவென்னுங் கப்பலிலிருந்துசிலபடகுகள் வந்துஉத விசெய்தமையாலும், அக்கப்பலிலிருந்த யாவருந்தப்பிப் பிழைத்தார்கள். இந்தச்செய்தியைக்காகானகேரி என்னு ம்அரசன்கேள்விப்பட்டு, அனெகமனிதரை அனுப்பின துமன்றித்தானுங்கரையோரத்தில்வந்துமிகவும் விசனமுற் றவனாய்த் தன்னாலேசெய்யக்கூடும் உதவிகளெல்லாவற் றையுஞ்செய்தனன். மேலும் அவ்வரசன் அனேகம்பட குகளை அனுப்பி, உடைந்துபோன கப்பலிலிருந்த விலை யுயர்ந்த வஸ்துகளையெல்லாங் கரையிலே கொண்டுவந்து சேர்க்கும்படிசெய்து, அப்படிக்கொண்டுவந்து சேர்க்க ப்பட்டசாமான்களின் அருகில் ஒருவரும் போகாமலிருக் கும்படி அனேகரைக்காவலும் வைத்தனன். மறுநாள்கா லையிலே அவன் நிஞ்ஞாவென்னுங் கப்பலிற்குப்போய்க் கொலம்பசுவைக்கண்டு, நீரொன்றிற்கும் பயப்படவே ண்டாம்; உமக்குஎன்னாற்கூடியஉதவிகளையெல்லாஞ்செ ய்கிறேனென்று தைரியஞ் சொல்லிவிட்டும்வந்தான். பின் கொலம்பசு, தன்னுடன் சொல்லாமற்போய்விட்ட பி ன்சனென்பவனது கப்பல் இதுவரையில் அகப்படாமை யால், அவன் புதியதேசங்களைக் கண்டுபிடித்த செய்தி யை அரசனுடனும் அரசியுடனும் முன்னதாகச்சொல் லி, அவர்களால் அந்தவிஷயத்தில் அடையத்தக்கநன்மை களைத்தான் அடையலாமென்றெண்ணி இஸ்பெயின்தே சத்திற்குப்போயிருக்கலாமென்றும், தான் கொண்டுவந் தமூன்றுகப்பல்களில் ஒன்றுதான் கடைசியில் நின்ற

து; இதுவும் மிகவுஞ் சிறியதாயும் ஒட்டையாயுமிருக்கிற படியால் மறுபடியும் இஸ்பெயின் தேசத்திற்கும் போதற்கு உதவாததாக இருக்கின்றதே என்றும், கவலைப்பட்டுக்கொண்டிருந்தான். எப்படியிருந்தாலும், பின்சனென்பவன் இஸ்பெயின் தேசத்தைச் சேர்வதற்குமுன்னமே தான்போய்ச் சேரவேண்டுமென்று கருத்திலேகொண்டு, இக்கப்பல் தன்னுடன்வந்திருப்பவர்கள் யாவருக்கும் போதாமையாயிருப்பதால், இவர்களிலே சிலரை இவ்விடத்திலேதானே நிறுத்திவிட்டுப்போனால், அவர்கள் இத்தேசமுழுமையுஞ்சுற்றிப்பார்த்துப் பொன்னிருக்கு மிடங்களை அறிந்து தான் மறுபடியும்வந்தவுடனே தெரிவிப்பார்களென்று எண்ணி, இதைத்தன்னுடன் வந்திருப்பவர்கள் யாவருக்குங்கொலம்பசு தெரிவித்தான். அவர்களில் அனேகர் பொன்னை அதிகமாகச் சம்பாதிக்கலாமென்கிற அவாவினால் அவ்விடத்திலேதானே இருக்க ஒத்துக்கொண்டார்கள்.

அதற்குப் பின்பு கொலம்பசு, காகானகேரி என்னும் அரசனை நாங்கள் இத்தீவிலிறங்கினவுடனே சனங்கள் எங்களைக்கண்டு பயந்தோடிப் போனதற்குக் காரணமென்னவென்று சமிக்கைகளாலேகேட்டான். அதற்கு அவன், தென்கீழ்த்திசையிலுள்ள சிலதீவுகளிருக்கின்ற கரிப்பியன்கள் (Carribeans) என்னுமனிதர்கள் அடிக்கடி இங்கேவந்து சனங்களை உபத்திரவப்படுத்துகிறதுமன்றி, அவர்களிடத்தில் அகப்படுகிறவர்களைக்கொன்று தின்றுகொண்டு வருகிறார்களென்றும், நீங்கள் இத்தீவிலிறங்கினபோது உங்களையும் அந்தக்கரிப்பியன்களென்று எண்ணிக்கொண்டு இச்சனங்களோடிப்போனார்களென்றும், சொன்னான். இவன் இப்படிச்சொன்னதைக்கேட்டுக்கொலம்பசு, இவர்கள் கரிப்பியன்களுக்கு மிகவும்பயப்படுகிறார்களென்றும் அவர்களோடு எதிர்க்கவல்லமை

யில்லாதவர்களாக இருக்கிறார்களென்றும் தெரிந்துகொ
ண்டு, தன்னுடன் வந்தவர்களிலே சிலரை இங்கே நிறுத்
துவதற்கு இது நல்லவழியென்று எண்ணி, அவ்வரசனை
நோக்கி அந்தக்கரிப்பியன்கள் இவ்விடத்தில் வந்தால் அ
வர்களோடு எதிர்த்துப்போர்செய்து அவர்களைத் துரத்
திவிடும்படி என்னுடன்கூட வந்தமனிதர்களிலே சிலரை
இவ்விடத்தில் நிறுத்திவிட்டுப்போகிறேன்; நீர்பயப்பட
வேண்டாம் என்று சொன்னான். அதற்கு அவ்வரசன்
அதிகசந்தோஷத்தோடு ஒத்துக்கொண்டனன்.

அவன் ஒத்துக்கொண்டதனால், எட்டுநாளுக்குள்ளா
க அத்தீவின் மனிதர்களைக்கொண்டு ஒருகோட்டை கட்டு
வித்து, அதைச்சுற்றிலும் ஓரகழியும் வெட்டுவித்து, அத
ற்குநாவிடாட்டு (Navidad) என்றுபெயரிட்டு, உடைந்
துபோன கப்பலிலிருந் தெடுத்துக்கொண்டுவரப்பட்ட
பீரங்கிகளை அக்கோட்டைமதில்களின் மீது ஏற்றுவித்தா
ன். அதற்குமேல்கொலம்பசு, தனது நன்னடைக்கையி
னால்இஸ்பெயின் தேசத்தார்கள்மிகவு நல்லவர்களென்று
அத்தீவார்கள் நம்பும்படிசெய்தது மல்லாமல், தான் அ
வ்விடத்தில் நிறுத்திவிட்டுப்போகு மனிதர்கள்கரிப்பிய
ன்களோடு எதிர்த்துப்போர்செய்து அவர்களைத்துரத்தி
விடத்தக்கவர்களென்று அவர்களுக்கு அறிவிக்கும்படி,
அவர்களுக்கு முன்பாகத் தன்னுடன் வந்தமனிதர்களில்
யுத்தஞ்செய்யுந் தொழிலிலே பயிற்சியுள்ளயாவரையும்
நிறுத்தி, கத்தி ஈட்டிமுதலான ஆயுதப்பயிற்சிவித்தைக
ளைக்காண்பிக்கச்செய்தனன். மரக்கத்திகள் மரவீட்டிகள்
முதலானவைகளைப் பயிற்சிசெய்து கொண்டுவந்த அந்
தத்தீவார் அதனைக்கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.
அதற்குமேல் கொலம்பசு கோட்டை மதில் களின்மேலி
ருந்த பீரங்கிகளைச் சுடச்செய்தான். அந்தச் சத்தத்
தைக்கேட்டு அத்தீவில் வாழுமனிதர்கள் நடுநடுங்கித்த

ணயிற் கவிழ்ந்து படுத்துக்கொண்டு கண்களைக்கைகளா ல் மூடிக்கொண்டனர். அச்சத்தம் அடங்கினபின்னர் த ங்கள்கண்களைவிழித்து அப்பிரங்கிகளினின்றும் புறப்பட் ட குண்டுகள், மரங்கள் முதலானவைகளைத் துளைத்துஞ் சின்னாபின்னப்படுத்தியும் இருப்பவைகளைக்கண்டு, மின் னலையும் இடியையும் ஆயுதங்களாகவுடைய இவர்களோ டு எதிர்க்க யாவராலே முடியுமென்று எண்ணிக்கொ ண்டார்கள்.

அதன்பின் தன்னுடன் வந்தவர்களில் முப்பத்தெட் டுப்பேர்களை அவ்விடத்தில் இருக்கும்படிசெய்து, அவர் களில் டீகோ-டீ-அரேடோ (Diego de Arado) என்பவ னைத் தனக்குப்பதில் அதிகாரியாக நியமித்து, மற்றவர் களை அவனுக்குக் கீழடங்கி நடக்கும்படி கட்டளையிட்டு, தான் மறுபடியும் வருகிறவரையில் அவர்களுக்கு வேண் டிய சாமக்கிரிகளையுங்கொடுத்து, அவர்களைநோக்கி, நீங் கள் காகானகேரி என்னும் அரசனுடைய அதிகாரத்திற் குட்படாமலும் அவனுக்கும் அவனைச்சேர்ந்த மனிதர்க ளுக்கும் யாதொருதீங்கையுஞ் செய்யாமலும் இருங்களெ ன்றும், நான்போய் மறுபடியுஞ் சீக்கிரத்தில் வந்து விடு கிறேனென்றும், உங்கள் பெயர்களையெல்லாம் அரசனு க்கும் இராணிக்குந்தெரிவித்து உங்களுக்குத் தகுந்த நன்மைகளைச் செய்விக்கிறேனென்றும், சொல்லினான்.

பின்பு கொலம்பசு (கசசஙா-ஞ ஜனவரிமீ சவ) நா விடாட்டு என்னும் நகரத்திலிருந்து புறப்பட்டுக் கிழக் குத்திசையை நோக்கிச் செல்லுகையில், ஆறுவாரங்களு க்கு முன்பாகத் தன்னைவிட்டுப்பிரிந்துபோன பின்சனெ ன்பவனது கப்பலை (ஷை மீ சஉ) கண்டான். கண்ட போது பின்சனவன், தன் கப்பல் காற்றினாலே தள் ளப்பட்டுப் போய்விட்டதென்றும், எதிர்காற்றினால் மறு

படியும் உம்மிடத்தில் வந்து சேர்வதற்குக்கூடாமற்போ
ய்விட்டதென்றும் சொன்னான். அவன் சொன்னதுபொ
ய்யென்று கொலம்பசுவுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும்,
அங்கு அவனோடொன்றும் பேசலாகாதென்றும் அக்கப்
பல் அகப்பட்டதே தனக்குப்பெரிய உதவியென்றும்
நினைத்து, அவன் சொன்னவைகளைச் சரிதானென்று ஒத்
துக்கொண்டான். பின்சன் கொலம்பசுவைவிட்டு நீங்
கின பின்னர், அத்தீவிலே தானே வெவ்வேறிடங்களிலே
போயிறங்கிச் சிறிது பொன்னைச் சம்பாதித்துக் கொண்
டானே யல்லாமல், தீவுமுதலானவைகளி லொன்றையும்
நூதனமாகக் கண்டு பிடிக்கவில்லை.

அதற்குமேல் கொலம்பசு, தன் கப்பல்கள் ஓட்டை
யாக இருக்கின்றதினாலும், தன்னுடன் கூடவந்தவர்கள்
நூதனமாகக் கண்டவைகளையெல்லாந் தங்கள் தேசத்தா
ருக்குத் தெரிவிக்க வேண்டுமென்கிற விருப்பத்தினாலே
தீவிரப்படுத்துகின்றதினாலேயும், விரைவில் இஸ்பெயின்தே
சத்திற்குப் போகவேண்டுமென்று கருதி (ஜனவரிமீ-
௧௬வ) கப்பல்களைத் திருப்பி வடகிழக்குமுகமாக நடத்
திக்கொண்டு, (பிபர்வரிமீ-௧௪வ) க்குள்ளாக அட்லாண்
டிக்கு மகாசமுத்திரத்தில் (௧௫00) மயில் தூரஞ் சென்ற
னன். (ஷை ௧௪வ) இல் அங்குப்பெருங்காற் றெழும்பிற்
று. அதினின்று தப்பும்படி தங்களாலே கூடிய உபாயங்க
ளெல்லாஞ் செய்தும் வீணாய்ப்போயினமையால், கப்ப
ல்கள் முழுகிப்போகுமென்று தீர்மானஞ் செய்துகொ
ண்டு, யாவருங் கடவுளைத் தியானித்துக் கொண்டிருந்தார்
கள். அப்பொழுது கொலம்பசு, தான் நூதனமாகக்
கண்டு பிடித்த தேசங்களும் அவைகளால் உண்டாகு நன்
மைகளும் ஒருவர்க்குந் தெரியாமற் போகும்படி நேரிட்
டதேயென்றும், தன்னையாவரும் வஞ்சகனென்று நினைப்
பார்களேயென்றும், எண்ணி மிகுந்த துயரமடைந்து,

தேசவின்மீது தான்செய்த யாத்திரையின் செய்திகள் அனைத்தையுஞ் சுருக்கமாக எழுதி, அதை எண்ணெய்வஸ்திரத்திற்குள் வைத்துச் சுருட்டி, பின்பு அதைமெழுகுக்குள்வைத்து மூடி, கடைசியில் அதை ஒருபீப்பாய்க்குள் வைத்து சிறிதுஞ் சந்திலலாமல் நன்றாகஅடைத்து, அப்பீப்பாயைச்சமுத்திரத்தில் விட்டு விட்டான். அன்று தன்னுடன்வந்த பிண்டாவென்னுங் கப்பல் காணமற் போய் விட்டது.

தெய்வச்செயலினால் காற்றானது நின்றுவிட்டதுஅங்கிருந்து புறப்பட்டு (ஷை மீ கருஉ) சாயங்காலம் போர்ட்சுகல் தேசத்து அரசனுடையதாயிருக்கின்ற அசோர்சு என்னுந் தீவுகளில் ஒன்றாகியசெண்டுமேரி(St. Mary) என்னுந் தீவக்கண்டு அங்கிறங்கினான். இறங்கினபின்பு, கொலம்பசுவுக்கும் அத்தீவின் அதிகாரிக்குஞ் சிலகாரியங்களைக்குறித்துப் பெரியவிரோதமுண்டாயிற்று. அதைக் கொலம்பசு ஒருவகையால் நிவர்த்திசெய்து கொண்டு, தனக்குவேண்டிய சாமக்கிரிகளையெல்லாம் அங்கேவாங்கிக் கொண்டனன். வாங்கிக்கொண்டபின், காற்றடித்த அன்றுகாணமற்போய்விட்ட பிண்டா என்னுங் கப்பலானது இதுவரையிலும் வந்துசேராமையினாலே, அது கடலில்மூழ்கிப்போயிருக்கலாம்; அல்லது பின்சனென்பவன் புதியதேசமுதலியவைகளைக் கண்டுபிடித்தசேதிகளை முன்னதாகச்சொல்லி, அதனாலே பெற்றுக்கொள்ளத்தக்க நன்மைகளைத் தான் பெற்றுக் கொள்ளலாமென்று எண்ணி அக்கப்பலை நடத்திக் கொண்டு இஸ்பெயின் தெசத்திற்கு முன்னதாகப் போயிருக்கலாம்; ஆதலால், தான் சீக்கிரத்திலே இஸ்பெயின்தேசத்திற்குப் போகவெண்டுமென்றாகருதி அத்தீவைவிட்டுப் புறப்பட்டான்,

அவன் அத்தீவைவிட்டுப்புறப்பட்டு இஸ்பெயின்தேசத்திற்குச்சமீபமாகப் போய்க்கொண் டிருக்கும்போது,

(பிபர்வரிமீ௨௬௨) மறுபடியும் பெருங்காற்றுண்டாயிற்று அக்காற்றில் இரண்டு நாள் இரவும் பகலுமிகுதியும் வருத்தப்பட்டுப் போர்ட்சுகல் தேசத்து இராசதானியாகிய லிஸ்பன்பட்டணத்துக்கரை துறையிற்போய், அந்த அரசனுடைய உத்தரவினால் (மார்ச்சுமீ௬௨) அப்பட்டணத்தில் இறங்கினான். பிறதேசத்தானாகிய கொலம்பசு இவ்வளவு பெரிய காரியங்களையெல்லாஞ் செய்து வந்ததைக்குறித்து அந்ததேசத்தார்கள் பொறாமை கொள்ளினும், அவ்வரசன் அவனைத்தன் சமுகத்தில் வரவழைத்து, அவனுக்குத் தகுந்த மரியாதைகள் செய்து, அவன்யாத்திரை செய்த சமாசாரங்களெல்லாவற்றையுங்கேட்டு மகிழ்ச்சியடைந்து, முன்பு அவன் சொன்னதற்குத் தான் ஒத்துக்கொள்ளாமற்போனதைக்குறித்து மிகவும் வியசனப்பட்டான். கொலம்பசு, முன்பு தான் சொன்னவைகளை அலட்சியஞ்செய்தவர்கள் வெட்கமுறும்படி, அவர்களுக்கு முன்பாகத் தான் அதுவரையிலே செய்த யாத்திரைச்சரித்திரங்களையும் இனிச்செய்யப்போகிற காரியங்களையுந் தெரிவித்தான்.

அப்படியாகலிஸ்பன் பட்டணத்தில் ஐந்து நாள்தங்கியிருந்து, அவ்விடத்தினின்றும் புறப்பட்டு முன்னேதான் கப்பலேறின இடமாகிய பேலாசு என்னும் பட்டணத்தின் துறையிலே (மார்ச்சுமீ௧௫௨) போய்ச்சேர்ந்தான். அங்கிருந்து பிரயாணப்பட்டுப் போனநாள்முதல் அதுவரையில் (௭) மாதங்களும் (௧௧) நாள்களுமாயின. அங்குள்ளோர் யாவரும் கொலம்பசு தான் கொண்ட கருத்தை முடிவு பெறச்செய்து கொண்டு வந்தானென்று கேள்விப்பட்டு, ஆனந்தக்கடலில் மூழ்கினவர்களாய்வந்து, அரசர்களுக்குச் செய்யத்தக்க மரியாதைகள்செய்ய அவன் கப்பலிலிருந்து இறங்கினான். இறங்கி அவர்கள் யாவருந்தன்னோடு கூடவரக் கோயிலுக்குப்போய்க் கடவுளைத்தொழு

துகொண்டு ஓரிடத்திலே தங்கினான். அன்று சாயங்காலம் பின்சனுடையகப்பலும் அங்குவந்துசேர்ந்தது.

உடனேகொலம்பசு, தான் யாத்திரைசெய்து வந்த செய்திகளை அப்பொழுது பார்சிலோனு (Barcelona) என்னும் நகரத்திலிருந்த பெர்ட்டினண்டென்னும் அரசனுக்கும் இசெபெல்லாளென்னும் அரசிக்குந் தெரிவித்தான். அவர்கள் மிகுந்தசந்தோஷமடைந்து அதிகஉபசாரத்தோடு அவனைத்தாங்களிருக்கு மிடத்திற்கு- வரும்படி கேட்டுக் கொண்டார்கள் அதற்குமேல், பேலாசு என்னும்பட்டணத்திலிருந் துபுறப்பட்டு, நெடுந்தூரத்திலிருந்து தன்னைப்பார்க்கும்படி வந்தவர்களிலும் அங்குள்ளவர்களிலும் அனேகர்புடைசூழ்ந்துவர, அதிக ஆடம்பரத்தோடு பார்சிலோனு நகரத்திற்குட்போய், அங்கு எல்லாவற்றிற்கு முன்னர் தான் புதிதாய்க் கண்டு பிடித்ததேசங்களிலிருந்து அழைத்துக்கொண்டுவந்த மனிதர்களும், அவர்களுக்குப்பின்னர் அத்தேசங்களி லிருந்துகொண்டு வந்த பொன்னாபரணங்களும் மலைகளிலிருந்து எடுத்துக் கொண்டுவந்த பொற்பொடிகளும் நதிகளிலிருந்து எடுத்துக்கொண்டுவந்த பொன்மணல்களும், அவைகளுக்குப் பின்னர் அத்தேசங்களிலிருந்து கொண்டுவந்த நானாவிதமான வஸ்துகள் பறவைகள் முதலியவைகளும், எல்லாவற்றிற்கும் பின்னர் தானுமாகச்சென்று, சிம்மாசனாதிபதிகளாகியபெர்ட்டினண்டு இசெபெல்லாள் என்னும் இவ்விருவர்களுடைய சமூகத்திற்குப்போயினான். போனவுடனே அவர்கள் இவனுக்கு மிகுந்த மரியாதைகள் செய்து ஓராசனம் அளித்து அதில் உட்காரச் சொல்லி அவன் செய்தயாத்திரையின் சரித்திரத்தையெல்லாஞ் சொல்லச்சொன்னார்கள். சொன்னவுடனே யிவன், யாவருங்களிப்புறத் தான் செய்த யாத்திரையின் சரித்திரத்தையெல்லாஞ் சொல்லினான். அதைக்கேட்டு இராசனும் இராணி

ப்புங் கடவுளுக்கு வந்தனஞ் செய்தார்கள். அதுமுதற்கொண்டு அரசன் முதலாகிய யாவருங் கொலம்பசுவுக்கு மிகுந்த உபசாரங்கள் செய்துகொண்டு வந்தார்கள். அதற்குமேல், அவ்வரசனும் அரசியும் சாண்டாபீ என்னும் நகரத்தில் எழுதப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நடந்துகொள்ளும்படி உத்தரவுசெய்ததுமன்றி, மறுபடியும்போய் முன்கண்டுபிடித்த தேசங்களைத் தங்கள் அரசிற்குட்படுத்தவும், இன்னும் இவ்வாறான தேசங்களைக்கண்டு பிடிக்கவும், வேண்டிய சேனைகள் ஆயுதங்கள் சாமான்கள் முதலானவைகளைச் சித்தஞ்செய்யும்படி உத்தரவுசெய்தார்கள். இதைக்கேட்டவளவிலே கொலம்பசுவுக்குமிகுந்த சந்தோஷமுண்டாயிற்று.

கொலம்பசு புறப்பட்டுப் போய்ப்புதிதாகப் பற்பல தேசங்களைக்கண்டு பிடித்துவந்தானென்கிறசெய்தி யூரோப்புக்கண்டமுழுவதும் பரவிற்று. அதைக்கேள்விப்பட்டவர்களில் விவேகிகளாயுள்ளவர்கள் மிகவுங்களிப்புற்று, இது யூரோப்புக் கண்டத்தார் யாவர்க்கும் நன்மையைத்தருங் காரியமாக இருக்கின்றதென்று சொல்லிக் கொண்டதுமன்றித் தேசக்களைக் குறித்துப் பலவிதமாக எண்ணிக்கொண்டார்கள். அவிவேகிகளாயுள்ளவர்கள் இதனைநம்பாமற் பலவிதமாகச் சொல்லிக்கொண்டார்கள். பின்பு கொலம்பசு, இந்தியாதேசத்தில் மிகுதியாக உள்ளனவென்று தான்கேள்விப்பட்டிருந்த பொன் பஞ்சு பூண்டுகள் மிருகங்கள் பட்சிகள் முதலியவைகள் அத்தேசங்களில்மிகுதியாக இருக்கின்றமையால், தான் புதிதாய்க்கண்டுபிடித்ததேசங்களெல்லாம் இந்தியாவின் ஒருபாகமாக இருக்கவேண்டுமென்றுசொல்லினன். அதை அனேகர் ஒத்துக்கொண்டமையால், பெர்ட்டினண்டும் இசெபெல்லாளும் அப்புதிய தேசங்களுக்கு இந்தியாதேசங்கள் என்றுபெயரிட்டார்கள். யூரோப்புக்கண்டத்தார்கள் அத்தீவுகள் இ

ந்தியாவைச்சேர்ந்தவைகள் அல்லவென்றும், அத்தீவுகள் வேறொரு பெரியகண்டத்தைச் சார்ந்தவைகளென்றுந் தெரிந்துகொண்ட பின்னரும், அப்பெயரை மாற்றாமல் அவைகளை மேற்கிந்தியா (West Indies) தேசங்களென்றும், அவைகளில் வாழுமனிதர்களை இந்தியர்கள்(Indians) என்றும், வழங்கிக்கொண்டுவருகிறார்கள்.

கொலம்பசு மறுபடியும் புறப்பட்டுப் போகிறானென்று அனேகர் கேள்விப்பட்டு, அவனுடன்கூட அப்புதியதேசங்களுக்குப்போய் மிகுதியாய்த்திரவியஞ் சம்பாதிக்கவேண்டுமென்று கருதிஅவனிடத்திற்குவந்து, நாங்களுங்கூடவருகிறோமென்று கேட்டுக்கொண்டு அவனுடன்பாட்டைப் பெற்றுக்கொண்டார்கள். பெர்ட்டினண்டென்னும் அரசனும் அந்தவிஷயத்திலே மிகுதியும் முயற்சிசெய்யத்தொடங்கினான். ஆதலால், அந்தயாத்திரைக்கு (௧எ) கப்பல்கள் விரைவிலேதானே சித்தஞ்செய்யப்பட்டன. அந்தக்கப்பல்களிலே சிலமிகப்பெரியவைகளாகவும்இருந்தன. இப்பதினேழுகப்பல்களிலும் (௧௫00) பேர்களேறினார்கள். அவர்களில் அனேகர் அப்புதியதேசங்களிலேகுடியிருக்கும்படி புறப்பட்டமையால், தாங்கள் அவ்விடத்தில் நிலைபெறுதற்கு வேண்டிய எல்லாவற்றையுங்கொண்டுபோனார்கள்.

போர்ட்சுகல்தேசத்தார்கள் தங்களாலே கண்டுபிடிக்கப்பட்ட புதியதேசங்களைத் தங்களுடைய அதிகாரத்திற்குள்ளாக்கிக் கொள்ளும்போது, உரோமா (Rome) புரியிலுள்ள போப்பு (Pope) என்னும் பெரியகுருவினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொள்வதுபோலத் தாங்களும் உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதி, பெர்ட்டினண்டென்னும் அரசனும் இசெபெல்லாளென்னும் அரசியும், தங்கள்மனிதர்களாலே புதிதாகக்

கண்டுபிடிக்கப்பட்டதேசங்களைத் தாங்கள் சுவாதீனப்படுத்திக் கொள்வதற்காக் உத்தரவு கொடுக்கும்படி, அக்காலத்திலே போப்பாக இருந்த ஆறுவது அலெக்குசாண்டர் (Alexander VI.) என்பவனைக் கேட்டுக்கொண்டார்கள். அந்தஅலெக்குசாண்டரென்னும் போப்பு இஸ்பெயின்தேசத்தாருந் தனக்கு ஐக்கியமாயிருக்கவேண்டுமென்றுகருதி, அவைகளை உங்கள் சுவாதீனஞ் செய்துகொள்ளுங்களென்று உத்தரவுகொடுத்தான். ஆயினும் முன்னர்போர்ட்சுகல்தேசத்தாருக்கும் அவ்வாறே உத்தரவுகொடுத்திருந்ததைப்பற்றி, அசோர்சு என்னுந்தீவுகளுக்குமேற்கிலே (கஉ00) மயில்களுக்கப்புறம் தெற்குவடக்காக ஒரு வரையேற்படுத்தி, அவ்வரைக்குக் கிழக்கிலே கண்டுபிடிக்கப்படுந்தேசங்கள் அனைத்தையும்போர்ட்சுகல்தேசத்தாரும், அதற்கு மேற்கிலே கண்டுபிடிக்கப்படுந் தேசங்கள் அனைத்தையும் இஸ்பெயின்தேசத்தாரும், தங்கள் அரசிற்குள்ளாக்கிக்கொள்ளக்கடவர்களென்றுஞ் சொல்லினான். பின்புபெர்ட்டினண்டென்னும் அரசன், அப்புதியதேசங்களிலே கிறீஸ்துமார்க்கத்தைப் பரவச்செய்ய வேண்டியதைக்குறித்து அப்போப்பினிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு, கிறீஸ்துமார்க்கப்போதகர்களிலே சிலரைக் கொலம்பசுவினோடு அனுப்பினான். முன்னர் கொலம்பசுவரும்போது இட்டுக்கொண்டுவந்த அப்புதியதேசத்தார்களும் இவ்விடத்திலேதானே கிறீஸ்துமார்க்கத்துக் குள்ளானார்கள்.

அதற்குமேல் கொலம்பசு அரசனிடத்தும் அரசியிடத்தும்விடைபெற்றுக்கொண்டு (செப்டம்பர் மீ உருஉ) கேடிசு (Cadiz) என்னும்பட்டணத்திலிருந்து புறப்பட்டு, முன்போலவே கொமீராவென்னுந் தீவுக்குப்போய் அவ்விடத்திலே சிலநாள்தங்கியிருந்து, முன்சென்றவழிக்குச்சற்றுத் தெற்காகச்சென்று மேல்காற்றினுதவியைப்

பெற்றுக்கொண்டு, கொமீராவிலிருந்துபுறப்பட்ட இரு பத்தாறுநாள், முன்பு தான் கண்டுபிடித்த தீவுகளுக்கு குக்கிழக்கிலுள்ள கரிப்பீ (Caribbee) அல்லது லீவர்ட் டு (Leeward) என்னுந்தீவுகளிலொன்றிலே இறங்கி, அதற்கு டிசீடா (Deseada) என்றுபெயரிட்டு, (நவம்பர்மீ உ௨) அவ்விடத்தினின்றுபுறப்பட்டு, அதற்குவடமேற்கா கச் சென்று, டொமினிகா (Dominica) மாரிகாலாண்டி (Marigalante) முதலான அனேகந்தீவுகளுக்குப்போய், அத்தீவுகளிலிருக்குமனிதர்கள், முன்புகாகானகேரி என் னும் அரசனுமேல சொல்லப்பட்ட தன்மையை யுடையவ ர்களாயிருக்கவும், அவர்கள் வீடுகளில் மனிதர்களுடைய எலும்புகள் சிந்திக்கிடக்கவுங் கண்டான்.

அதற்குமேல் கொலம்பசு, தான் முன்பு இஸ்பானி யோலா என்னுந் தீவில்விட்டுவந்தவர்களைப் பார்க்கவே ண்டுமென்கிற அவாவுள்ளவனாய், அவ்விடத்திலிருந் துபு றப்பட்டுப்போய் அத்தீவைச் சேர்ந்து, (நவம்பர்மீ உ௨) நாவிடாட்டு என்னும்நகரத்திலிறங்கினான் இறங் கினபின் அவ்விடத்தில்தான் முன்பு கட்டின கோட்டை அழிந்துபோயிருப்பதையும், தான் விட்டுவந்தவர்களில் ஒருவருமில்லாமலிருப்பதையும், கண்டுமிகுந்த துயரம டைந்துகொண்டிருக்கையில், காகானகேரி என்பவனு டைய சகோதரன்வந்து, அவ்விடத்தில் நீர் விட்டுப்போன உம்முடையமனிதர்கள்நீர்போனபின்பு இங்கிருக்கும்ஸ்தி ரீகளைக்கற்பழித்தல் முதலான அனேக துர்க்கிரியைகள் செய்துவந்தமையால், இங்குள்ளவர்கள்தங்களுக்குச்செய் துகொண்டுவந்த மரியாதைகளை எல்லாம்இழந்ததுமல்லா மல், அத்தீவின் ஒருபாகமாகிய சைபேயோ என்னுந்தே சத்திலே பொன் அதிகமாகஇருந்ததைப்பற்றி அவ்விட த்திற்குப்போய் அங்குள்ள சனங்களை அதிகமாகவருத்த ப்படுத்தினமையால், அத்தேசத்தின் அரசன் மிகுந்தகோ

ளைக்கொண்டு தன்பரிவாரங்களுடன்வந்து இக்கோட்டை
யை வளைத்துக்கொண்டு கொளுத்திவிட்டான்; அதனுல்
உள்ளுடையமனிதர்யாவரும் இறந்தனரென்றும், அதற்
காகக் காகானசேரி என்னும் அரசன் அவ்வரசனோடெதி
ர்த்தமையாலே தன்னுடலிலே காயப்பட்டு இதுவரையி
லும் வெளியிற் புறப்படக்கூடாதவனாய் இருக்கிறனெ
ன்றும், சொன்னான்.

அதைக்கேட்டபோது கொலம்பசுவுடனே கூடவந்த
வர்கள் யாவரும், அவன் சொல்பவைகளெல்லாம் உண்மை
யல்லாதவைகளாயிருக்கின்றமையாலே காகானசேரியை
யும் அவன்பரிவாரங்களையுந் தண்டிக்கவேண்டுமென்று
கொலம்பசு வுடனே சொன்னார்கள். அதற்குக் கொலம்
பசு, அவனைத் தண்டனை செய்வதற்கு இது சமயம் அன்
றென்று சொல்லிவிட்டுப் பின்பு அத்தீவிலே தகுதியான
ஓரிடங்குறித்துக் கொண்டு, அவ்விடத்திலே தன்னுடன்
வந்தவர்களைக் கொண்டு அனேக வீடுகளையும் ஒருகோட்
டையையுங் கட்டுவித்து, அதை ஓர்நகரமாக்கி அதற்கு இ
செபெல்லா என்றுபெயரிட்டான்.

கொலம்பசுவுடனே கூடவந்தவர்கள் அவனோடுகூடப்
போனால் யாதொரு வருத்தமுமில்லாமல் அளவற்ற திர
வியங்களைச் சம்பாதித்துக் கொண்டுவரலாமென்று எண்
ணிவந்தார்களாதலாலும், அவர்களிலே மேன்மை பொரு
ந்தியவர்களாயிருந்தசிலர் சரீரப் பிரயாசைப்படுவதற்கு வல்
லாதவர்களாதலாலும், அப்புதிய தேசங்கள் எவ்வளவுசெ
ழிப்புள்ளவைகளாக இருந்தாலும் அவ்விடத்தில் உழவா
திதொழில் செய்வதற்கு விருப்பமில்லாதவர்களாக இரு
ந்தனர். அன்றியும் அவர்கள், தினந்தோறும் பற்பல
இடங்களிலிருந்து சிறிது சிறிதாகக் கொண்டு வருகின்ற
பொன்னால் அதிக திர்ப்தியடையாதவர்களாகவும் இருந்

தனர். இவைகளைப்பற்றி அவர்கள் உள்ளுக்குள்ளே கல கஞ் செய்ய ஆரம்பித்தார்கள். அதைத்தெய்வயத்தனத் தினாலே கொலம்பசு தெரிந்துகொண்டு, அக்கலகக்காரர் களில் அநேகரைத் தண்டித்து அடக்கினான். அடங்காத வர்களைப் பன்னிரண்டு கப்பல்களிலேற்றி இஸ்பெயின் தேசத்திற்கு அனுப்பினதுமல்லாமல், அக்கப்பல்களின் வழியாகவே அவர்கள் செய்த குற்றங்கள் இவைகளென் றும், அவ்விடத்துச்செய்திகள் இவைகளென்றும், இன் னும் இவ்வளவு மனிதர்களை அனுப்பவேண்டுமென் றும், தங்களுக்குப் போசன சாமக்கிரிகள் இவ்வளவு அனுப்பவேண்டுமென்றும், பெர்ட்டினாண்டுக்கும் இசெ பெல்லாளுக்கும் எழுதிக்கொண்டகடிதத்தையும் அனுப் பினான்.

அதற்குமேல் கொலம்பசு அங்கிருக்கும் இஸ்பெயின் தேசத்தார்கள் ஒருவேலையுமில்லாமல் சும்மா இருந்தால் கலகஞ் செய்துகொண்டிருப்பார்களென்று கருதி, அவர் களைக் கூட்டிக்கொண்டு அடிக்கடி அத்தீவிலுள்ள பற் பல தேசங்களுக்குப்போய் அந்தந்த இடங்களிலே இரு ப்பவர்களைப் பயப்படுத்திக்கொண்டுவந்தான். அப்படி ச்செய்து கொண்டுவருகையில் ஒருநாள், அத்தீவின்ஒரு பாகமாகிய சைபேயோ என்னுந் தேசத்திற்கு அலான் சோ-டி-ஒஜீடா (**Alonso de Ojeda**) என்பவனைச் சில சேனையைக் கூட்டிக்கொண்டு முன்னர்ப்போகச் செய்து தானுஞ் சிலசேனைகளோடு பின்னர்ப்போயினான். இவர் கள்போகையிலே கொடிகள் பறக்கிறதையும், வாத்தி யங்கள் முழங்குகிறதையும், காலாள்களுங் குதிரைச்சே வகர்களும் வருகிறதையம், அத்தேசத்தார்கள் கண்டு மிக வும்பயந்து, அதுவமாயினும் அவர்கள் குதிரைகளைக் கண்டிராமையால், குதிரையும் அதன் மீதிருக்கிறவனும் ஒரேமிருகமென்று நினைத்து, அப்படிப்பட்ட மிருகங்

களைத் தங்கள் வசமாக்கிக்கொண்டிருக்கிற இவர்களைப் போரில் வெல்லுவது அசாத்தியமாயிருக்குமென்று எண்ணி அஞ்சினார்கள். இவ்விதமாகவே அத்தீவிலுள்ள பல தேசத்தார்களையும் பயமுறுத்திக்கொண்டு வந்தானே அல்லாமல் அவர்களுக்குயாதொரு தீங்கையுஞ் செய்யவில்லை. மேலும் அவர்களுக்கு அன்பையுந் தயையையுங் காட்டிக் கொண்டுவந்தான். இப்படி இவன் செய்து கொண்டுவந்ததினால் அவர்கள் இவனிடத்தில் அதிக நம்பிக்கைகொண்டிருந்தார்கள். அந்தச்சைபேயோ எனனுந் தேசத்தார்கள், அவ்விடத்திலிருக்கும் நதிகளிலிருந்து பொன் தூள்களையும் பொன் பொடிகளையும் எடுத்துக்கொண்டு வந்தார்களே அல்லாமல், பூமியிலே பொற்கனிகள் இருக்கின்றனவென்றும் இல்லையென்றுஞ் சோதித்துப்பார்த்திலர் கொலம்பசு அவ்விடத்திலுள்ள நதிகளிலே பொன் அதிகமாக இருககின்றமையாலே பூமிக்குள்ளும் பொன் அதிகமாகவே இருக்குமென்று நிச்சயஞ் செய்துகொண்டு, அவ்விடத்தில் ஒருகோட்டைகட்டுவித்து அதற்குச் செண்டு தாமசு என்று பெயரிட்டனன்.

தங்கள் தேசத்திலிருந்து கொண்டுவந்த போசன சாமக்கிரிகளிலே செலவாய்ப் போயினவைகள்போக மற்றவைகள் உஷ்ணத்தாலே ஒன்றுக்கும் உதவாமற் போய் விட்டதைப் பற்றியும்; அத்தேசத்தார்கள் பயிர்செய்யுந் தானிய முதலானவைகள் அவர்களுக்கே போதாமையாயிருந்ததைப்பற்றியும், தாங்களும் தங்களாகாரத்துக்காக அதுவரையிலேயும் அத்தேசத்தில்யாதொரு பயிரையுஞ்செய்யாமலிருந்ததைப்பற்றியும், கொடியவியாதிகள் தங்களில் அனேகருக்குண்டாயிருக்கின்றதைப்பற்றியும், கொலம்பசுவை நிந்தித்துக்கொண்டும் அவனுக்கு விரோதமாக அனேகங்கலகங்கள் செய்துகொண்டும்வந்த இஸ்பெயின்தேசத்தார்கள், அந்தச்சைபேயோவில் அதிகமா

கப் பொன்னிருக்கிறதென்று தெரிந்துகொண்ட பின்னர், அவனை நிந்திப்பதைவிட்டு அதிகதிர்ப்தியடைந்தவர்களாயினார்கள். அப்பொழுது அவ்விடத்திலே பொன் அதிகமாக இருக்கிறதென்று அவாகள் தெரிந்துகொண்டது கொலம்பசுவுக்கு மிகவும் உதவியாக இருந்தது.

பின்பு கொலம்பசு, தானிதுவரையிலுங்கண்டுபிடித்த தேசங்கள் ஏஷியாகண்டத்தோடு சேர்ந்தவைகளாக இருக்கின்றனவோ சேராதவைகளாக இருக்கின்றனவோவென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று கருதி, தன் சகோதரனாகிய டான் டியேகோ, (Don Diego) என்பவனோடு சிலரை உதவியாகவைத்து அத்தீவை ஆண்டுகொண்டிருக்கும்படியாகவும், டான்பீட்ரோ மார்க்காரிட்டா (Don Pedro Margarita) என்பவனை அங்கிருக்குஞ்சேனைகளுடனே அத்தீவிலுள்ள பலதேசங்களின்மேல சென்று அவைகளை யெல்லாம் தங்கள் அதிகாரத்திற்குள்ளாக்கிக்கொள்ளும்படியாகவும் நியமித்து, அதற்குமேல் (௧௪௯௪ஷு ஏப்பிரல் மீ ௨௪வ) தான் மூன்றுகப்பல்களோடு அத்தீவிலிருந்து புறப்பட்டு, ஐந்துமாதம் வரையிலும் அனேகஇடையூறுகளை அடைந்து நெடுந்தூரஞ் சுற்றித்திரிந்தனன். அப்படித்திரிந்தும் ஜமேக்கா (Jamaica) என்னும் ஒரு பெருந்தீவைக் கண்டுபிடித்ததுதவிரப் பயனுள வேறொன்றையுங் கண்டுபிடித்திலன். அவன் கியூபா என்னுந்தீவின் தென்புறமாகப் போய்க்கொண்டிருக்கையில், எண்ணிறந்த சிறியதீவுகளைக்கண்டு அவைகளுக்கு அரசியின் தோட்டமென்கிற குயின்சுகார்ட்டன் (Queen's Garden) என்றுபெயரிட்டனன். அவைகளுக்கு இடையில் அகப்பட்டுக்கொண்டு வழிதெரியாமல் மயக்கமுற்று, அங்கங்கே அனேகக்குன்றுகளும் மலைகளுமிருக்குதலுமன்றிக் காற்றும் இடியு மிகுதியாகஉண்டாயிருந்தமையாலே மிகவும் வருத்தப்பட்டு, அந்த

அபாயமான இடத்தினின்றும்நீங்கி இப்புறம்வந்தனன். அப்படி அங்கே வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில், கொண்டுபோன போசனசாமக்கிரிகளில் மிகுதியுஞ்செலவாய்ப்போய்ச் சிறிதுமாத்திரம் இருந்ததைப்பற்றிக் கூடவந்தவர்கள் அவனோடு மாறுபட்டார்கள். அதனால் அவன் அவர்களை யாதொருகாரியத்திலும் நம்பாமல் எல்லாக்காரியங்களையுந் தன் முன்னிலையிலேயே நடத்திவந்தலையாலே, தன்னைத்தான் மறக்கும்படி செய்யத்தக்க சுரநோயை அடைந்தான். அச்சுரநோயோடு (செப்டம்பர்மீ-உஎ௨) இஸ்பானியோலா என்னுந்தீவிற்குவந்து சேர்ந்தான்.

அங்குப் பதின்மூன்று வருஷங்களுக்கு முன்பாகத் தன்னைவிட்டுப் பிரிந்துபோன தன் சகோதரனாகிய பர்த்தாலமியூ என்பவனைக் கண்டான். அதனாலுண்டான சந்தோஷத்தால் அச்சுரநோய் அவனைவிட்டுப் பறந்துபோய்விட்டது. அந்தப்பர்த்தாலமியூ என்பவன், இங்கிலாண்டுதேசத்து அரசன் கொலம்பசுவுக்கு உதவிசெய்கிறேனென்று அங்கீகரித்த பின்னர் அவ்விடத்திலிருந்து பறப்பட்டு இஸ்பெயின் தேசத்திற்கு வந்துகொண்டிருக்கையிலே, பாரிசு (Paris) என்னும் பட்டணத்திலே கொலம்பசு புதியதேசங்களைக்கண்டுபிடித்துவந்திருக்கிறானென்றும், மறுபடியும் அப்புதியதேசங்களுக்குப்போக இருக்கிறானென்றும் கேள்விப்பட்டு, அவன் போய்விடுகிறதற்கு முன்னமே அவனைக் காணவேண்டுமென்கிற விருப்பத்தோடு இஸ்பெயின் தேசத்திற்கு வந்து சேர்ந்தான். சேர்ந்தவுடனே தன் தமயன் சில நாட்களுக்கு முன்னமேபுறப்பட்டுப் போய்விட்டானென்றுகேள்விப்பட்டு, அதற்குமேல்பெர்டினண்டையும் இசெபெல்லாளையுங் கண்டான். கண்டவிடத்தில் அவர்கள் இவனுக்கு அதிகமரியாதை செய்து, அப்புதியதேசங்களுக்

குப் போயிருக்கிறவர்களுக்குப் போசன சாமக்கிரிகள் முதலியவைகளைக் கொண்டுபோகும்படிச் சித்தஞ் செய்திருக்கின்றமூன்று கப்பல்களுடனே நீ இஸ்பானியோலாவுக்குப் போகலாமென்று சொல்ல, அப்படியே செய்கிறேனென்று அவர்களிடத்திலே செலவு பெற்றுக் கொண்டு அந்த இஸ்பானியோலாவுக்கு வந்துசேர்ந்தான்.

இவன் கொண்டு வந்த போசன சாமக்கிரிகள் சிறிது நாளிற்கு மாத்திரம் உதவத் தக்கவைகளாக இருக்கினும், இவன் இந்தசமயத்திலே வந்துசேர்ந்தது கொலம்பசுவுக்கு அதிக உதவியாக இருந்தது. இது நிற்க, கொலம்பசு அத்தீவைவிட்டுப் புறப்பட்டு போன பின்பு, அத்தீவிலிருந்த இஸ்பெயின் தேசத்தார்கள் அவன் சொன்னபடி நடந்து கொண்டு வராமல், அத்தீவிலுள்ள பற்பல இடங்களிற் போய்ச் சனங்களை மிகவும் வருத்தபடுத்திக்கொண்டும் அவ்விடங்களி லிருக்கும் ஸ்திரீகளைபிடித்துத் துர்க்கிரியைகள் செய்து கொண்டும் வந்தனர். அவர்கள் அப்படிச் செய்து கொண்டு வருவதினாலே, சிலநாள் இங்கிருந்து போய்விடுகிறவர்களாகிய இவர்களோடுபோராடவேண்டிய தென்னவென்று இவர்கள் செய்யுமற்றத் துன்மார்க்கங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டுவந்த அத்தீவார்கள் இவர்கள்மீது மிகவுங் கோபங்கொண்டு, இவர்கள் இங்கே பட்டணமொன்றுகட்டி அதைப்பலப்படுத்திக்கொண்டு வருகிறதுமல்லாமல், அனேகங் கோட்டைகளையுங் கட்டிக்கொண்டுவருகிறார்கள்; கிருஷியாதித் தொழில்களைச் செய்யவும் ஆரம்பிக்கிறார்கள்; இத்தேசத்தார்களில் அனேகர் புசிப்பதற்குப் போதுமானவைகளை இவர்களில் ஒருவன் புசிக்கிறான்; இவர்கள் தேசத்தில் உணவுகிடையாமையினாலேதான் இவ்விடத்திற்கு வந்துவிட்டார்கள்; இவர்கள் இன்னுஞ் சிறிதுகாலம் இங்கே இருப்பார்களானால் நாமெல்லாம் ஆகாரமில்லாமல் அழி

த்துபோகவேண்டும்; என்று எண்ணி அவர்கள்யாவரும் ஒன்றாகச்சேர்ந்து இவர்களைத் துரத்தி விடவேண்டுமென்று நிச்சயஞ் செய்துகொண்டு, இவர்களிலே அனேகரைப் பிடித்துக் கொலைசெய்தனர். இப்படி இருக்கையிலே கொலம்பசு வந்துவிட்டான்.

அங்கிருக்கும் இஸ்பெயின் தேசத்தார்கள் அத்தீவார்களுடையகருத்தைத் தெரிந்துகொண்டு, இனிக்கொலம்பசுவின் உதவி இல்லாவிட்டால் நாமெல்லாம் அழிந்துபோவோம் என்று கருதி அவனுக்கு மிகவுந் தாழ்ப்பணிந்தார்கள். இதுவரையிலும் அத்தேசத்தார்களோடு போர்செய்வது நன்றன்றென்று நினைத்துக்கொண்டிருந்த கொலம்பசு இனிச்சும்மா இருக்கலாகாதென்று எண்ணி, இஸ்பெயின்தேசத்திலிருந்து வந்திருந்தவர்களிலே இறந்துபோனவர்கள் போக மிகுந்திருந்தவர்களைக்கூட்டிக்கொண்டுபோய் அவர்களோடு போர்செய்து அவர்களையெல்லாம் அடக்கவேண்டுமென்று எண்ணினான். இவனுடன் கூடவந்தவர்களிலே மூன்றில்இரண்டுபங்குமனிதர்கள் பிணியினாலும் வேறுபலகாரணங்களாலும் இறந்துவிட்டமையாலும், உயிரோடிருந்தவர்களில் அனேகர் போர் செய்யத்தக்க திறமில்லாதவர்களாக இருந்தமையாலும், மிகவுஞ் சிலர்மாத்திரமே போர்செய்வதற்கு இவனோடுகூடவரத் தக்கவர்களாயிருந்தனர். அப்படிவரத் தக்கவர்களாயிருந்த (௨00) காலாள்களையும், (௨0) குதிரைச்சேவகர்களையும், (௨0) வேட்டைநாய்களையும், கூட்டிக்கொண்டு (௧௪௯௫௵ மார்ச்சுமீ-௨௪௳) யுத்தகளத்திற்குப்போயினான். காகானகேரிஎன்னும் அரசன் தவிர அத்தீவிலுள்ளமற்றைய அரசர்களெல்லாந் தங்கள் தங்கள் சேனைகளைக் கூட்டிக்கொண்டு ஒன்றாகச்சேர்ந்து வீகா ரியால் (Vega Real) என்னும் வெளியில் வந்து கொலம்பசுவோடு எதிர்த்தார்கள். அவர்கள் ஆயுதப்பயி

ற்சியில்லாதவர்களும் மரத்தினாலே செய்யப்பட்ட ஆயுதங்களையுடையவர்களுமாக இருந்தாலும், எண்ணில் மிகவும் அதிகராக இருந்தார்கள். கொலம்பசு இரவில் அவர்கள் சேனைகளிலே போய் விழுந்து கலக்கினான். அவர்களிலே அனேகர் பீரங்கிகளின் குண்டுகளாலும், குதிரைச் சேவகர்கள் செய்யும் போரினாலும், நாய்கள் செய்யுங் கொடுமைகளாலும், இறந்தனர் அனேகர் கொலம்பசுவின் கையில் அகப்பட்டுக்கொண்டார்கள். மற்றவர்கள் பயந்து இவர்களைச்செயிப்பது அருமையென்று எண்ணிக்கொண்டு ஓடிப்போனார்கள்.

அதற்குப்பின்பு கொலம்பசு சிலமாதங்கள் வரையிலும் அத்தீவிலுள்ள தேசங்கள் அனைத்திலும்போய், அங்குள்ளவர்கள்யாவரையுஞ்செயித்து, அத்தேசங்கள் அனைத்தையும் தன் அதிகாரத்திற் குள்ளாக்கிக் கொண்டான். பின்னர், பொன் அதிகமாக இருக்கும் இடங்களில்வாசஞ்செய்பவர்களுள் பதினாலுவயதிற்கு மேற்பட்டவர்களில் ஒவ்வொருவரும் மூன்றுமாதத்திற்கு ஒருதரம் ஒவ்வொரு சதங்கை அளவு பொன்தூளும், மற்றைய இடங்களில் இருப்பவர்களில் மேற்சொல்லியவயதிற்கு மேற்பட்டஒவ்வொருவரும் மூன்று மாதத்திற்குஒருதரம் இருபத்தைந்து இருபத்தைந்து ராத்தல் பஞ்சும், கொடுக்கவேண்டுமென்று வரிவிதித்தான். கொலம்பசு, இஸ்பெயின் தேசத்தில் இருப்பவர்களில் அனேகர் தன்மீது பொறாமைகொண்டிருக்கிறார்களென்றும், முன்பு தன்னால் இங்கிருந்து அனுப்பப்பட்ட துன்மார்க்கர்கள் தன்மீது குற்றஞ் சார்த்தச்சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார்களென்றும், புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட இத்தேசங்களுடைய காரியங்களை எல்லாம் நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டவனாயிருக்கின்ற பான்சிகா (Fonseca) என்பவன் யாதுகாரணத்தினாலேயோ தன்னிடத்திலே பகைமைகொ

ண்டு தனக்கு விரோதிகளாயிருக்கிறவர்கள் தன்மீது சொ
ல்லுகின்ற குற்றங்களையெல்லாங் கேட்டுக்கொண்டு வரு
கிறானென்றும் அறிந்து, இவர்கள் பெர்ட்டினாண்டுக்
கும் இசெபெல்லாளுக்குந் தன்மீது வெறுப்புண்டாகச்
செய்வார்களென்று எண்ணி, தான் பொன்னை அதிகமா
கச் சம்பாதித்தால் அவ்வெறுப்பு நீங்கித் தன்பகைவர்
சொல்லுங் கோட்களைக்கேளாமல் தன்னிடத்திலே நம்பி
க்கைகொண்டு இன்னும் அனேகபுதியதேசங்களைக் கண்
டுபிடிக்கத் தன்னை அனுப்புவார்களென்று நிச்சயித்துக்
கொண்டு, மேற்சொல்லிய வரியை அவ்வளவுவிளாவில் ஏற்
படுத்தி, அவற்றை விதித்தகாலங்களிலே செலுத்தும்ப
டிச் சனங்களை நிர்த்தாக்ஷிணியமாக நடத்தினான்.

இதுவரையிலும் யாதொரு வருத்தமும் இல்லாமற்
சுகமாகவாழ்ந்து கொண்டுவந்த அத்தேசத்தார்கள், இவ்
வரியைச் செலுத்துவதற்காக அதிகமாகச் சிரமப்பிரயா
சப்படவேண்டியிருப்பதைக் குறித்து மனவருத்தமுற்
று, பெருந்தீனிக்காரராயிருக்கின்ற இந்த இஸ்பெயின்
தேசத்தார்களுக்கு ஆகாரங் கிடையாமலிருக்கும்படி செ
ய்தால் இறந்துவிடுவார்களென்று கருதி, உழுது பயிர்
செய்யாமலும் வளர்ந்திருந்த பயிர்கள் யாவையும் வேரு
டன் பிடுங்கி எறிந்துவிட்டு, மலைச்சந்துகளிலும் காடு
களிலும் போய் ஒளித்துக்கொண்டார்கள். இவைகளினால்
இஸ்பெயின் தேசத்தார்களுக்குச் சிறிது வருத்தமுண்டா
யினும், அந்தச்சமயத்திலே இஸ்பெயின் தேசத்திலிரு
ந்துபோசனசாமக்கிரிகள்வந்தமையாலும், தங்கள் புத்தி
யுத்திகளாலே தங்களுக்கு வேண்டியவைகளைச் சம்பா
தித்துக் கொண்டமையாலும், அத்தேசத்தார்களுடைய
எண்ணம் நிறைவேறாமற் போய்விட்டது. மலைச்சந்துக
ளிலுங்காடுகளிலும் ஒளித்துக்கொண்டிருந்தவர்கள் ஆகா
ரமில்லாமல் பட்டினியாய்க் கிடந்தமையால், வியாதிமுத

லிய இடுக்கண்களை அடைந்து மூன்றிலொரு பங்கானவர்கள் இறந்தனர்.

இவ்விதமாகக்கொலம்பசு இஸ்பானியோலாவிலேபெர்ட்டிஞண்டு இசெபெல்லாள் என்பவர்களுடைய அரசாட்சியை நிலைபெறச் செய்துகொண்டிருக்க, இஸ்பெயின் தேசத்திலிருக்கின்ற அவனுடைய பகைஞர்கள் மிகவும் பொறாமைகொண்டு, கொலம்பசுவினுடைய புத்தியீனத்தாலுந் துன்மார்க்கத்தினாலும் புதியதேசங்களிலே போயிருக்கும் நம்முடையசனங்களுக்கு அநேக இடுக்கண்களும், புதியசமுத்திரங்களிலே கப்பலைநடத்துவதிலே அநேகஅபாயங்களும், இன்னும்பற்பலநஷ்டங்களும், உண்டாகின்றனவென்று பெர்ட்டிஞண்டோடும் இசெபெல்லாளோடுஞ் சொன்னார்கள். இவ்விருவர்களும் அவர்கள் சொன்னவைகளை நிச்சயமென்று நம்பிக்கொண்டு, கொலம்பசுவினுடைய செய்கைகளைக்குறித்து அறிந்து வரும்படித் தங்களிடத்திலிருக்கும் உத்தியோகஸ்தர்களில் ஒருவனாகிய அகாடோ (Aguado) என்பவனை இஸ்பானியோலாவுக்குப் போகச்சொன்னார்கள். சொன்னவுடனே அவன் இஸ்பெயின் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு இஸ்பானியோலாவுக்குப்போயினான். அங்கே போனபின்னர் அந்த அற்பன் இறுமாப்படைந்தவனாய், அவ்விடத்திலிருக்கின்ற கொலம்பசுவின் விரோதிகள் அவன்மீது சொன்னபொய்களெல்லாவற்றையும் அங்கீகரித்துக் கொண்டதுமன்றி, அத்தேசத்திலே போயிருக்குந் தங்கள் சனங்களையெல்லாங்கொலம்பசுவுக்குக்கீழ்ப்பணிய ஒட்டாமற்செய்யத்தொடங்கினான். இவற்றையெல்லாங் கொலம்பசு தெரிந்துகொண்டு இனி இவ்விடத்திலிருப்பது நன்மை அன்றென்றுநினைத்து, அங்கேதனக்குப்பதிலாகஇருந்துதான் செய்துகொண்டுவரும் வேலையைநடத்திவரும்படித் தன் சகோதரனாகிய பர்த்தலமியூ என்பவனை ஏற்படுத்தி,

நியாயாதிபதி உத்தியோகத்தைநடத்திவரும்படி பிரான்சிசுரோல்டன் (Francis Roldan) என்பவனை நியமித்து, அதற்குமேல் (௧௪௯௬ஷு) இஸ்பெயின் தேசத்திற்குப் போகப்புறப்பட்டான்.

புறப்பட்டவன் இதுவரையிலும் போய்க்கொண்டிருந்தமார்க்கங்களைவிட்டு வேறுமார்க்கமாகப்போகவேண்டுமென்றுகருதினான். அப்படிக்கருதினவன் வடதிசைமார்க்கமாகப் போவானானால் மேல்காற்றினுதவியை அடைந்தியாதொரு வருத்தமும் இல்லாமற் சீக்கிரத்திலே இஸ்பெயின் தேசத்திற்குப் போய்ச்சேர்வான். அம்மார்க்கமாகப்போகாமற் கிழக்குமார்க்கமாகப்போனான். போகையிலேகீழ்காற்றில் அகப்பட்டுப்பூமியைமூன்றுமாதங்கள்வரையிலுங் காணாமல் அனேக இடையூறுகளை அடைந்தான். அப்பொழுது கொலம்பசு தான்கொண்டுவந்த போசனச்சாமக்கிரிகளில் மிகுதியுஞ்செலவாய்ப்போய்ச்சிறிதுமாத்திரம் இருக்கக்கண்டு, அவைகளில் ஒவ்வொருவனுக்கு நாளொன்றிற்கு (௫) பலம் கொடுத்துக்கொண்டுந்தானும் ஐந்து பலம் புசித்துக்கொண்டும்வந்தான். இதனாலே அக்கப்பலில் இருந்த இஸ்பெயின் தேசத்தார்களிலே அனேகர்கொலம்பசுவைநோக்கி, நாம் அப்புதியதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த மனிதர்களைச் சமுத்திரத்திலேதள்ளிக் கொன்றுவிடுவோமானால் அவர்கள் புசிப்பவைகளும் நமக்கே உதவுமென்றுசொல்லினார்கள். அப்படிச்சொன்னவர்களைக் கொலம்பசு கண்டித்து, கப்பல்களைச் சீக்கிரமாக நடத்திக்கொண்டு தெய்வகிருபையினாலே இஸ்பெயின் தேசத்திற்குப்போய்ச்சேர்ந்தான்.

சேர்ந்த உடனே கொலம்பசு பெர்ட்டினண்டையும் இசெபெல்லாளையுங் கண்டான். கண்டபோது அவர்கள்

அவன் கொண்டுவந்த பொன் முத்துப் பஞ்சு முதலிய வைகளைக் கண்டு, அப்புதியதேசத்தின் காரியங்களிலே அக்கிரமமாக நடக்கிறானென்று அவன்மீது அவன் விரோதிகள் சொன்னவைகள் அனைத்தும் பொய்யென்று எண்ணி, அவர்கள் வெட்கும்படி அவனுக்கு அதிகமரியாதைகள் செய்தனர். பின்பு அவன் அரசனையும் அரசியையும் நோக்கி, இஸ்பானியோலா முழுவதையும் உங்கள் அரசிற்குள்ளாக்கி அதிகமாகப்பொருள் வரும்வழியையும் ஏற்படுத்திப் பூமியிலே பொற்கனிகள் இருக்கும் அநேக இடங்களையுங்கண்டுபிடித்தேன்; இதனால்இனித் தங்களுக்கும் இந்தஇஸ்பெயின் தேசத்தாரிக்கும் மிகுந்த நன்மைகள் உண்டாகுமென்று சொன்னான். இவைகளையெல்லாங் கேட்டுப்பெர்ட்டினண்டும் இசெபெல்லாளும்மிகுந்த திருப்தி அடைந்தவர்களாய், இஸ்பானியோலாவைப் பலப்படுத்தும்படி வேண்டியவைகளையெல்லாம் இவ்விடத்திலிருந்து அனுப்பவேண்டுமென்றும், பலகப்பல்களையும் வேண்டியசாமக்கிரிகளையுஞ் சித்தஞ்செய்து கொலம்பசை இன்னும் புதிதாய் அநேகதேசங்களைக் கண்டுபிடிக்கும்படி அனுப்பவேண்டுமென்றும், தங்களுக்குள்ளே ஆலோசித்துக்கொண்டு, கொலம்பசை நீர் இன்னும் புதிதாய் அநேகதேசங்களைக் கண்டு பிடிக்கும்படிப்போகவேண்டியதைக் குறித்தும், இஸ்பானியோலாவைப்பலப்படுத்த வேண்டியதைக் குறித்தும், நாங்கள் செய்யவேண்டியவைகள் என்னவென்று கேட்டார்கள். அதற்கு அவன், இன்னும்புதிதாய்ப் பற்பலதேசங்களைக் கண்டுபிடிப்பதற்காகச் செய்யவேண்டியவைகள் இவைகளென்று சொல்லிப் பின்பு, இஸ்பானியோலாவைப் பலப்படுத்தும்படி உழுது பயிர்செய்தல் பூமியிலிருந்து பொன்னெடுக்குதல் முதலியதொழில்கள் செய்வதற்கு ஆணும்பெண்ணுமாக இத்தனைபேர்களை அனுப்ப

வேண்டுமென்றும், அப்படி அனுப்பப்பட்டவர்களுக்கு இத்தனைவருஷம்வரையிலும் பொருளுதவிசெய்து வருவதுமன்றிப் படியுங் கொடுத்துக்கொண்டு வரவேண்டுமென்றும், சொல்லினான். இவன்சொன்னவைகளையெல்லாம் அரசனும் அரசியும் ஒத்துக்கொண்டார்கள். மேலும்கொலம்பசு, முன்பு அப்புதியதேசங்களுக்குஅனுப்பப்பட்டவர்களில் அநேகர்வியாதிப்பட்டு இறந்தமையாலே இப்பொழுது அநேகர் அவ்விடத்திற்குப்போகத்துணியமாட்டார்கள்; ஆதலால், இஸ்பெயின்தேசத்திலே பிறதேசங்களுக்கு அனுப்பும்படித் தீர்க்கப்பட்ட குற்றவாளிகளை அங்கே அனுப்பினால்நல்லதென்றும், கப்பலில்வேலைசெய்யும்படித் தீர்க்கப்பட்ட குற்றவாளிகளை அத்தேசத்திலே பொன் எடுக்கும்படி அனுப்பினாற் பொன்னை அதிகமாக எடுப்பிக்கலாமென்றும், சொல்லினான். அதையும் அரசனும் அரசியும் ஒத்துக்கொண்டு, அங்கே அனுப்பும்படித தங்கள் தேசத்திலே பற்பல இடங்களிலுள்ள குற்றவாளிகளை யெல்லாம் ஓரிடத்திலே சேர்ப்பித்தனர். அல்லாமலுந் தங்கள்தேசத்திலுள்ள நியாயாதிபதிகளுக்கெல்லாம் இனிக்குற்றவாளிகளாகத் தீர்க்கப்படுபவர்களையெல்லாம் அங்கு அனுப்பும்படிக் கட்டளையும் அனுப்பினார்கள். இவன்குற்றவாளிகளை அத்தேசங்களுக்கு அனுப்பும்படிக்கேட்டுக்கொண்டதும் அவர்கள் அதை ஒத்துக்கொண்டதும் மிகுந்த அறியாமையாயிருக்கின்றன. யாதொரு புதிய தேசத்திலே குடியேற்றப்படுபவர்கள், தங்களுக்குந் தங்களை அனுப்பினவர்களுக்கும் நன்மையுண்டாகும்படிப்பிரயாசப்படுபவர்களும் நன்னடக்கையுடையவர்களுமாக இருந்தாலன்றி அத்தேசஞ் சீர்படமாட்டாது. ஆதலால் துன்மார்க்கர்களாயிருக்கிற குற்றவாளிகளை அப்படிப்பட்ட இடங்களுக்கு அனுப்பும்படி நிச்சயிக்கலாகாது. இப்படிச்செய்ததினாலே பின்பு அநேககெடுதி

கள் உண்டாயின. இவ்வாறே யூரோப்புக்கண்டத்திலுள்ள இதரதேசத்தார்களுஞ் செய்தமையாலே பின்புபற்பலதுன்பங்களை அனுபவித்தார்கள்.

பெர்ட்டினண்டும் இசெபெல்லாளுந் தங்கள் ஏகபுத்திரனாகிய யுவராசனுக்கு விவாகஞ்செய்வித்ததைக்குறித்தும் தங்கள் இரண்டாவது குமாரத்திக்கு விவாகஞ்செய்வித்ததைக்குறித்தும் பொக்கஸத்திலே இருந்தபணம் மிகுதியுஞ் செலவாய்விட்டதினாலும், யாதொருகாரியத்தையுந் தீவரமாகச் செய்யும்வழக்கம் இஸ்பெயின் தேசத்தாருக்கு இல்லாமலிருந்ததினாலும், கொலம்பசுவின்பகைஞர்கள் அவனுடைய கருத்தின்படி எல்லாவற்றையுஞ்செய்ய ஒட்டாமல் மேற்சொல்லிய பான்சிகா என்பவனைக்கொண்டு அனேகதடைகள் செய்வித்துக்கொண்டுவந்ததினாலும், அரசனும் அரசியும் அவன்கருத்தின்படிச்சித்தஞ்செய்ய உத்தரவு செய்திருந்தும் இஸ்பானியோலாவுக்கு அனுப்ப (உ) கப்பல்களைச் சித்தஞ்செய்வதற்கு ஒருவருஷஞ்சென்றது; கொலம்பசு புதிதாய்வேறுதேசங்களைக் கண்டுபிடிக்கும்படிப் புறப்பட்டுப்போவதைக்குறித்து (சு) கப்பல்களைச்சித்தஞ் செய்வதற்குஇரண்டுவருஷங்கள் சென்றன; அந்தகப்பல்கள் ஆறும் மிகவுஞ்சிறியவைகளாக இருந்தன. அன்றியும், அவைகளில்ஏற்றப்பட்ட போசனசாமக்கிரிகள் முதலியவைகளும்அவன்செய்ய நினைத்திருக்கின்ற யாத்திரைக்குப் போதுமானவைகளல்ல.

அதற்குமேல் கொலம்பசு, இந்தியாதேசமானதுதான் கண்டுபிடித்த தீவுகளுக்குத் தென்மேற்கில் இருக்கின்றதென்றும், இங்கிருந்துபுறப்பட்டுக் கானெரித்தீவுகளுக்குப்போய், அங்கிருந்துகேப்புவெர்ட்டு (Cape Verde) என்னுந் தீவுகளுக்குப்போய், அதைவிட்டு நேர்தெற்

காகச்சமவரைமட்டுஞ்சென்று, பின்பு நேர் மேற்காகத்தி ரும்பி அங்கே போகவேண்டுமென்றும் நிச்சயித்துக்கொ ண்டு, அரசனிடத்தும் அரசியிடத்தும் உத்தரவுபெற்றுக் கொண்டு, (௧௪௲௯௱௮ மேமீ ௩௰௨) இஸ்பெயின்தேசத் தினின்று புறப்பட்டான். புறப்பட்டு முதலிற் காெனரித்தீ வுகளுக்குப்போய், அவ்விடத்திலேதான் கொண்டுவந்த ஆ றுகப்பல்களில் மூன்றுகப்பல்களை இஸ்பானியோலாவுக் கு அனுப்பிவிட்டு, மற்றைய மூன்று கப்பல்களோடு (ஜூலை மீ ௪௨) அத்தீவைவிட்டுப் புறப்பட்டுக் கேப்பு வெர்ட்டு என்னுந்தீவுக்குப்போய், அவ்விடத்திலிருந்து நேர்தெற் காகச்சென்று (ஷை மீ ௧௩௨) சமவரைக்கு (௫) பாகை தூர முள்ள இடத்திற்குப் போயினான். அங்கேபோன போது அதிக உஷ்ணத்தால் ஒயின (Wine) சாராயப் பீப்பாய்களிலே சிலவெடித்துப்போயின. மற்றைப்பீப் பாய்களிலிருந்த சாராயங்களெல்லாங் கசந்துபோயின. போசன சாமக்கிரிகளெல்லாங்கெட்டுப்போயின. இவை கள் இப்படியாய்விட்டதை அக்கப்பல்களிலிருந்த இஸ் பெயின்தேசத்துமனிதர்கள் கண்டு, தெற்காக இன்னுஞ் சிறிது தூரம்போவோமேயானால் அதிக உஷ்ணத்தினாலே கப்பல்களும் பற்றிக்கொள்ளுமென்று மிகவும்பயந்தார் கள். அப்பொழுது அதிகமழைபெய்தும் அந்த உஷ்ணம் அடங்கவில்லை. இதுவுமன்றி, அதிக பிரயாசத்தினாலும் நி த்திரையில்லாமையினாலுங் கொலம்பசுவுக்கு உக்கிரமான சுரநோயுண்டாயிற்று. இவைகளினாலே கொலம்பசு கரி ப்பீ என்னுந் தீவுகளுக்குப்போய் அவ்விடத்திலே தன் தேகத்தைச் சௌக்கியப்படுத்திக்கொள்வதுமன்றித் தங் களுக்கு வேண்டியவைகளையுஞ் சம்பாதித்துக் கொள் ளவேண்டுமென்று கருதித் தன் கப்பல்களை வடமேற்கா கத் திருப்பி நடத்திக்கொண்டுபோனான்.

அப்படி நடத்திக்கொண்டுபோகையில், (ஆகஷ்டு

ஞ கூ) கப்பலின்பாய்மரத்திணிடத்தில் இருந்த ஒருவ
ன் பூமி! பூமி! என்று மிகுந்த சந்தோஷத்தோடு கூவி
னதைக்கேட்டு, அக்கப்பலிலுள்ளயாவரும் மேல்தட்டின்
விளிம்பிற்போய்ப்பார்த்தனர். பார்க்கும்போது ஒருபெ
ரிய தீவுகாணப்பட்டது. அதற்கு கொலம்பசு டிரினிடா
ட்டு (Trinidad) என்று பெயரிட்டான். இந்தத்தீவானது
ஓரினொக்கோ (Orinoco) என்னும் நதி சமுத்திரத்திலே
சங்கமத்தை அடையும் இடத்திற்கு அருகிலிருக்கின்றது.
அந்நதியானது, அமெரிக்காக் கண்டத்திலுள்ள பலநதிகளி
லே மூன்றாந்தரமானதாகவாவது நான்காந்தரமானதா
கவாவது இருக்கினும் இதரகண்டங்களிலிருக்கும் நதிகள்
அனைத்திற்கும் மிகப்பெரியதாக இருக்கின்றது. அந்தந
தியின் சலஞ் சமுத்திரத்திலேசங்கமத்தை அடையுமிடத்து
உண்டாகும் ஓசையானது அதிகபயங்கரமானதாக இருக்
கின்றது. அந்நதியின்சலம் அச்சமுத்திரத்திலே அனேக
மயில் தூரம்வரையும் ஓடிக்கொண்டிருக்கின்றது. கொல
ம்பசு அந்நதியின் சலத்திற்கு எதிர்முகத்தில் அகப்பட்டுக்
கொண்டு மிகவும் வருத்தமுற்று, ஓர்சலசந்திக்குட்புகுந்
து அப்புறம்போய்விட்டான். அதற்குமேல்கொலம்பசு,
அந்நதியில் அவ்வளவு சலம்வருகிறதற்குக் காரணமென்ன
வென்று ஆலோசித்து முன்னே ஒருபெரியகண்டமிருக்
கவேண்டுமென்றும், அது தான் இதுவரையிலே கண்டு
பிடிக்கவேண்டுமென்று எண்ணி இருந்த இந்தியாதேசமா
கஇருக்கவேண்டுமென்றும் நினைத்துக்கொண்டு, பேரி
யா (Paria) கியூமேனு (Cumana) என்னுந்தேசங்களின்
சமுத்திரக்கரை ஓரமாகச்சென்று, அக்கரையிலுள்ள அ
னேக இடங்களில்இறங்கினான். அவ்விடங்களிலிருக்குமனி
தர்கள், தங்களிடத்திலுள்ள பொன் ஆபரணங்களையும்பெ
ரியமுத்துகளையும் இவர்களுக்குக்கொடுத்து இவர்களிடத்
திலே அவைகளுக்குப்பதிலாகச் சுவல்பவஸ்துகளைவாங்கி

க்கொண்டார்கள். அவர்கள், உருவத்திலுஞ் செய்கையிலும் இஸ்பானியோலாவிலுள்ளமனிதர்களை ஒத்தவர்களாயிருந்தாலும், விவேகத்திலுந் தைரியத்திலும் அவர்களிலும் அனேகபங்கு விசேஷித்தவர்களாயிருந்தார்கள். அன்றியும், அத்தேசங்கள் நீர்வளம்நிலவளமுள்ளவைகளாகவும், பலவகையானமிருகசாதிகளையும் பட்சியினங்களையும் பழவர்க்கங்களையும் உடையவைகளாகவும் இருந்தமையாலே சிங்காரவனங்களாக இருந்தன. இப்படியிருக்கையினால், கொலம்பசு அவைகள் ஆதிமனிதன்பாவத்திற் றள்ளாவதற்குமுன் வாசஞ்செய்துகொண்டிருந்த சிங்காரவனமாக இருக்கலாமென்று நினைத்தான். அதற்குமேல் கொலம்பசு, தன்னுடையகப்பல்கள் மிகவும் ஓட்டையாக இருந்தமையாலும், தனக்குவேண்டிய போசனசாமக்கிரிகள் அவ்விடத்தில் அகப்படாமலிருந்தமையாலும், தன் தேகத்திற்கு அசௌக்கியமுண்டாயிருந்தமையாலும், அவைகளுக்கு அப்புறம்போவதற்கு இயலாமல், இஸ்பானியோலாவுக்குப் போய்ச்சேரவேண்டுமென்று எண்ணி அங்கிருந்துபுறப்பட்டுவருகையில், வழியில் கியூபேகா (Cubagua) மார்க்காரிட்டா என்னும் இரண்டுதீவுகளைக்கண்டனன். அதற்குமேல் சிலநாள்களுக்குள்ளே இஸ்பானியோலாவிற்குப் போய்ச்சேர்ந்தான்.

அவன் போய்ச்சேர்வதற்குள்ளே அவ்விடத்துக்காரியங்களெல்லாந் தாறுமாறாக இருந்தன. அவன் அத்தீவைவிட்டுப்போனபின்பு, பர்த்தாலமியூ என்பவன் தன்தமயன்சொன்னபடி அத்தீவினுள் வேறோரிடத்திலே செண்டு டொமிங்கோ (St. Domingo) என்னும் ஒருநகரம் ஏற்படுத்தி, அதை இராஜதானியாக்கி இசெபெல்லாஎன்னும்நகரத்திலிருந்ததங்கள் தேசத்துமனிதர்களில் அனேகரை அவ்விடத்திற்கு அழைப்பித்துக் குடியேற்றினான். பின்பு அவன் சேனைகளைக்கூட்டிக்கொண்டு கொலம்பசு

போகாமலிருந்த இடங்களிலெல்லாம்போய், அவ்விடங்களிலுள்ளவர்கள் யாவரையும் வென்று தனக்குக் கீழ்ப்பணியச்செய்து அவர்களுக்குவரிகளையும் விதித்தான். அவர்களுக்கு அவ்வரிகளைச் செலுத்துவதைக்குறித்து மிகுந்த வருத்த முண்டாயிருந்தமையால், அவர்கள் யாவரும் ஒன்றாகச்சேர்ந்து அவனோடு எதிர்த்தார்கள். ஆயினும் அவன் அவர்களையெல்லாம் மிகவும் எளிதிலே அடக்கிவிட்டான். இவன்செய்கை இப்படியிருக்க, கொலம்பசு போகும்போது நியாயாதிபதியாக ஏற்படுத்திய பிரான்சிசு ரோல்டன் என்பவன் அத்தேசத்தைத் தன் வசமாக்கிக் கொள்ளவேண்டுமென்கிற பேராசையினால், கொலம்பசுவும் அவனுடைய இரண்டுசகோதரர்களும் இத்தேசத்தைத்தங்கள் சுவாதீனப்படுத்திக்கொள்ள எண்ணி உங்களையெல்லாந் தங்களுக்குக் கீழடங்கி நடக்கும்படி நிர்பந்தஞ்செய்துகொண்டும் அதிகமாக உழைக்கச்செய்து வயிற்றுக்குப் போதுமான ஆகாரமுங்கொடாமல் ஒடுக்கிக்கொண்டும் வருகிறார்களென்றும், ஜினோவாதேசத்து மூன்றுமனிதர்களுக்கு நீங்களெல்லாரும் இப்படிஅடங்கிநடப்பது மிகுந்தகுறைவான காரியமென்றும், அங்கிருக்கிற இஸ்பெயின் தேசத்துமனிதர்களில் அனேகருக்குப்போதித்து, அவர்களை எல்லாந் தன்வசமாக்கிக்கொண்டான். அதற்குமேல் பர்த்தாலமியூவின்மீது போர்க்குச்சென்று, அவன் வசத்திலிருக்கின்ற போசனசாமக்கிரிகள் எல்லாவற்றையுங் கொள்ளைகொள்ளவுஞ் செண்டு டொமிங்கோ என்னும் நகரத்தையுங் கைக்கொள்ளவும் ஆரம்பித்தான். கொலம்பசுவின் மற்றொருசகோதரனாகிய டான்டிகோ என்பவன் அப்போதுசெய்தபராக்கிரமத்தினாலே அவன் கருத்து நிறைவேறாமற்போயிற்று. பின்பு அவன் பர்த்தாலமியூவின் அதிகாரத்தின் கீழிருப்பதினின்று நீங்கித் தன்னோடுசேர்ந்திருக்கிறயாவ

ளையுங் கூட்டிக்கொண்டு, கிசாராகா ( Xaragua ) என்னும் இடத்திற்போய் அங்குத்தங்கியிருந்தான். அங்கிருந்துகொண்டு அத்தேசத்தார்களில் அனேகரையும் அவர்களுக்கு அடங்கிநடவாதபடிச் செய்வித்துக்கொண்டுவந்தான்.

கொலம்பசு இஸ்பானியோலாவுக்குவந்தபோது, அவ்விடத்துக்காரியங்கள் இப்படித்தாறுமாறாக இருக்கிறதையும், கானெரித்தீவுகளிலிருந்து தான் அனுப்பிய மூன்று கப்பல்களும் அதுவரையிலும் அங்குவந்து சேராமலிருந்ததையும், அறிந்துமிகவும் விசனப்பட்டான். அம்மூன்றுகப்பல்களில் இருந்தமாலுமிகள் கப்பலை நடத்துந்தொழிலிலே மிகுந்த பயிற்சி இல்லாதவர்களாதலால், அக்கப்பல்கள் நீரோட்டத்தில் அகப்பட்டுச்செண்டொமிங்கோவுக்கு மேற்கில் ( ௧௩௰ ) மயில்தூரம்போய், அங்கிருந்து ரோல்டன் என்பவன் போயிருந்த கிசாராகா என்னுமிடத்திற்கு வந்தன. அங்கிருந்த ரோல்டன் என்பவன் அக்கப்பல் அதிகாரிகளை வஞ்சித்து அவைகளிலிருந்தசிலரை அங்கே இறங்கிவிடும்படிச்செய்தனன். இறங்கிவிட்டவர்களுக்குப் போதித்து அவர்களைத் தன்னிடத்திலே வைத்துக்கொண்டான். அக்கப்பல் அதிகாரிகள் அவன்வஞ்சகத்தைத் தெரிந்துகொண்டு, உடனே அவ்விடத்தைவிட்டுப்புறப்பட்டுக் கொலம்பசுவந்து சேர்ந்ததற்குச் சிலநாள்களுக்குப்பின்பு செண்டொமிங்கோவிற்குவந்துசேர்ந்தார்கள். அக்கப்பல்கள் அங்குவந்து சேர்வதற்கு நெடுநாள்சென்றமையாலே அவைகளிலே இருந்தபோசனசாமக்கிரிகளிலே மிகுதியுஞ் செலவாய்விட்டன. ஆதலால் அவைகள்வந்துசேர்ந்தும் அவ்விடத்திலிருக்கும் இஸ்பெயின் தேசத்தார்களுக்கு மிகுந்த பிரயோசனமுண்டாயிருக்கவில்லை.

ரோல்டன் என்பவன் அனேகதுன்மார்க்கர்களைச்சேர்

த்துக்கொண்டு அதிகசுர்வமடைந்திருந்த போதிலும், கொலம்பசு அப்போது அவனையும் அவனோடுசேர்ந்திருந்தவர்களையுந்தண்டிக்கவிரும்பாமல், அவர்கள் எளிதிலேசமாதானப்படும்படிச்செய்தான். எப்படியென்றால்: கொலம்பசு தன்னிடத்திலே வருகிறவர்களையெல்லாம் மன்னிக்கிறேனென்றும், அப்படிவருகிறவர்களில் இஸ்பெயின் தேசத்திற்குப்போக விருப்பமுள்ளவர்களை அவ்விடத்திற்கு அனுப்பிவிடுகிறேனென்றும், ரோல்டனுககு அவன் முன்செய்துகொண்டிருந்த உத்தியோகத்தைத்தருகிறேனென்றும், அவன் தன்னைச்சேர்ந்தவர்களில் எவனுக்கு எதைச்செய்ய வேண்டுமென்றுகேட்டுக்கொள்ளுகிறானோ அவனுக்கு அதைச்செய்கிறேனென்றும், பிரசித்தஞ்செய்தனன். அதைக்கேட்டவுடனே தங்கள் தேசத்திற்குப் போகவிருப்பமுள்ள அனேகர்கொலம்பசுவினிடத்திற்கு வந்துசேர்ந்தார்கள். மேலும், ரோல்டனும் அவனைச்சேர்ந்தவர்களுங் கொலம்பசுவுக்கு ஐக்கியமானார்கள். இவ்வாறே, இரத்தஞ்சிந்தும்படியான காரியஞ்சிறிதும் உண்டாகாமல் அவ்விடத்துக் காரியங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தினான்.

பின்பு கொலம்பசு, தான்வாக்குத்தத்தஞ்செய்தபடி அக்கலகக்காரர்களுக்கு அத்தீவிலே பற்பல இடங்களிலே, பூமிகள்விட்டு, அப்பூமிகளுக்கு அருகிலிருக்கிற அத்தீவின்வாசிகளுக்கு அவர்கள்கொடுக்கவேண்டியவரிகளுக்குப்பதிலாக உழவாதிதொழில்செய்து இவர்களுக்குஉதவிசெய்யும்படி (கசாங்கு) கற்பித்தான். இப்படிப்பல இடங்களிலும் இஸ்பெயின் தேசத்தார்கள்பரவினபடியால் அத்தீவார்களுக்கு அனேகஇடுக்கண்கள் உண்டாயின. ரோல்டன்முதலியோர்கள் செய்தகலகங்களினாலே, கொலம்பசுவுக்குத் தன்னாலே முன்கண்டுபிடிக்கப்பட்ட அப்புதியதேசங்களுக்கு மறுபடியும் போய்ந

ன்றாய் ஆராட்ச்சிசெய்துவருவதற்குக் கூடாமற்போய்விட்டது. அதற்குமேல்கொலம்பசு தன்னாற்கூடிய திவிரத்தோடுசிலகப்பல்களைச்சித்தஞ்செய்து, அவைகளிலே ரோல்டனும் அவனைச்சேர்ந்தவர்களுஞ்செய்த கலகங்களைக் குறித்தும், அதனாலேதான் அப்போதுசெய்த யாத்திரையிற் கண்டுபிடித்த புதியதேசங்களுக்கு மறுபடியும் போகக்கூடாமையாயிருக்கிறதைக் குறித்தும், இனி அப்படிப்பட்ட கலகங்கள் உண்டாகாதபடிச்செய்யவேண்டியதைக்குறித்தும், எழுதிக்கொண்ட கடிதத்தோடு தான் அப்போதுசெய்த யாத்திரையிற் கண்டுபிடித்த தேசங்கள்முதலியவற்றின் சரித்திரத்தையும், தான்கண்டசமுத்திரக்கரைகளின் படங்களையும் அத்தேசங்களி லிருந்து கொண்டுவந்த பொன்னாபரணங்கள் முத்துகள் முதலியஅருமையான வஸ்துகளில் மாதிரியாகச் சிலவற்றையும், அரசனுக்கும் அரசிக்கும் அனுப்பினான் அக்கப்பல்களின்வழியாகத்தானே ரோல்டனென்பவனும் அவனைச்சார்ந்தவர்களும் நாங்கள் இவ்விடத்திலே யாதொருகலகமுஞ் செய்யாமற் கிரமமாகநடந்துகொண்டு வருகிறோமென்றும், கொலம்பசுவும்அவனுடைய சகோதரர்களுஞ்செய்யும் அநியாயமுங்கொடுமையும்வஞ்சனையுஞ்சொல்லிமுடியாதவையாயிருக்கின்றனவென்றும், அவர்கள்மீது அனேகம்பொய்களைக் கற்பித்து எழுதியகடிதங்களையும் அனுப்பினார்கள். கொலம்பசு எழுதிக் கொண்டகடிதத்தையும், ரோல்டன்முதலியோர் எழுதிக்கொண்டகடிதங்களையும் பெர்டிநாண்டும் இசெபெல்லாளும்படித்துப்பார்த்துக்கொலம்பசு எழுதிக்கொண்டவைகளெல்லாம் மெய்யல்லவென்றும், ரோல்டனும் அவனைச்சார்ந்தவர்களும் எழுதிக்கொண்டவைகள் மெய்யென்றும், எண்ணிக்கொண்டார்கள். இதனாலே கொலம்பசுவுக்குப்பற்பலகெடுதிகள்நேரிட்டன.

அவை அப்படி இருக்க: போர்த்துக்கல் தேசத்தார்கள் கொலம்பசு மேலுமேலுஞ்செய்துவருங் காரியங்களையெல்லாங் கேள்விப்பட்டு, அவன் தங்களைக்கேட்டுக்கொண்டபோது தாங்கள் அதை அலட்சியஞ்செய்ததைக்குறித்து மிகவும் மனஸ்தாபப்பட்டதுமன்றி, இனித்தங்களுக்கு நன்மையும் புகழ்ச்சியும் உண்டாகும்படி அப்படிப்பட்ட பெரியகாரியங்களைக்குறித்து முயற்சிசெய்யவேண்டுமென்று விருப்பங்கொண்டனர். அதிக ஆண்மையுள்ளவனாகிய இம்மானுவேல் ( Emanuel ) என்னும் அரசன் சிம்மாசனமேறினவுடனே, குட்ஹோப்பு ( Good Hope ) என்னும் முனைமார்க்கமாக இந்தியாவுக்கு எளிதாகப் போவதற்கு ஒருவழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நினைத்து, அவ்வழியைக் கண்டுபிடிக்கும்படி மூன்றுகப்பல்களைச் சித்தஞ்செய்து, நல்ல குடிப்பிறப்பும் நற்குண நற்செய்கைகளுமுள்ள வாஸ்கோ-டி-காமா (Vasco de Gama) என்பவனை அனுப்பினான். அம்மூன்று கப்பல்களும் மிகவுஞ் சிறியவைகளாக இருந்தமையால், அவன்செய்யும் அந்த அருமையான யாத்திரைக்குத் தகுந்தவைகளாக இருக்கவில்லை. அந்தக்காமா என்பவன் ( கசகளஎ௵ ஜூலை௴ ௮௨ ) லிஸ்பன் என்னும் நகரத்திலிருந்து புறப்பட்டு நேர்தெற்காகக் கப்பல்களை நடத்திக்கொண்டுபோயினான். இவன் புறப்பட்டகாலம் அப்பிரயாணத்திற்கு ஏற்றகாலமாயிராமையால், எதிர்காற்றில் அகப்பட்டுமிகவும் வருத்தமுற்றவனாய் ( நவம்பர்௴ ௨௦௳ ) குட்ஹோப்பு என்னும் முனையைச்சேர்ந்து, அங்கிருந்து தன்கப்பல்களைவடகிழக்குமுகமாகத் திருப்பி, ஆப்பிரிக்காக்கண்டத்தின் கடற்கரைஓரமாகப்போயினான். போகையில் அக்கரையிலுள்ள அனேகதேசங்களிலே இறங்கி, செனிகால் (Senegal) என்னும் நதிதொடங்கிச்சாங்குபார் (Zanguebar) என்னுந் தேசம்வரையிலும் வாசஞ் செய்யும்

மனிதர்கள் திருத்தமில்லாதவர்களாயும், முகக்குறிகளிலும் நடக்கையிலும் யூரோப்புக்கண்டத்தார்களுக்கு வேற்றுமையுள்ளவர்களாயும் இருக்கவும், அதற்கப்புறம் வாசஞ் செய்பவர்கள் திருத்தமுள்ளவர்களாயும், ஏஷியாக் கண்டத்தார்களைப்போல முகக்குறிகளுள்ளவர்களாயும், மகம்மதுமதஸ்தர்களாயும், பெரியவாணிகஞ் செய்பவர்களாயுமிருக்கவும், கண்டுகொண்டே மெலிண்டா ( Melinda ) என்னும் பட்டணத்திற்போய்த்தங்கினான். அப்பொழுது அங்கு இந்தியாதேசத்திலிருந்து அனேக கப்பல்கள் வந்திருந்தன. அந்தக்காமா என்பவன் அங்கு மகம்மதுமார்க்கத்தானாகிய ஒருமாலுமியைத் தனக்கு உதவிசெய்யும்படிக் கூட்டிக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு அதிகதைரியத்தோடு தன்கப்பல்களை நடத்திக்கொண்டு, ( கசகூஅ வரு மேயீ உஉ ) மலையாள ( Malabar ) சமுத்திரக்கரையிலுள்ள கல்லுக்கோட்டைக்கு ( Calecut ) வந்துசேர்ந்தான். சேர்ந்தபின்பு, அவன் இந்தியாதேசத்திலுள்ள செல்வப்பெருக்கத்தையும் பயிர்களின்பொலிவையும் நாகரிகத்தையுங்கண்டு மிகவும் மகிழ்வுற்று, அங்குச்சில இடங்களைப் பற்றிக்கொள்வதற்காயினும் வர்த்தகஞ்செய்வதற்காயினும் வேண்டிய திரவிய முதலிய சாதனங்கள் தன்னிடத்திலில்லாமையாலே, சீக்கிரத்திலேதானே இந்தியாவைவிட்டுப்புறப்பட்டுத்தன்கப்பல்களை நடத்திக்கொண்டு ( கசகூகூ வரு செப்டம்பர்மீ கசஉ ) லிஸ்பனென்னு நகரத்திற்குப்போய்ச்சேர்ந்தான்.

யூரோப்புக்கண்டத்தார்கள் பதினைந்தாம் நூற்றாண்டிலே தான் நூதனமாகத்தீவுகள் முதலியவைகளைக் கண்டுபிடிப்பதைக்குறித்து மிகுதியாக முயற்சிசெய்யத்தொடங்கினார்கள். போர்ட்சுகல் தேசத்தார்கள், ஆப்பிரிக்காக்கண்டத்துச் சமுத்திரக்கரையிலுள்ள நாந் என்னுமுனைக்குப் பன்னிரண்டு பாகைதூரத்திலுள்ள வெர்ட்டு என்னுமுனை

க்குப் போவதற்கு முன்பு (௫0) வருஷம் கடந்தார்கள். அதற்குச்சிலகாலத்திற்குப் பின்னர், அவர்கள் சமுவனையை கடந்து வெர்ட்டென்னு முனைகரு (சகூ) பாகைதூரத்திலிருக்கும் அக்கண்டத்தின்தென் முனையாகிய குடோப்புக்கு (௬0) வருஷத்திற்குள்ளாகவேபோயினார்கள். யூரோப்பியர்கள், தாங்கள் அதுவரையிலே அறிந்திருந்த பூபாகத்திற்கு ஏறக்குறைய சமமானதாக மேற்கிலுள்ள ஒருகண்டத்தைப் பதினைந்தாம் நூற்றாண்டின் கடைசியாயுள்ள (எ) வருஷங்களிலே தான் கண்டுபிடித்தனர். அன்றியும், அவ்வேழுவருஷங்களிலே தான் கிழக்கிலுள்ள பற்பல சமுத்திரங்களையும் பூமிகளையும் இந்தியாதேசத்திற்குச் சமுத்திரமார்க்கமாகப் போக ஒருவழியையுங் கண்டுபிடித்தனர். இவைகளைக் கண்டுபிடித்தவர்களுக்கு மிகுந்த புகழ்ச்சியும் மேன்மையும் உண்டாயிருக்கின்றதை அறிந்து அக்கண்டத்திலுள்ளவர்களில் அனேகர், தாங்களும் அப்படியே பேரும்பெருமையும் அடையவேண்டுமென்றெண்ணிப்புதிதாகத்தேசங்கள் முதலியவைகளைக் கண்டுபிடிப்பதைக்குறித்து முயற்சி செய்யத் தொடங்கினார்கள்.

அதுவரையிலே கொலம்பசு ஒருவனே புதியதேசங்களைக் கண்டுபிடிக்கும்படி இஸ்பெயின் தேசத்திலிருந்து புறப்பட்டவனாக இருந்தான். அப்படி இருக்க அந்த இஸ்பெயின் தேசத்திலுள்ள அனேகர், கொலம்பசு புறப்பட்டுப்போய்ப்பலதேசங்களைக்கண்டுபிடித்து அவைகளாலே தனக்குந்தன்னை அனுப்பினவர்களுக்கும் அதிகலாபம்உண்டாகும்படிச்செய்ததுபோல நாமும் புறப்பட்டுப்போய்ப் புதிதாகப் பற்பலதேசங்களைக்கண்டுபிடித்து அவ்விதமாகச் செய்யவேண்டுமென்று விருப்பங்கொண்டனர். பெர்ட்டினண்டும் இசெபெல்லாளும், இன்னும்பற்பல தேசங்களைக்கண்டு பிடிக்கும்படித் தங்கள் சொந்தப்பொருட்செலவினாலே கொலம்பசுவை அனுப்பிக்கொண்டுவரு

வதற்குப் பொக்கஸத்திலே திரவியம் அதிகமாக இல்லாம லிருந்ததைப்பற்றி அப்படியாத்திரைப் புறப்படவிரும்பு கிறவர்கள் அப்படியேசெய்யட்டுமென்றுவிரும்பினார்கள். கொலம்பசு செய்த இரண்டாம்யாத்திரையில் அவனுட னே கூடப்போன அலான்சோ-டெ-ஒஜீடா என்பவன் அப்படிப்புறப்பட்டவர்களில் முதல்வனாக இருந்தான். நிலைமையும் ஒழுக்கமும் உள்ளவனாக இருந்ததைப்பற்றி இவனுக்குச்செவில் ( Seville ) என்னும்பட்டணத்தில்வா சஞ்செய்கின்ற வணிகர்களிலே சிலர், அரசனுடையஉத்தர வைப் பெற்றுக் கொண்ட வுடனே நாங்கள் (ச) கப்பல்க ளைச் சித்தஞ்செய்து தருகிறோமென்று வாக்குத்தத்தஞ் செய்திருந்தார்கள். அதன்பின்பு அவன் அரசனிடத்தும் அரசியினிடத்தும் புதியதேசங்களைக் கண்டுபிடிக்கும்ப டித்தனக்கு உத்தரவுகொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டான். பாடெசாசு ( Badajos) என்னும் பட்டண த்துப்பிஷேப்பினுடைய போதனையினாலே, பெர்டினா ண்டும் இசெபெல்லாளும் (கசகூஉஆறு) த்திலே, கொலம் பசுவுக்கு எழுதிக்கொடுத்தவுடன்படிக்கையை அலட்சிய ஞ்செய்து, இதைக்குறித்து அவனுடனே ஒன்றும்யோசி யாமல், ஒஜீடாஎன்பவன் கேட்டுக்கொண்டபடி அவனு க்கு உத்தரவுகொடுத்தார்கள். அந்தப்பிஷேப்பானவன் தான்சம்பாதித்து வைத்திருந்த கொலம்பசுகடைசியிலே செய்தயாத்திராசரித்திரத்தை அவனுக்குக் கொடுத்தான் அவன் அதைவாங்கிக்கொண்டு அதிலெழுதியிருக்கிறபடி கொலம்பசுபோனமார்க்கத்திலேயேசென்று, அமரிக்காக் கண்டத்திலுள்ள பேரியா வென்னுந்தேசத்திற்குப்போயி னான். போய் அதுதொடங்கி அங்கங்கு வியாபாரஞ்செ ய்துகொண்டே வீலா என்னும்முனை (Cape de Vela) வ ரையுஞ்சென்று, இதுதான்கொலம்பசு கண்டு பிடித்த கண் டமென்று எண்ணிக்கொண்டு, அங்கிருந்து திரும்பி இவ்

பானியோலாவென்னுந் தீவிற்கு வந்து, அதைவிட்டுப் புறப்பட்டு (அக்டோபர்மீ) இஸ்பெயின் தேசத்திற்கு வந்துவிட்டான். இவன்சில புதியதேசங்களைக் கண்டுபிடித்தவனென்கிற வெறும் பெயர்மாத்திரஞ் சம்பாதித்துக்கொண்டானே அல்லாமல் இவனை அனுப்பினவர்களுக்கு அதிகலாபமுண்டாகும்படிச்செய்யவில்லை.

ஓஜீடா என்பவன் யாத்திரைசெய்தபோது, கப்பல்யாத்திரைசெய்வதிலும் மாலுமிசாஸ்திரத்திலும் வல்லவனாயிருந்த பிளாரொன்சு என்னும்பட்டணத்தானாகிய அமரிகோவெஸ்பூசி( Amerigo Vespucci) என்பவன் கூடப்போய்த் தானே முதல்வனாக இருந்து அந்தயாத்திரையின் காரியங்களையெல்லாம் நடத்திக்கொண்டு வந்தான். அந்த அமரிகோவெஸ்பூசி என்பவன் இஸ்பெயின் தேசத்திற்கு வந்தவுடனே அந்தயாத்திரையின் சரித்திரத்தைச் சாதுரியமாக எழுதிப் பிரசுரஞ் செய்தான். அதுவரையிலும் அப்புதிய கண்டத்தைக்குறித்து ஒருவரும் யாதொருபுத்தகத்தையும் எழுதிபபிரசித்தஞ் செய்திராமையால் யாவரும் இப்புத்தகத்தை ஆச்சரியத்தோடுபடித்துக்கொண்டுவந்தார்கள். அதனால் அக்கண்டததை இவன்தான் கண்டுபிடித்தவனென்று கருதிப்பலரும் இவன் பெயரையே அதற்கு வழங்கிக்கொண்டுவந்தார்கள். அதைப்பற்றி அக்கணடத்திற்கு அமரிக்கா (America) என்கிறபெயருண்டாயிற்று. பின்பு அந்த வஞ்சகனுடைய பெயராலுண்டான அப்பெயரைமாற்றுவது யாவர்க்கும் அசாத்தியமாக இருந்தது.

அதற்குமேல், கொலம்பசு செய்த கடைசியாத்திரையில் அவனோடுகூடப்போன அலான்சோ நீஞ்ஞோ என்பவனும் செவில்பட்டணத்தில் வர்த்தகஞ்செய்துகொண்டிருந்த கிருஷ்டபர் கிர்ரா ( Guerra )என்பவனும் அந்த வருஷத்திலே தானே ஒருகப்பலைச்சித்தஞ்செய்து கொண்

புறப்பட்டுப்போய்ப், புதிதாக யாதொருதேசத்தையுங்
கண்டுபிடியாமற் போனபோதிலும் அமரிக்காக் கண்டத்
திலுள்ள பெரியாதேசத்திலேசென்று வியாபாரஞ்செய்து
பொன்னையும் முத்தையும்அதிகமாகச் சம்பாதித்துக்கொ
ண்டு வந்தமையால் அனேகர் அப்புதிய தேசங்களுக்குப்
போக விருப்பங்கொண்டார்கள்.

அதற்குமேல், கொலம்பசு செய்தமுதல்யாத்திரையில்
அவனோடு கூடப் போய்வந்த வின்செண்டு யானெசுபின்
சன் என்பவன் (௪) கப்பல்களைச்சித்தஞ்செய்துகொண்
டு, (௧௫00 வருஷசனவரிமீ௴) புறப்பட்டு நேர்தெற்கா
கச்சென்றுசமரேகையைக்கடந்து, மாரஞோன் (Maragnon)
என்னும் நதி சமுத்திரத்திலே சங்கமத்தை அடையுமிடம்
வரையிலுஞ்சென்று திரும்பி வந்துவிட்டான். இப்படியா
த்திரை செய்தவர்கள் யாவரும் கொலம்புசுவைப் போல
வே அந்தத் தேசங்கள் இந்தியாதேசத்தோடு சேர்ந்த
வைகளாயிருக்கின்றனவென்றே நினைத்தார்கள்.

மேற்சொல்லியநதிக்கு அப்புறமிருக்குந்தேசங்களெ
ல்லாம் (௧௫00 வருஷ) த்திலே தானே கண்டுபிடிக்கப்பட்
டன. இஸ்பெயின்தேசத்தாருடைய செய்கை இப்படி
இருக்க, போர்ட்சுகல் தேசத்துஅரசன், காமா என்பவன்
இந்தியாதேசத்துக்குச் சமுத்திரமார்க்கமாகப் போகும்
வழியைக் கண்டுபிடித்ததைக்குறித்து மிகவும் மகிழ்ச்சி
அடைந்தவனாய், அத்தேசத்திற்குப்போய் வர்த்தகஞ் செ
ய்யவேண்டுமென்றும் அத்தேசத்தைத் தன் அரசிற்குள்
ளாக்கிக் கொள்ளவேண்டுமென்றுங்கருதி, சிலகப்பல்க
ளைச்சித்தஞ் செய்து, பெட்டுரோ ஆல்வாரசு கேப்பிரால்
(Pedro Alvarez Cabral) என்பவனை அத்தேசத்திற்கு
அனுப்பினான். அவன், ஆப்பிரிக்காக்கண்டத்தின் கடற்
கரையோரமாகப்போனால் எதிர்காற்றினாலே மிகவும் வரு
த்தப்படவேண்டியிருக்குமென்று நினைத்து அந்தக்கரை

டத்திற்கு மேற்கே அதிதூரமாகப்போய்க்கொண்டிருக்கையிலே, தென் அமெரிக்காவிலுள்ள இக்காலத்திலேபிரேசில் (Brazil) என்று சொல்லப்பட்ட மிகுந்த செழிப்பானதேசத்தைக் கண்டான். அது ஒருபெரியகண்டத்தின் ஒருபாகமாக இருக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு, அங்கே இறங்கி அதைத்தங்கள் அரசனுடைய அரசிற்குள்ளாக்கி; பின்பு அந்தச்செய்திகளையெல்லாம் எழுதித் தன் கப்பல்களில் ஒருகப்பலின்வழியாகத் தங்கள் அரசனுக்குத்தெரிவித்தான். கொலம்பசு, தானே தன்புத்தியுத்திகளைக்கொண்டு சிந்தித்துக்கொண்டுபோய் மிகவும் பிரயாசப்பட்டுக் கண்டுபிடித்த அமெரிக்காக்கண்டத்தைக் கேப்பிரால் என்பவன் இச்சாயத்தனங்களில்லாமற் கண்டுபிடித்தமையாலே, கொலம்பசு அக்கண்டத்தைக்கண்டுபிடியாவிட்டாலும், அவன்கண்டுபிடித்த வருஷத்திற்கு அடுத்தசிலவருஷங்களுக்குள்ளே கேப்பிரால் என்பவன் அக்கண்டத்தைத் தற்செயலாகக்கண்டு பிடிப்பானென்றே நினைககவேண்டும்.

இஸ்பெயின் தேசத்தாரும் போர்ட்சுகல் தேசத்தாரும் இவ்விதமாகப் புதியதேசங்களைக் கண்டுபிடிப்பதிலே மிகவும் முயற்சிசெய்துகொண்டிருந்தனர். இவை நிற்க: மேற்சொல்லிய ரோல்டனென்பவன் சமாதானப்பட்டபின்னரும் இஸ்பெயின் தேசத்திலிருந்துவந்திருப்பவர்களிலே அனேகர் கொலம்பசுவுக்குக் கீழ்ப்பணியாமற்கலகங்கள் செய்துகொண்டுவந்தமையால், அவனுக்கும் அவன் சகோதரர்களுக்கும் அவர்களோடுபோராடி அவர்களை அடக்கிக்கொண்டுவருவதே வேலையாக இருந்தது. இங்கு இப்படி இருக்க: முன்சென்டொமிங்கோவிலிருந்து கொலம்பசுவினாலே இஸ்பெயின்தேசத்திற்கு அனுப்பிவிடப்பட்ட துஷ்டர்கள், இடைவிடாமற்பெர்ட்டினண்டோடும் இசெபெல்லாளோடுங் கொலம்

புசு. அநீதியாகவும் ஒழுங்கில்லாமலும் நடக்கிறவனாயிருக்கிறதினாலே அவனைத் தண்டிக்கவேண்டுமென்று அவன்மீது கோட்சொல்லிக்கொண்டு வந்ததுமன்றி அவன் புத்திரர்களைக்காணும்போதெல்லாம் அவமரியாதைசெய்துகொண்டும் நிந்தித்துக்கொண்டும் வந்தார்கள்.

பெர்ட்டினண்டென்னும் அரசன், கொலம்புசுசெய்துகொண்டுவருங் காரியங்களினாலே இனிமேல் தனக்குந் தன்தேசத்தார்க்குந் தன் சந்ததியார்க்கும் உண்டாகும் நன்மைகளைக்குறித்துச்சற்றாயினும் யோசியாமல், அவன் தன்னைப் புதிதாகத் தேசங்களைக் கண்டுபிடிக்கும்படி அனுப்பினால் தான் புறப்பட்டுப்போய் அநேகதேசங்களைக்கண்டுபிடித்து அதிகமாகப் பொருள்வரும்படிச்செய்கிறேனென்று சொல்லிவிட்டுப்போய்ச் சிலதேசங்களைக் கண்டுபிடித்து, தன்னாலே கண்டுபிடிக்கப்பட்ட அத்தேசங்களிலேவரும் வரவுகளைத் தான்செய்தயாத்திரையின் செலவிற்காவதுசரிப்படும்படிச்செய்யத் திறமில்லாதவனாயும், அப்புதிய தேசங்களின்காரியங்களை ஒழுங்காக நடத்தத்தெரியாதவனாயும் இருக்கிறதினாலே, தங்கள் தேசத்துக்கு அதிக நஷ்டத்தை உண்டாக்கிக்கொண்டுவருகிறானென்று எண்ணினான். கொலம்புசுவின்மீது மிகுந்த அன்புள்ளவளாயிருந்த இசெபெல்லாளென்னும் அரசியும், அவனுடையபகைஞர்கள் சொல்லுஞ்சொற்களைக்கேட்டு, அவர்கள் சொல்பவைகளெல்லாம் மெய்யென்று எண்ணி அவன்மீதுவெறுப்படைந்தாள்.

அதற்குமேல் பெர்ட்டினண்டும் இசெபெல்லாளும் பிரான்சிசு-டீ-போவடில்லா (Francis de Bovadilla) என்பவனுக்கு, இஸ்பானியோலாவுக்குப்போய்க் கொலம்புசுவின்செய்கைகளைக் குறித்து விசாரணைசெய்யும்படியாகவும், அப்படி விசாரணைசெய்யுமிடத்து அவன் குற்றவாளியாகக் காணப்படுவானானால் அவனை நீக்கிவிட்டு

அவனுக்குப்பதிலாக இவனே அத்தீவுக்கு அதிகாரியா யிருக்கும்படியாகவும், உத்தரவுசெய்தார்கள். உத்தரவு செய்தபின்னர், போவடில்லா என்பவன் அரசனிடத் தும் அரசியினிடத்தும் விடைபெற்றுக்கொண்டு, இஸ் பெயின்தேசத்தைவிட்டுப்புறப்பட்டு, இஸ்பானியோலா வுக்குவந்துசேர்ந்து, அப்போது அங்கு ஆளுகையைச் சேர்ந்தகாரியங்களை ஒழுங்காகவேசெய்து கொண்டிருந்த கொலம்பசுவின் செய்கைகளைக்குறித்துஒன்றும்விசாரியா மல், அவனில்லாதசமயம்பார்த்துச்சென்று டொமிங்கோ என்னும்நகரத்திலிருந்த அவன்வீட்டையுஞ்சொத்துகளை யும் மறியல்செய்து, அங்குள்ளகோட்டைமுதலானவைக ளையுந்தன்வசப்படுத்திக்கொண்டு, அவனுமேலசிறைச்சாலை யிலே வைக்கப்பட்டிருந்தகுற்றவாளிகள்யாவரையும்விடு தலைசெய்துவிட்டு, அத்தீவிலுள்ளயாவருந்தன்அதிகாரத் திற்குட்பட்டு நடக்கக்கட்டளையிட்டான். அதற்குமேல் தன் அதிகாரத்திற்குக் கீழடங்கி உத்தரவுசொல்லும்படி பெர்டினண்டும் இசெபெல்லாளுந்தனக்கு எழுதிக்கொ டுத்த அதிகாரபத்திரிகையின் பிரதியைக்கொலம்பசுவினி டத்திற்கு அனுப்பி, அவனைத் தன்னிடத்திற்குவரும்படி உத்தரவுசெய்தான். கொலம்பசு அந்தப்பத்திரிகையைப் பார்த்தவுடனே, தான்மிகவும் அதிகமாகவருத்தப்பட்டு அளவற்ற நன்மைகளைச்செய்திருந்தும் அவைகளில் ஒன் றையாவதுஉணராமல் அரசனும்அரசியும்இப்படிச்செய் தார்களேயென்று மிகுந்த துயரமுற்றவனாய், அக்கட்ட ளைக்குக்கீழ்ப்படிந்து அவனிடத்திற்குவந்தான். வந்த விடத்திலே அந்தத்துன்மார்க்கன் கொலம்பசுவைத் தன க்குமுன்னே வரவொட்டாமற்செய்ததுமன்றி, விலங்கு பூட்டி இழுத்துக்கொண்டுபோய் ஒரு கப்பலில் ஏற்றும் படி உத்தரவுசெய்தான். அவன் அப்படிச் செய்வித்த பொழுதுங் கொலம்பசு கிஞ்சித்தாயினு மனங்கலங்கா

மல், தான் முன்செய்த அருமையான காரியங்களையெல்லாம் எண்ணிக்கொண்டு, அவைகளாலே திர்ப்தியைப் பொருந்தினவனாயிருந்தான். அவனுடையசகோதரர்கள் இருவர்க்கும் அப்படியே விலங்குபூட்டுவித்துத் தனித்தனியே வெவ்வேறாகப்பல்களில் ஏற்றுவித்தான். மேலும் அந்தக்கொடியோன் இஸ்பெயின்தேசத்திலிருந்து வந்து அங்குக்குடியேறியிருப்பவர்களிலே அனேகர்க்கும் அத்தீவிலுள்ள பழையகுடிகளிலே சிலர்க்கும் உத்தியோகங்கள்கொடுத்தும், பகுமதிகள்அளித்தும், இன்னும்அவர்களுக்குவேண்டிய நன்மைகளைச்செய்தும், அவர்களையெல்லாந் தன்னிடத்திலே பிரியமாயிருக்கும்படியாகச் செய்துகொண்டான். அதற்குமேல் அந்த அக்கிரமியானவன் அங்குள்ளவர்களை வரவழைத்துக் கொலம்பசுவின்செய்கைகள் எப்படிப்பட்டவையென்று விசாரணை செய்தவிடத்து, அவர்கள் அவன் விலங்குபூட்டத்தக்கவனென்று அவன்மீது பற்பலகுற்றங்களைச்சொல்லினார்கள். அவைகளையெல்லாங் கடிதத்திலெழுதி, அந்தக்கடிதத்தை அந்தக்கப்பற்காரர்கள் கையிற்கொடுத்து, இதையும் அம்மூவரையும் அரசனிடத்தும் அரசியினிடத்தும் ஒப்பிக்கக்கடவீர்களென்றுஉத்தரவுசெய்து, அக்கப்பல்களை இஸ்பெயின்தேசத்திற்கு அனுப்பிவிட்டான். அதன்பின்புபோவடில்லாவானவன், கொலம்பசு விஷயத்திலே தான் செய்தகொடுமைகளையும் அவன்செய்துகொண்டுவந்தநற்செய்கைகளையும் வெளிப்படுத்தாமலிருக்கும்பொருட்டு அங்குப்புதிதாகக்குடியேறியிருக்கும் இஸ்பெயின்தேசத்தார்களுடைய இஷ்டப்படியே நடந்துகொண்டுவந்ததுமன்றி, அவர்களுக்கு வேலைசெய்யும்படி அத்தேசத்துப் பழையகுடிகளைப்பகுத்துவிட்டான். அப்பழையகுடிகளை அப்படிச் செய்தது மிகுந்த அக்கிரமமாக இருந்தது. அவர்கள் அந்தக் குடிகளைப் பொன்னிருக்

கும்இடைங்களுக்கு மந்தை மந்தை யாகக்கூட்டிக்கொண்டு போய் அவர்கள்சத்திக்கு அதிகமாகப் பொன்னெடுக்கும் படிவருத்தப்படுத்தினார்கள். அதனாலே அக்குடிகள்மிகவு ம்நொந்து போயினார்கள். இங்கே இப்படியிருக்க: அக்க ப்பல்கள் சிறிது தூரம் போனபின்பு, கொலம்பசுஇருந் தகப்பலின் அதிகாரியாகிய அலான்சோ - டீ - வலீஜோ (Alonso de Valejo) என்பவன் கொலம்பசுவிற்குநேரிட் டஇந்தத்துக்கமானகாரியத்தைக் குறித்துமிகவு மனவருத் தமுற்றவனாய், அவன் அருகில்வந்து அவனைநோக்கி, உம க்கு அந்தத்துன்மார்க்கராலே பூட்டப்பட்டிருக்கும் இந்த விலங்கைக்கழற்றிவிடுகிறேனென்று கேட்டுக்கொண்டான். அதற்குக்கொலம்பசு, என்னுடைய ஆண்டவர்களுடைய உத்தரவின்படி இந்தவிலங்குகளை நான் அணிந்துகொண்ட டேன்; அவர்களுடைய மற்றையகட்டளைகளை நானெப் படி கைக்கொண்டு நடந்துவந்தேனோ அப்படியே இந் தக் கட்டளையையுங்கைக்கொண்டு நடந்துகொண்டதாக அவர்களுக்குத் தெரியவேண்டும், அவர்களுடைய உத்தர வினாலே பந்திக்கப்பட்டேன்; அவர்களுடைய உத்தரவி னாலேயே நான் அந்தப்பந்திப்பிலிருந்து நீங்கவேண்டும்; ஆதலால் அந்தவிலங்கைக்கழற்றக்கூடாதென்றான்.

கொலம்பசு (நவம்பர்மீ உஙவ) இஸ்பெயின் தேசத் திற்குப்போய்ச் சேர்ந்தான். அவன் விலங்கு பூட்டப்பட் டவனாக அவ்விடத்திற்குவந்து சேர்ந்தானென்று பெர்ட் டினாண்டும் இசெபெல்லாளும் கேள்விப்பட்டு, யூரோப் புக் கண்டத்தார்யாவர்க்கும் நன்மையான அனேகபெ ரியகாரியங்களையெல்லாஞ் செய்துவந்தகொலம்பசுவிற்கு இவ்விதமான அவமானஞ் செய்தார்களென்று யூரோப் புக் கண்டத்திலுள்ள அரசர்கள் முதலியோர்கள் கேள் விப்பட்டால் தங்களை அவமதிப்பார்களென்று அஞ்சிவெ ட்கமுற்றுக் கொலம்பசுவிற்குப் பூட்டியிருக்கும் விலங்

கை உடனேகழற்றி விடும்படி உத்தரவுசெய்து, அவன் தங்கள் சமூகத்திற்கு வருவதற்குத் தகுந்த ஆடைமுதலானவைகளை வாங்கிக்கொள்வதற்குச் சிறிது திரவியத்தையும் அனுப்பினார்கள். கொலம்பசு (டிசம்பர்மீ ௧௭௳) அரசனும் அரசியும் இருக்குமிடத்திற்குப்போய் அவர்கள் கால்களிலே விழுந்து எழுந்துமிருந்து துயரக்கடலிலே மூழ்கினவனாய்ச் சிறிது நேரம்வரையிலும் ஒன்றும் பேசத்தோன்றாமற் சும்மா இருந்துவிட்டான். பின்பு தன்மனதைத் திடப்படுத்திக்கொண்டு தனக்குப்பகைஞராயிருப்பவர்கள் தன்மீது சொன்னவைகளெல்லாம் உண்மை அல்லவென்று அனேக எதுக்களைக்கொண்டுமெய்ப்பித்தான். அதற்குமேல் பெர்ட்டினண்டும் இசெபெல்லாளும் மனஸ்தாபப்பட்டு அவனுக்கு அதிகமரியாதைகள்செய்து, உனக்குநேரிட்ட இந்த இடுக்கண்களெல்லாம் நாங்கள் அறிந்து செய்வித்தவைகள் அல்லவென்று சமாதானஞ் சொல்லினார்கள். அதற்குமேல், போவடில்லா என்பவனாலே செய்யப்பட்ட இந்தக் கொடுமைகளெல்லாந் தங்கள் உத்தரவினாலே செய்யப்பட்டவைகளென்று பிறர் நினையாமலிருக்கும்பொருட்டு, அவனை அந்த உத்தியோகத்தினின்று நீக்கிவிடவும் நிகலசு-டெ-ஓவாண்டோ (Nicholas de Oyando) என்பவனை அத்தீவிற்கு அதிகாரியாக அனுப்பவும் நிச்சயித்தார்கள். அப்படி நிச்சயித்தார்களே யல்லாமல் கொலம்பசுவிற்கு அத்தேசத்தின் ஆளுகை உத்தியோகத்தையுஞ் சுதந்தரத்தையுங் கொடுக்கவிரும்பவில்லை. அவன் அவ்வளவு பெரியகாரியங்களையெல்லாஞ் செய்யத்தக்க சத்திமானாயிருக்கிறானாலே சிலவேளைத் தங்களுடைய அதிகாரத்தைப்புரட்டிவிட விரும்புவானானால், பிரட்டிவிடுவானென்கிற அச்சத்தினாலே அவனுக்கு அந்த உத்தியோகத்தைக்கொடாமல் அவனைத்தங்களிடத்திலேயே வைத்துக்கொண்டார்கள்.

அரசனும் அரசியும் இவ்வாறு செய்துவிட்டதைக்கு றித்துக் கொலம்பசு மனஸ்தாபப்பட்டு, அவர்களுடைய நன்றியறியாமைக்கு அடையாளமாகத் தனக்குப்பூட்டி யிருந்த விலங்கைத்தான் எவ்விடங்களுக்குப்போகிறானோ அவ்விடங்களுக்கெல்லாம் எடுத்துக்கொண்டு போய்க்கொண்டும், வீட்டிலிருக்கும்போதெல்லாந் தன் அறையில்தனக்கு முன்பாகத் தொங்கக்கட்டிவைத்துக்கொண்டும் இருந்ததுமன்றி, தானிறந்துபோய்விட்டபின்பு அதையுந்தன்னுடனே கூடவைத்துப் புதைத்துவிடும்படிச் சொல்லியிருந்தான்.

கொலம்பசுவின் காரியங்கள் இப்படியிருக்க: அவன் முதலிற்செய்த இரண்டுயாத்திரைகளிலும் அவனோடேகூடப்போன ஜான்-டி-லே-கோசா ( John de la Cosa) என்பவனும், ரோடரீகோ-டீ-பாஸ்டைடாசு (Roderigo de Bastidas ) என்பவனும், (௧௫0௧ஆ ஜனவரியில்) இரண்டுகப்பல்களைச் சித்தஞ்செய்துகொண்டு புறப்பட்டுப் பேரியாதேசத்திற்குப்போய், அவ்விடத்தினின்று மேற்கிற்சென்று இப்பொழுது டயரா பர்மீ (Tierra Firmè )என்றுசொல்லப்படுந் தேசத்தைக் கண்டுபிடித்தார்கள். உடனே ஒஜீடாவும் அமரிகோ வெஸ்பூசியும் இரண்டாம் விசைப்புறப்பட்டுப் பாஸ்டைடாசு போயிருந்தது தெரியாமல் அவன்போன இடங்களுக்கெல்லாம் போயினர்கள். அப்படியாத்திரைசெய்ததில் பாஸ்டைடாசு அதிக திரவியஞ் சம்பாதித்துக்கொண்டு வந்தான். ஒஜீடா அவ்வளவு மிகுதியாகத்திரவியஞ்சம்பாதியாமல் திரும்பிவந்தான். இவ்விருவர்கள் செய்தயாத்திரைகளினாலே அமரிக்காக்கண்டத்தின் காரியங்களையெல்லாம் இஸ்பெயின் தேசத்தார்கள் நன்றாகத்தெரிந்துகொண்டார்கள். ஆதலாலே அந்த இருவர்செய்தயாத்திரைகளும் இஸ்பெயின் தேசத்தார்களுக்கு அதிகலாபமாக இருந்தவென்றே

சொல்லவேண்டும். இஸ்பானியோலாவிலே போவடில்லாவானவன் மேலும் மேலும் அதிகமாகத் துன்மார்க்கஞ் செய்துகொண்டு வருகிறானென்று அரசனும் அரசியுங் கேள்விப்பட்டு, இவர்கள் யாத்திரைசெய்துகொண்டு வருவதற்குள்ளாகவே தங்கள் செலவில் ( ௩௨ ) கப்பல்களைச் சித்தஞ்செய்து, அவைகளிலே இஸ்பானியோலாவுக்கு அதிகாரியாக நியமிக்கப்பட்ட ஒவாண்டோ என்பவனையும் அவ்விடத்திலே குடியேறும்படி (௨௫௦௦) மனிதர்களையும் ஏற்றி அத்தேசத்திற்கு அனுப்பினார்கள். அவர்கள் ( ௧௫௦௨௵ ) அத்தேசத்திற்போய்ச் சேர்ந்தார்கள். போனவுடனே ஒவாண்டோ என்பவன், அந்த அயோக்கியனை போவடில்லாவையும் கலகக்காரர்களாகிய ரோல்டன் முதலானவர்களையும் இஸ்பெயின் தேசத்திற்குப்போகும்படி கப்பலில் ஏற்றிவிட்டான். அதற்கு மேல், அங்குள்ள பழையகுடிகள் இதுமுதற்கொண்டு இங்குப் புதிய குடிகளாயிருக்கும் இஸ்பெயின் தேசத்தார்களுக்கு அடிமைகளாக இருக்கவேண்டியதில்லையென்றும், அவர்கள் தகுந்த கூலிகொடாவிட்டால் அவர்களிடத்தில் ஒருவனும் வேலைசெய்யவேண்டியதில்லையென்றுங் கட்டளையிட்டான். மேலும், அங்கிருக்கும் இஸ்பெயின் தேசத்தார்கள் அடங்கி நடக்கும்படிப்பல நிபந்தனைகள் செய்ததுமன்றி, அத்தேசத்திலே பற்பல இடங்களிலும் பொன் எடுப்பவர்கள் அப்பொன்னை ஓரிடத்திற்கொண்டுவந்து சேர்க்கும்படியாகவும், சேர்த்தபொன்னிலே பாதிமேல்வாரமாகக்கொடுத்துவிட்டுப் பாதியைக்குடிவாரமாகத் தாங்கள் பெற்றுக்கொள்ளும்படியாகவும் உத்தரவுசெய்தான்.

இந்த இஸ்பானியோலாவின் காரியங்கள் இவ்விதமாக இருக்க; அதைக் கண்டுபிடித்தவனாகிய கொலம்பசு தன் விஷயத்திலே அரசனும் அரசியுஞ் செய்த அநியாயத்

ஷைக்குறித்து மிகவும் வியசனமுற்றவளாய், (க்ளைவ்ருட்) தினுல் தனக்கு எழுதிக்கொடுத்த உடன்படிக்கையின்பிர காரம் தன்னுலே கண்டுபிடிக்கப்பட்ட தேசத்திலே தா ன் இதுவரையிலே செய்துகொண்டிருந்த உத்தியோகத் தைத் தனக்குத்தரும்படி பெர்ட்டினண்டையும் இசெ பெல்லாளையுங் கேட்டுக்கொண்டான். பெர்ட்டினண்டு என்பவன், கொலம்பசுவினுலேகண்டுபிடிக்கப்பட்ட தே சங்கள் பெரியதேசங்களாகவும் பொன் அதிகமாக உண் டாயிருக்கிற இடங்களாகவும் மிகுந்த செழிப்புள்ளவைக ளாகவும் இருப்பவைகளாதலால், அந்த உடன்படிக்கை யின்பிரகாரம் அவனுக்கே அத்தேசத்தின் ஆளுகை உத் தியோகத்தைக்கொடுப்போமானுல் அவன்பெரிய அதிகா ரத்தையும் அளவற்ற திரவியத்தையும் அடைவான், அத னுலே சிலவேளை அத்தேசங்களை நம்முடைய ஆளுகை யிலிருந்துபுரட்டிவிட்டாலும் புரட்டிவிடுவான்; என்று எ ண்ணித் தான் அதற்கு யாதோருத்தரவுஞ் சொல்லாமல் இருந்துவிட்டதுமன்றி, தன்மனைவியாகிய இசெபெல்லா ளுக்கும் அவ்வுத்தியோகத்தை அவனுக்கு கொடுத்தால் நமக்கேயொலலாங்கு நேரிட்டாலு நேரிடலாமென்றுபோ தித்தான். அதைக்கேட்டு அவளும் அவன்விஷயத்தில் உ பேக்ஷையாக இருந்துவிட்டாள்.

கொலம்பசு, தான் இன்னதைக்குறித்து இவர்களோடு போ ராடுவதினுலே யாதொருபயனும் உண்டாகமாட்டாதெ ன்று எண்ணிக்கொண்டு அதைக்குறித்துச்சிறிதுங் கலக் கமுறுமல், தான் நெடுநாளாக இந்தியாதேசத்தைக்கண்டு பிடிக்கவேண்டுமென்று எண்ணியிருந்த எண்ணத்தை நிறைவேறச் செய்யவேண்டுமென்றுகருதித் தான் செய்த யாத்திரைகளாலும், பாஸ்டைடாசு முதலானவர்கள் செய் தயாத்திராசரித்திரங்களைப் பார்த்ததினுலுந் தனக்குண் டானஞானத்தினுலே, அமரிக்காக்கண்டத்திற்கு அப்புறம்

அது தொடங்கி இந்தியாதேசம்வரையிலும் ஒரேகடலிருக்கவேண்டுமென்றும், அந்தக்கடலினிடத்துப் போவதற்கு அப்பொழுது டேரியன் ( Darien ) என்று பெயர்கூறப்பட்ட சிந்துசாகையினிடத்து ஒருஜலசந்தியாவது பூசந்தியாவது இருக்கவேண்டுமென்றும் எண்ணி, அவைகளினிடமாக இந்தியாவுக்குப்போகும் வழியைக்கண்டுபிடிக்கும்படி இன்னும் ஒருதரம்யாத்திரை செய்யவேண்டுமென்று விருப்பங்கொண்டு, தான்கொண்டகருத்தைப் பெர்ட்டினண்டுக்கும் இசெபெல்லாளுக்குந் தெரிவித்தான்.

போர்ட்சுகல்தேசத்திலிருந்து கேப்பிரால் என்பவன் புறப்பட்டுச் சிலகப்பல்களுடனே இந்தியாவிற்குப்போய் அளவற்றதிரவியஞ் சம்பாதித்துக்கொண்டுவந்தானென்றும், அந்தேசம் அதிகசெழிப்புந் திருத்தமும்-நாகரீகமும் உள்ளதாக இருக்கிறதென்றும், பெர்ட்டினண்டு கேள்விப்பட்டிருந்தமையாலே, கொலம்பசு சொல்லுகிறபடி மேற்காக இந்தியாவுக்குப்போவதற்கு ஒருவழியைக்கண்டுபிடித்தால் மிகவும் உபயோகமாக இருக்குமென்று நினைத்ததுமன்றி, இடைவிடாமல் உடன்படிக்கையின்படி நடப்பிக்கவேண்டுமென்று தன்னோடுந்தன்மனைவியோடும் போராடிக்கொண்டிருக்கின்ற இவன் தங்களைவிட்டுத் தொலைந்து போய்விட்டால் நல்லதென்றுங் கருதினான். அப்படிக்கருதிய பெர்ட்டினண்டு நானகு சிறிய கப்பல்களைச் சித்தஞ்செய்து கொலம்பசுவைப் பிரயாணப்படுத்தி அனுப்பினான். கொலம்பசு கப்பல்யாத்திரையில்மிகவுந் தேர்ந்தவனாயிருப்பதினாலே, தன்யாத்திரைக்குத்தகுந்தவைகள் அல்லாதவைகளாக இருக்கின்ற அச்சிறியகப்பல்கள் நான்கையும் நடத்திக்கொண்டுபோகத் துணிந்தான். அப்படிப்போகத் துணிந்த கொலம்பசு தன் சகோதரனாகிய பர்த்தாலமியூ என்பவனையும், தனக்குப்பின் தன் சரித்திரத்தை எழுதினவனுந் தன்னிரண்டாங் குமாரனுமா

கியபெரீட்டிருண்டென்பவனையும் அழைத்துக்கொண்டு,
(௧௫௱௨௵ மே௴ ௯௨) கேடிச் என்னும் பட்டணத்தி
லிருந்து புறப்பட்டு வழக்கப்படி காரெனித்தீவுகளுக்கு
ப்போனான். போனபின்பு, இங்கிருந்து நேராக அமரி
க்காக்கண்டத்திற்குப்போனால் தான்கொண்டுவந்த கப்
பல்களில் ஒன்றாவது தான் எண்ணிப்புறப்பட்ட யாத்தி
ரைக்குப் போதுமானதாயிராமையால் நன்மையாயிரா
தென்றும், இஸ்பானியோலாவுக்குப்போய்த் தன் கப்
பல்களில் ஒன்றைக்கொடுத்து ஒவாண்டோ என்பவனோ
டுகூடவந்த கப்பல்களிலே பெரிதாயிருப்பதாகிய ஒரு
கப்பலை அவனைக்கேட்டு வாங்கிக்கொண்டுபோனால் நன்
மையாயிருக்குமென்றுங் கருதி, அங்கிருந்துபுறப்பட்டு
இஸ்பானியோலாவிலுள்ள செண்டு டொமிங்கோ என்
னும் நகரத்திற்கு (ஜூன்௴ ௨௯) போய்ச்சேர்ந்தான்.
அப்போது ஒவாண்டோ என்பவனோடுகூட வந்த கப்
பல்களிலே பதினெட்டுக்கப்பல்கள் சரக்குகள் ஏற்றப்ப
ட்டு இஸ்பெயின் தேசத்திற்குப்போகச் சித்தமாயிருந்
தன. கொலம்பஸ் அங்கே சேர்ந்தவுடனே என்னிடத்தி
லிருக்கிற சிறிய கப்பல்களில் ஒன்றைவாங்கிக்கொண்டு உ
ம்மோடுகூடவந்த கப்பல்களிலே பெரியகப்பல் ஒன்றைத்
தரவேண்டுமென்று அத்தீவிற்கு அதிகாரியாக வந்திருக்
கும் ஒவாண்டோ என்பவனைக்கேட்டுக்கொண்டான். அ
தற்கு அவன் நான் அப்படிச்செய்யமாட்டேனென்றான்.
அதற்குமேல் சில குறிகளால் இரண்டு மூன்று நாள்களுக்
குள் பெருங்காற்றடிக்குமென்று தெரிந்துகொண்டு, அதி
ல் நின்றுந் தப்பும்படித் தன்கப்பல்கள் அங்கிருக்குஞ்சிறி
யகுடாக்கடலிலே தங்கியிருக்க வேண்டுமென்றெண்ணி,
ஒவாண்டோ என்பவனைத்தான் அக்கடலிலே தங்கியிருக்
கும்படி உத்தரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொ
ண்டதுமன்றி, இஸ்பெயின்தேசத்திற்குப்போகும்படிச்

சித்தஞ் செய்திருக்கின்ற கப்பல்களை இன்னும் இரண்டு மூன்று நாள்வரையும் நிறுத்திவைக்க வேண்டுமென்றுஞ் சொன்னான். ஒவாண்டோ என்பவன் இவன் சொன்னவைகள் அனைத்தையும் அலட்சியஞ்செய்து அந்தக்கப்பல்களை அனுப்பிவிட்டதுமன்றி, அக்கடலிற்போய் இருக்கக்கூடாதென்றுஞ் சொல்லிவிட்டான். மறுநாள் இராத்திரி பெருங்காற்றடித்தது. கொலம்பசுவுக்கு அது முன்பேதெரிந்திருந்தமையால் அதற்குத் தப்பித்துக் கொண்டான். இஸ்பெயின்தேசத்திற்குப்போகப் புறப்பட்ட பதினெட்டுக் கப்பல்களில் இரண்டு மூன்று தவிர மற்றவைகளெல்லாம் மூழ்கிப்போய்விட்டன. கொலம்பசுவை அவமானப்படுத்தினவனாகிய போவடில்லா என்பவனுங் கலகக்காரனாகிய ரோல்டன் முதலானவர்களுங் கடலிலே அமிழ்ந்து அழிந்தனர். அன்றியும் அவர்கள் அநியாயமாகச்சம்பாதித்த திரவியங்களுங் கடலில் அமிழ்ந்துவிட்டன. கொலம்பசுவின் சொத்துகள் இருந்த கப்பல் மூழ்கிப்போகாமல் தப்பினகப்பல்களில் ஒன்றாக இருந்தது. இப்படியாகக்கொலம்பசுவும் அவனுடைய சொத்துகளும் அழியாமலிருந்ததையும், அவன்சத்துருக்களும் அவர்களுடைய சொத்துகளும் அமிழ்ந்ததையுங் குறித்துக் கிரந்தகர்த்தர்கள் எல்லாரும், இவை பேரருளுடைய கடவுளின் செய்கையேயென்று சொல்லுகிறார்கள். இவற்றைக்குறித்துச்சிலமூடர்கள், கொலம்பசு தனக்குண்டாயிருந்த மந்திர சத்தியினாலே, தன்பகைஞர்களும் அவர்கள் உடைமைகளுங் கடலில் அமிழ்ந்து அழியும்படிச்செய்தானென்று சொல்லிக்கொண்டார்கள்.

அதற்குமேல் கொலம்பசு (ஞுலை கசுஉ) இஸ்பானியோலாவைவிட்டுப் புறப்பட்டுப்போய், ஆண்டியூராசு (Honduras) என்னுந் தேசத்திற்கு அருகிலிருக்கும் கிய ஆனையா (Guanaia) என்னுந்தீவைக்கண்டு அங்குத்

தங்கினான். அப்பொழுது அவ்விடத்திலே அமெரிக்காக்கண்டத்தில் இருந்து படகுகளின்மீது சிலர்வந்திருந்தார்கள். கொலம்பஸ் தான் இதுவரையிலுங்கண்ட புதியமனிதர்களிலும் அவர்கள் அதிகநாகரீகமுள்ளவர்களாக இருக்கக்கண்டு, அவர்களைப்பொன்னிருக்கும் இடம் எங்கே என்று கேட்டான். அதற்கு அவர்கள் மேற்குத்திசையிலுள்ள ஒரு தேசத்தைக்காண்பித்து, அவ்விடத்திலேபொன் அதிகமாக இருக்கிறதென்று சொன்னார்கள். யூகெட்டன் (Yucatan) என்னுந்தேசத்துக் கடற்கரை ஓரமாகப் போனானானால் அவர்கள் சொல்லியசெலவம்நிறைந்த மெக்சிகோ (Mexico) என்னுந் தேசத்திற்குப்போய்ச்சேர்வான். அப்படிப்போகாமல் தான் நேராகச்சிந்துசாகரையைநோக்கிக்கொண்டு போயினான். போகையிலே கிரோசியாசு வடியாசு (Gracias a Dios) என்னும் முனைதொடங்கி போர்ட்டோ பெல்லோ (Borto Bello) என்னுந்தேசம்வரையிலுள்ள அனேக தேசங்களைக் கண்டுகொண்டே [illegible]ப்போயினான். அச்சிந்துசாகைக்குட்சென்று, [illegible] என்னும் பூசந்தியினிடத்திற் போய்ச் சலசந்தியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நெடுந் தூரந்திரிந்து அலைந்தான். அப்படி அலைந்தும் அது அகப்படவில்லை. பின்பு அப்பூசந்தியில் இறங்கிப் பூமியில் [illegible] போய்ப்பார்த்தும் அந்தப் பூசந்தியின் மற்றொருபுறத்தைக் காணாமையால் அது பூசந்தி என்று அறியாமல் திரும்பிவிட்டான். திரும்பிவருகையில், அவ்விடத்திலுள்ள தேசங்களின் வளப்பத்தைக்கண்டுவியப்படைந்தவனாய், அத்தேசங்களில் ஒன்றாகிய பீலம் (Belem) என்னும் நதி அருகிலுள்ள விராகியா (Veragua) என்னுந்தேசத்திலே (கடுநோவுறு) தங்கினான். அங்குத் தன் சகோதரனையுந் தன்னோடுகூடவந்தவர்களிலே சிலரையும் நிறுத்திவிட்டுப்போகும்படி

நினைத்தான். அப்படி அவன் நினைத்துக்கொண்டிருக் கையில், அவனோடுகூடவந்தவர்களிலே சிலர் அத்தேசத் தாருக்கு விரோதம் உண்டாகும்படி நடந்தமையாலே, அவர்கள் இவர்களிலே சிலரைக்கொன்றுவிட்டு, மற்றவர் களையும் அவ்விடத்தைவிட்டுத் தூரத்திவிடத் தொடங்கி னார்கள்.

அன்றியும் அங்கு அடிக்கடி பெருங்காற்றடித்தமை யால் அவன்கொண்டுவந்தகப்பல்களில் ஒன்று அழிந்து போய்விட்டது. மற்றொன்று ஒன்றுக்கும் உதவாமற்போ யிவிட்டது. அல்லாமலும் அவனோடுகூடவந்தவர்கள் நெ டுந்தூரஞ்சுற்றி அலைந்தமையாலே சோர்வடைந்தவர்க ளாய் அவன் சொல்லுகிறபடி நடவாமல் மாறாக நடக்கத் தொடங்கினார்கள். கொலம்பசு இவ்வளவு வருத்தத்தை யுஞ் சகித்துக்கொண்டு, அழிந்துபோன கப்பல்போக உதவாமற் போனகப்பலையும் அங்கேயேவிட்டுவிட்டு, மற் றைய இரண்டு கப்பல்களையும் நடத்திக்கொண்டு இஸ்பா னியோலாவென்னுந் தீவைநோக்கிக்கொண்டுவந்தான். அதற்குச் சமீபமாகவருகையிற் பெருங்காற்றடித்தது. அதனால் அவ்விரண்டுகப்பல்களும் ஒன்றுடனொன்றுமோ தப்பட்டு, அங்குள்ள சமேக்கா என்னுந் தீவிற்கு அரு கிலே தள்ளிக்கொண்டு போகப்பட்டன. அப்பொழுது, கொலம்பசு அக்கப்பல்கள் சிறிதுநேரத்தில் மூழ்கிப் போகுமென்று அறிந்து, (கூன்மீ உசவ) அத்தீவின் கரையிலே தட்டும்படிச் செய்தான். அதற்குமேல் கொல ம்பசுவும் அவனோடுகூடவந்தவாகளுங் கரையில் இறங்கி அத்தீவிலே தங்கினார்கள். அங்குத்தங்கினபின்பு, அத்தீ விற்கு இஸ்பானியோலா என்னுந்தீவு அதிக தூரத்தில் இருக்கின்றமையால், இனிநாம் அவ்விடத்திற்காவதுபோ ய்ச் சேர்வது அசாத்தியமாக இருக்குமென்று எண்ணிக் கொண்டார்கள். அத்தீவிலுள்ளவர்கள் இவர்களைத் தேவர்

கள் என்று எண்ணி இவர்களுக்கு வேண்டியவைகள் எல்லாவற்றையுங்கொடுத்து உபசரித்துக் கொண்டுவந்தார்கள் அப்போது கொலம்பசு தன்னோடு கூடவந்தவர்களிலே சிலரை ஏற்றி இஸ்பானியோலாவுக்கு அனுப்பும்படி அத்தீவர்களிடத்திலிருந்து இரண்டு கெனொக்கள் என்னும் படகுகளைப்பெற்றுக்கொண்டான். பின்பு மெண்டெசு (Mendez) பீச்சை (Fieschi) என்னும் இருவர்களும் இப்படகுகளின்மீது ஏறிக்கொண்டு இஸ்பானியோலாவுக்குப்போய் நமக்குவேண்டிய உதவிகளைப்பெற்றுக்கொண்டுவருகிறோமென்றார்கள். அப்படிச்செய்யும்படி கொலம்பசு அவர்களுக்கு உத்தரவுகொடுத்தான் அவர்கள் அப்படகுகளின்மீது ஏறிக்கொண்டு புறப்பட்டு, வழியில்மிகவும் வருத்தப்பட்டவர்களாய்ப் பத்தாம்நாள் அச்சமேக்கா என்னுந்தீவிற்கு (௯௰) மயில் தூரத்திலிருக்கும் இஸ்பானியோலாவிற்குப்போய்ச் சேர்ந்து, தங்களுக்கு உதவிசெய்யும்படி ஓவாண்டோ என்பவனைக்கேட்டுக்கொண்டார்கள். அதற்குக்கல்நெஞ்சனாகிய அவன் எட்டுமாதம் வரையில் யாதொருத்தரவுஞ்சொல்லாமலிருந்துவிட்டான்.

அவ்விருவர்களும் அங்கு அப்படியிருக்க; சமேக்கா என்னுந் தீவில் கொலம்பசுவும் அவனோடு கூடவந்தவர்களும் மெண்டெசு பீச்சை என்பவர்கள் இஸ்பானியோலாவிற்குப் போய் நெடுநாளாயும் இன்னும்வராமையினாலே, போகும்போது கடலிலே மூழ்கிப்போயிருக்கலாமென்று துயரமுற்றுக் கொண்டிருக்கையில், (௧௫௦௪ ௵) கொலம்பசுவோடு கூடவந்தவர்களிலே அனேகர் அவனோடு மாறுபட்டு, அவன் அத்தேசத்தார்களிடத்தில் விலைக்குவாங்கிவைத்திருந்த படகுகளையெல்லாம் பறித்துக்கொண்டு, அத்தீவில் வேறொரு பாகத்திற்குப் போய்விட்டார்கள். அத்தீவர்கள், இவர்கள் நெடுநாளாக அங்கே தங்கிவிட்டபடியால் இவர்களுக்குப்

போசன சாமக்கிரிகள் கொடுப்பதிலே வெறுப்புற்றனர். இன்னுஞ் சிலநாள் அங்கிருப்பார்களானல், போசனசாமக்கிரிகளைச் சிறிதுங் கொடுக்கமாட்டார்கள்போலக்காணப்பட்டது. அதைக்கொலம்பசு அறிந்துகொண்டு, ககோளசாஸ்திரத்திலே தனக்குண்டாயிருக்கின்ற பாண்டித்தியத்தினலே சந்திர கிரகணம் இந்நாளில்வருமென்று தெரிந்துகொண்டு, அன்றுபகல் அத்தீவார்களிலே விசேஷித்தவர்களாயுள்ள சிலரைக்கூடி வரச்செய்து, அவர்களை நோக்கி நாங்கள் தேவதூதர்களாயிருப்பவர்கள்; நீங்கள் எங்களை அலட்சியஞ் செய்துகொண்டு வரத்தொடங்கினபடியால், கடவுள உங்களைத்தண்டிக்கப்போகிறர் என்பதற்கு அடையாளமாக இன்றுஇராத்திரி இத்தனைமணிநேரத்திற்குச் சந்திரன் பிரகாசியாதபடி அவனைஇரத்தமயமாகச்செய்ய இருக்கிறரென்று சொன்னன். அதைக்கேட்டு அவர்களிலே சிலர் ஆச்சரியப்பட்டார்கள். சிலர் அவன் சொன்னதை அலட்சியஞ் செய்துபோய்விட்டார்கள். அவன்சொன்னமணிநேரத்திலே சந்திரன் கொஞ்சங் குறைந்துமுழுமையும் இரத்தமயமாயிற்று. அதைக்கண்டு அவர்கள் எல்லாரும்பயந்து, இவர்களுக்கு வேண்டிய சாமக்கிரிகளையெல்லாந்தலையின்மேற்சுமந்துகொண்டுவந்து, கொலம்பசுவின் காலில் விழுந்து தங்களுக்கு ஒருதுன்பமுஞ்செய்யாதிருக்கும்படிக் கடவுளை வேண்டிக்கொள்ளச்சொல்லிக்கேட்டுக்கொண்டார்கள். அதற்குமேல் கொலம்பசு மனதிரங்கினவனைப்போல அப்படியே ஆகட்டும் என்றன். உடனே மறைப்பு நீங்கிச்சந்திரன் பிரகாசித்தது. அதுமுதற்கொண்டு அததேசத்தார்கள் கொலம்பசுவுக்கும் அவனேடுகூட வந்திருப்பவர்களுக்கும் வேண்டிய சாமக்கிரிகள் எல்லாவற்றையுங் கொடுத்துக்கொண்டுவந்தார்கள். கொலம்பசுவோடு விரோதப்பட்டு அத்தீவில் வேறிடத்திலே போயிருந்தவர்கள், அவனிடத்திலிருந்து

பறித்துககொண்டுபோன படகுகளின்மீது ஏறிக்கொண்டு இஸ்பானியோலாவிற்குப போகப்புறப்பட்டுச் சிறிது தூரம் போகையில், எதிர்காற்றிலும் நீரோட்டத்திலும் அகப்பட்டு இடர்ப்பட்டுத் தங்களுக்கு அவைகளை நடத்துவதிலே பயிற்சி இல்லாமல் இருந்தமையாலே திரும்பிக்கொண்டு கொலம்பசு இருக்கும் இடத்திற்குவந்துகொண்டிருக்கையில் ஒருகப்பலானது வருவதைககண்டு மகிழ்ச்சி அடைந்தவர்களானார்கள். இஸ்பானியோலாவில் இருக்கின்ற ஓவாண்டோ என்பவன், கொலம்பசுவும் அவனோடுகூடவந்தவர்களும் எவ்விதமாகச் சீவித்துக்கொண்டு இருக்கிறார்களென்று தெரிந்துகொண்டுவரும்படி, கொலம்பசுவின் பகைஞர்களில் ஒருவனாகிய எஸ்கோபார் (Escobar) என்பவனை ஒருகப்பலின்மீது ஏற்றி அனுப்பினான் அந்த எஸ்கோபார் என்பவன் அக்கப்பலை நடத்திக்கொண்டுவந்து அத்தீவிற்குச் சிறிது தூரத்திலேதானே நிறுத்திவிட்டு ஒரு படகின்மீது ஏறிக்கொண்டுவந்து, ஓவாண்டோ ஒப்புக்கு எழுதிக்கொடுத்த கடிதத்தைக் கொலம்பசுவின் இடத்திலேகொடுத்து, அதற்குப்பதிற்கடிதம் வாங்கிக்கொண்டு, தன் கப்பலைத்திருப்பி நடத்திக்கொண்டு இஸ்பானியோலாவுக்குப் போய்விட்டான். அந்த எஸ்கோபார் என்பவன்வந்து தங்களை அழைத்துக்கொண்டுபோகாமற் சும்மாப்போய்விட்டதைக் குறித்துக் கொலம்பசுவோடு கூடவந்திருப்பவர்கள் இனி நம்முடைய தேசத்திற்குப்போய்ச் சேர்வதற்கு எதுவுமில்லையென்று வருந்திக்கொண்டிருக்கையில், கொலம்பசு அவர்களைநோக்கி, இங்குவந்த எஸ்கோபார் என்பவன் கொண்டுவந்த கப்பல் நாமெல்லாரும் ஏறிப்போவதற்குப் போதாமையாய் இருப்பதினால், என்னோடுகூட வந்தவர்களிலே ஒருவரையும் இங்கேவிட்டுவிட்டு நான்வரமாட்டேனென்று திருப்பிவிட்டேனென்றும், ...

ன்பவனும் பீச்சைஎன்பவனும் இஸ்பானியோலாவிற்குப் போய்ச்சேர்ந்து, நமக்காகச்சிலகப்பல்களைச் சித்தஞ்செய்து கொண்டுவரக் காத்துக்கொண்டிருக்கிறார்கள், அக்கப்பல்கள் சித்தமான உடனே இவ்விடத்திற்குவந்து நம்மை எல்லாம் அழைத்துக்கொண்டுபோவார்களென்றுஞ் சொல்லினான். கொலம்பசு இப்படிச்சொன்னதைக்கேள்விப்பட்ட வுடனே அவனைவிட்டுப் பிரிந்திருந்தவர்கள் அனைவரும் அவனிடத்தில் வந்துசேர்ந்தார்கள்.

அதற்குச் சிலநாட்களுக்குப்பின்பு, மறுபடியும் அவர்கள் கலகஞ்செய்ய ஆரம்பித்தார்கள். அப்பொழுதுகொலம்பசு வியாதிப்பட்டுக்கொண்டு இருந்தமையால், அவன் சகோதரனாகிய பர்த்தாலமியூ என்பவன் அவர்களோடு எதிர்த்து, (மேமீ உருவ) அக்கலகக்காரர்களுக்குத் தலைவனாகஇருந்தவனைப் பிடித்துக்காவல்செய்தான். அதனாலேமற்றவர்கள் எல்லாரும் கொலம்பசுவுக்கு கீழ்ப்பணிந்து, அவன்சொற்படி நடக்கிறோமென்று சத்தியஞ்செய்தார்கள். இப்படியாகக்கொலம்பசுமுதலியோர்கள் அத்தீவில் ஒருவருஷம்வரையில் இருந்தனர். அதற்குமேல் தாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த கப்பல்களும் வந்துசேர்ந்தன சேர்ந்தவுடனே கொலம்பசுவும் அவனோடுகூட வந்தவர்களும் அக்கப்பல்களில் ஏறிக்கொண்டு, இஸ்பானியோலாவைச்சேர்ந்து செண்டுடொமிங்கோஎன்னும்நகரத்தில் இறங்கினார்கள். அங்கே இறங்கின பின்னர், ஒவாண்டோ என்பவன்கொலம்பசுவுக்குவஞ்சகமாக அதிகமரியாதைகள்செய்து தன்வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய், அவன் அத்தீவைவிட்டுப்போகுமளவும்வைத்துக்கொண்டிருந்தான். அல்லாமலும், ஒவாண்டோ என்பவன், கொலம்பசுவினாலே சமேக்கா என்னுந்தீவில் விலங்குபூட்டப்பட்டவனைக் கொண்டுவரப்பட்ட கலகக்காரர்களின் தலைவனுடையவிலங்கைக்கழற்றி

விட்டு, அவனை விட்டுவிடும்படி உத்தரவுசெய்தான். மேலும், கொலம்பசுவைச்சார்ந்தவனாய் இருககின்ற ஒவ்வொருவனையும் அவனவனுடைய செய்கையைக்குறித்து விசாரணைசெய்வேனென்றுபயமுறுத்தினான். அவன் இப்படிச்செய்துவந்ததைப்பற்றிக் கொலம்பசுவுக்கு அங்கிருப்பதற்கு இஷ்டம் இல்லாதிருந்தது. அதனாலே சீக்கிரத்திலேதானே இரண்டுகப்பல்களை அவனைக்கேட்டுவாங்கிக்கொண்டு, (செப்டம்பர்௴ ௧௨௳) அவ்விடத்தில் இருந்து புறப்பட்டு இஸ்பெயின்தேசத்தை நோக்கிக்கொண்டு போயினான். சிறிது தூரம்போகையிலேதானேஒருகப்பல்ஒன்றுக்கும் உதவாமற்போய்விட்டது. அதனால் அதை உடனே செண்டுடொமிங்கோ என்னும் நகரத்திற்குஅனுப்பிவிட்டான். மேலும் சிறிது தூரம்போகையில், காற்றில் அடிபட்டு மற்றொருகப்பலின் பாய்மரம் முறிந்து போய்விட்டது அப்பாய்மரத்திற்குப்பதிலாக ஒருமரத்தைக்கட்டி, மிகுந்த பிரயாசத்தோடு அக்கப்பலைநடத்திக்கொண்டு (௨௧00) மயில்கடந்து, (டிசம்பர்௴)இஸ்பெயின்தேசத்தைச்சேர்ந்து செண்டுலூக்காசு (St. Lucas) என்னும்பட்டணத்திலே இறங்கினான்

இறங்கின உடனே, தனக்கு இதுவரையிலும் உதவிசெய்துகொண்டுவந்த இசெபெல்லாள் இறந்துவிட்டாள் என்று கேள்விப்பட்டு, இனித்தான்சொல்வதைக் கேட்பவர்கள் ஒருவரும் இல்லையென்று எண்ணித் துயரக்கடலிலே மூழ்கினான். அங்கேதானே சிலநாள் இருந்து தன் உடம்பைச் சௌக்கியப்படுத்திக்கொண்டு, அதற்குமேல் அரசனிடத்திற்குப்போய்த் தன்னைவழியிலே வருத்தப்படுத்தினவர்களைத் தண்டிக்கும்படிக் கேட்டுக்கொண்டதுமன்றி, (௧௪௯௨ (வரு)) த்திலே தனக்கு எழுதிக்கொடுத்த உடன்படிக்கையிலே கண்டிருக்கிற பிரகாரம், அப்புதிய தேசங்களின் ஆளுகை அதிகாரத்தையும் சுதந்தரங்களை

யுந் தனக்குக்கொடுக்கும்படியாய் வாய்விசேஷமாகவும் கடிதமூலமாகவுங் கேட்டுக்கொண்டான். அதற்குப்பொட்டிருண்டு, நல்லவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டும் வீணான வாக்குத்தத்தங்களைச் செய்துகொண்டுங் காலத்தைப்போக்கிக்கொண்டுவந்தான். இந்தத் துயரதினாலும் இன்னுஞ்சில ஏதுக்களினாலும் கொலம்பஸ் தன் (௫௯) ஆம் வயதாகிய ( கி. பி. ௧௫௦௬ )—ல், வாலடோலிட்டு ( Valladolid ) என்னும்இடத்தில்தெய்வபத்தியிலே மாறாதவனாய்த் தேகவியோகத்தை அடைந்தான்.

---

அமெரிக்காக்கண்டத்தைக்

கண்டுபிடித்தவரைக்குறித்த

சரித்திரம்

**முற்றுப்பெற்றது.**

[illegible]